சிவமயம்

அகத்தியமுனிவர்

அருளிச்செய்த

# பரிபாஷைத்திரட்டு

T.18553

உ

சிவமயம்.

அகத்தியமுனிவர்

அருளிச்செய்த

# பரிபாஷைத்திரட்டு.

இஃது

மைலம்

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

டி. சாரதா புத்தகசாலை

த. துரைசாமி முதலியார்

அவர்களால்

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

நெ. 23, பாளையப்பன் வீதி, சென்னை.

## வாத ரோக வித்வம்சனி.

இம்மருந்து மிகவும் சிரேஷ்டமானது. இதுஅநேக மூலிகைகளைச் சேர்த்து செய்யப்பட்ட மருந்து. உள்ளுக்கு உபயோகப்படுத்தும் பரம ஔஷதம். எந்த மருந்தினாலும் தீராத கைகால் கடிப்பு, தேகஉளைச்சல், நெஞ்சு விலாப்பக்கங்களில்நோய், கைகால் கணுக்களின் பிடிப்பு, வீக்கம், கைகால்முடக்கு, மார்புநோய், இடுப்புவலி, பிடரிவலி, பக்சசூலை, தலைநோய், ஒற்றைத்தலை நோய், மூட்டுகளின்வீக்கம், திமிர்வாய்வு, கழுத்துநோய், ஸ்திரீகளுக்கு சூதக சம்பந்தத்தால் உண்டாகும் இடுப்புவலி, அடிக்கடி பீஜம் வீங்கி உபத்திரவிக்கும் அண்டவாயு, மலஜலக்கட்டு முதலிய அநேகவிதமான வாதரோகங்களையும் இந்த சிரேஷ்ட மருந்து தடையி நீக்கிச்சந்தோஷிப்பிக்கும். நல்ல ஜீரண சக்தியை உண்டாக்கும். இம்மருந்தை ஒவ்வொருவரும் 5-நாட்கள்சேவிப்பார்களானல் இரண்டு வருஷத்திற்கு நோயேவராது. இந்த ஔஷதம் பலவித நோய்களையும்பரிகரிக்கும் குணமுடையது. விவரம் பத்திய நோட்டீசில் காணலாம்.

இரண்டுவிதமருந்துகளடங்கிய செட் 1-க்கு ரூ. 2-0-0

## ஸ்வாஸாந்தக சிந்தாமணி.

இந்நோய்க்கு மூக்கிய காரணமாயுள்ள கபத்தைச் சங்கரிப்பதில் இம்மருந்து பிரசித்தி பெற்றது. ஸ்வாஸகாஸமுடையரோகிகள், அதிக அவஸ்தையுற்று கண் கை கால்களை அசைக்கமுடியாமல், பிராணன்போவதுபோல் பரிதாப நிலைமையில் இருக்கும் சமயங்களில், நமது ஔஷதத்தில் அரைதோலாகொடுத்து கையில் கெடியாரத்தை வைத்துப்பார்க்கபத்தே நிமிஷத்தில் நோய் சவுக்கியப்பட்டுப் போவதைக் கண்டறியலாம். இவ்வற்புத மருந்தை எண்ணிக்கையாக 20-நாட்கள் காலை மாலை இருவேளையும்உட்கொண்டால் மார்பிலும், விலாப்பக்கங்களிலும்குத்துதல், திணறித்திணறி மூச்சுவிடுதல், வயிற்றுப்பிசம், கர் குர் என்னும் சப்தத்தோடுகூடிய மேல்சுவாசம், ஓயாத இருமல், கபம் விழுதல், துர்ப்பலத்தோடு கூடிய தீவிர நாடி, தலைவலி, ஆயாசம், குமட்டல், மூச்சடைப்பு, ஏக்கம்முதலியவை முழுதும்குணமாக்கி, திரும்பவும் இந்நோய் வரவொட்டாமல்தடுக்கும். பனிக்கர்லங்களிலோ அல்லது வாரம் மாதம் வருஷத்திற்கு ஒரு முறையோ வரும் இம்மாறல் நோய்க்கு முன் ஜாக்கிரதையோடு இவ்வவுஷதத்தைச் சேவித்தால் நன்மையடையலாம்.

இதன் விலை டப்பி ரூபா 2 0 0

---

டி. சாரதா புத்தகசாலை.

நெ. 23, பாளையப்பன் தெருவு, மின்ட் போஸ்டு, மதறாஸ்.

T.18553


| பொருள். | பக்கம். |
|---|---|
| அட்சரபலிதம் | ௬௧ |
| அண்டச்சுன்னம் | ௨௭ |
| அண்டரண்டநவகண்டம் | ௬௨ |
| அநாகதம் | ௫௫ |
| ஆக்கினை | ௫௭ |
| ஆகாரதீட்சை | ௭௬ |
| இந்நூலிற்சொல்லியவிவர | ௧௬ |
| இந்நூல்சித்தி | ௩௯ |
| இரண்டாங்காண்டம் | ௧௭ |
| இரசக்குளிகை | ௪௫ |
| இரசக்கட்டு | ௫௨ |
| இவர்களுக்கு வாதமுடியாதெனல் | ௮ |
| உலகவாதிகளின்குணம் | ௬௯ |
| ஐந்தாங்காண்டம் | ௬௪ |
| ஐம்மூலம் ஐங்காயம் | ௪௯ |
| ஐங்காயம் | ௫௨ |
| கங்கைசமாதிதீட்சை | ௬௮ |
| கணபதிதீட்சை | ௩௪ |
| கம்பியுப்பு பாரையுப்பு | ௭௮ |
| கருத்தயிலம் | ௪௬ |
| கல்லுப்பறிதல் | ௨௨ |
| கல்லுப்பு | ௫0 |
| கற்பக்கரு | ௭௨ |
| காயாதிகற்பம் | ௪௪ |
| காயாதிசுன்னம் | ௪௬ |
| கிரியை | ௧௨ |
| கிளிஞ்சிற்சுன்னம் | ௨௬ |
| கீழ்மூலசுத்தி | ௪௫ |
| குருமுடிக்கும்வகை | ௩0 |
| குருவண்டு விடக்கல்லு | ௫௮ |
| குருதூலம்பது-மதிவெண்பா - நந்தீசர்நிகண்டு | ௭0 |
| கேசாக்குளிகை | ௭௧ |
| கைபாகங்கள்செய்பாகங் | ௬௬ |
| கொல்லிவேர் | ௨௯ |
| சதகோடிகுளிகை சித்தர்தர்க்கம் | ௬௨ |
| சதாசிவபூசை | ௩௬ |
| சத்திதீட்சைவிவரம் | ௰௨ |
| சத்தியுப்பு-சிவவுப்பு | ௬௭ |
| சரக்குகளின்பெயர் | ௭ |
| சரியை-ஞானம் | ௧௨ |
| சல்லிவேர் | ௫௭ |
| சல்லிவேர் | ௭௯ |
| சவுக்காரம் | ௨௬ |
| சாதிவெடியுப்பின்பிறப்பி | ௧௯ |
| சாதி-தேயம் | ௬௩ |
| சாபம் | ௩௮ |
| சாபநிவர்த்தி | ௩௮ |
| சாபநீக்கல் | ௬௮ |
| சித்தர்கள்தர்க்கம் | ௬௧ |
| சிவச்சுன்னம் | ௩௰ |
| சுத்தகங்கை | [illegible]௯ |
| சுத்தசலம் | ௫௧ |
| சுப்பிரமணியதியானம் | [illegible] |
| சுவாதிட்டானம் | ௫௧ |
| சூரியமண்டலம்-சந்திரமண்டலம் | ௫௯ |
| திசைப்பூழ் | ௫௨ |
| தீட்சைநீரின்பெயர் | ௮ |
| துலாராசி | ௭௩ |
| தேசிநீர்-ஊசிநீர் | ௫௧ |
| தேசிநீர் | ௭௮ |
| தேயவளப்பம் | ௬௩ |
| நவசித்தர்வாக்கு | ௫௮ |
| நாதவிந்து-அண்டபிண்ட | ௩௩ |
| நாதவிந்து-அண்டபிண்ட | ௪௯ |
| நாலாங்காண்டம் | ௪௮ |
| நிராதாரதீட்சை | ௭௫ |
| நிர்க்குணதீட்சை | ௭௫ |
| நிலவுப்பு | ௧௬ |
| நின்மலதெரிசனம் | ௬௧ |
| நின்மலதீட்சை | ௭௫ |

| பொருள். | பக்கம். | பொருள். | பக்கம். |
|---|---|---|---|
| நூல் | ௧ | மச்சரேகைமுதலியன | ௭௩ |
| நூற்கோவை | ௫ | மணிபூரகம் | ௫௪ |
| நூற்றொகை | ௩௯ | மயேச்சுரபூசை | ௩௫ |
| பஞ்சசுன்னவிபரம் | ௧௨ | மருந்தின்பெயர் | ௬ |
| பஞ்சபட்சி | ௫௬ | மவுனபூசை | ௪௦ |
| பஞ்சாட்சரம் | ௧௬ | முதற்காண்டம் | ௧ |
| பஞ்சீகரணதீட்சை | ௩௩ | மும்மண்டலம் | ௫௯ |
| பதினெண்பேர் | ௫௮ | மூன்றுங்காண்டம் | ௩௩ |
| பத்தியம் | ௪௪ | மேன்மூலசுத்தி | ௪௪ |
| பந்தர்ஓமகுண்டம் | ௬௮ | மோட்சமடைய | ௧௦ |
| பரங்கிசவுக்காரம் | ௨௪ | யோகம் | ௧௧ |
| பரபூசைமுதலியன | ௭௭ | யோகநித்திரை | ௪௩ |
| பராபரதீட்சை | ௭௫ | ரவியுப்பு | ௨௦ |
| பாயிரம் | ௧ | ருத்ரபூசை | ௩௫ |
| பாறையுப்பு | ௨௦ | வயிரவபூசை | ௪௦ |
| பிரமவுப்பின்பெயர் | ௫ | வல்லாரைக்கற்பம் | ௪௧ |
| பிரமன்பூசை | ௩௪ | வழலை | ௧௮ |
| பிரமகற்பகம் | ௬௯ | வழலைச் சுன்னம் | ௨௭ |
| புத்திகெட்டவாதி | ௭௪ | வாதம் | ௧௧ |
| பூசை | ௪௦ | வாலைபூசை | ௪௨ |
| பூசைக்குறிப்பு | ௬௨ | விசுத்தி | ௫௬ |
| பூதவங்கிசவிவரம் | ௪ | விடக்கல் | ௭௧ |
| பூநீர்தீட்சை | ௨௫ | விஷ்ணுபூசை | ௩௫ |
| பூமிகாதபிண்டம் | ௬௬ | வெடியுப்புத்திராகவம் | ௨௯ |
| பூரணஏகாட்சரம் | ௬௦ | வெடியுப்புத்தீட்சை | ௨௫ |
| பூரணவழலை | ௬௫ | வெண்சாரைக்கற்பம் | ௪௪ |
| பூரணதீட்சை | ௭௫ | வெண்சாரையுப்பு | ௭௭ |


## பரிபாஷைத் திரட்டு

பொருளடக்க அகராதி

முற்றிற்று.

உ

கணபதி துணை.

அகத்தியமுனிவர்

அருளிச்செய்த

# பரிபாஷைத்திரட்டு.

## முதற்காண்டம்.

### காப்பு.

பரமஞானோதயத்துப் பரஞ்சுடருலகுக்கெல்லாம்
திரமதாவுதித்தஞான திவாகரன்றிருத்தாள்காப்பு
கரமதாம்வகாரயோக மறைப்புநூற்பாடையெல்லாம்
முருகவிழ்தமிழாய்செய்ய முருகனைங்கரர்தாள்காப்பே.

### பாயிரம்.

காப்பெனவுரைத்தவாதக் கணக்கொருலட்சம்தன்னைச்
சேர்த்ததுபாதியாகத் திரட்டியேநூலையெல்லாம்
நாற்பத்துமூன்றுமொன்று நடத்தியகாண்டந்தன்னைப்
பாழ்த்திடினைந்நாறுகப் பாடைநூல்படித்திட்டானே. (௧)

படிக்குமிந்நூலுக்கொப்பாம் பராபரமொன்றேயல்லால்
மடத்தினிலுள்ளசித்தர் வாதநூலிதற்கொவ்வாது
குடத்தினிறறீபம்போலுங் கூறுநற்சித்தர்பாடை
இடத்தபொன்மேருவுக்குத் தீபமாமிந்நூலன்றே. (௨)

இந்தநூலைந்துகாண்டத் தியம்பியகருவேதென்றால்
சந்தேகந்தீர்க்கவேண்டித் தமிழ்க்கவியைந்நூற்றுக்குள்
மந்திரவாதயோக மணிபஞ்சீகாணமார்க்கம்
சிந்தைசெய்வகாரபாட்டை தீட்சையுஞ்செப்புமாதோ. (௩)

### நூல்-வேறு.

செப்பியதோர் வகைஎன்னநூலின்மேலாங்-தீட்சையொடுகை
பாகஞ்சேர்மானங்கள் தப்பிலாக்குருமுடிக்குங் கருமானங்கள்-தத்
துவபஞ்சீகாணந்தாக்கணோக்கும்-ஒப்புவமையில்லாதமவுனக்கூறோ
டுறுதியுள்ளவட்டாங்கயோகக்கூறு-மெய்ப்புடையகாயகற்ப சமா
திக்கூறு-வெறியேறியோடுமணிவேதைக்கூறே. (௪)

கூறானகாலங்க ளிடைபாகங்கள்-குருசீடபக்குவங்கள் பிரமாணங்கள், பேறானசித்தியிலே யிருபத்தைஞ்சும்-பிரபலமானான் மறைவுச் சங்கேதகங்கள்-நீறாகவெளியிட்டுச் சொன்னவாற்றா-நிகண்டெனவுஞ்சித்தரிறை நினைவுள்வைத்தார்-ஆறாலுமறுநூறுங்கற்பநூறு-மாயிரமூ மூகநூறு மடக்கஞ்செய்யே. (ரு)

அடக்கமுள்ள சூத்திரங்களினுங்கேளு-வாயிரத்தோடிருநூறைந்நூற்றின்மேலொன்-றுடலுக்கு ளுயிர்மூப்பத்தொன் றெண்பத்தொன்-றுற்றபதினாறொன்று நானூற்றொன்று-கோதறுசீர்மதிவெண்பாக்கவிதைநறுகுறு நாலைம்பது மதுவோர்கோவையாகக் கிடைப்பதில்லைபூர்வதவப் பயனாலெய்துங்-கிடைத்திடினிந்நூல்பதனங் கெதிகொள்வோர்க்கே. (சு)

கெதியறியாப்பாவிகட்கிந் நூல்கிட்டாது-கிருபையுள்ளஞானிகட்கேயெய்துமெய்தும்-பதியறியநன்மவுன யோகிகட்கே-பரிசுத்தநூலிதுதான்பதனம்பண்ணும்-விதியில்லையென்றெண்ணாதே நூலைத்தேடு-விண்டுமிண்டுபேசாதே வேண்டாம்வேண்டாம் நிதிதருவாருபசார நீக்கிப்போடு-நினைவுகொண்டு சூத்திரத்தினினைவைப்பாரே. (எ)

நினைவிலே இருப்பதொன்று சொல்வதொன்று நெஞ்சிரக்கமில்லாதசித்தர்பாடை-கனவிலேகண்டபொருள் போலவப்பா காட்டினார்சூத்திரத்திற்கபடமாக,அனலிலே கிருமிசெல்லாவாறுபோலவவர்தமொழிசொல் வாருமில்லை பணியைநம்பியுழுதவன்தன்கதையைப்போலப்-பாடினார்மறைபொருளாய்ப் பாடினாரே. (அ)

பாடுகின்றசித்தர்தம் நூல்களெல்லாம்-பரிபாடை தெரியாதபாவியோர்க்குத்-தேடுகின்றபொருளழியச்சொன்னதல்லாற்றினையளவு பொன்காணச சொல்லவில்லை-வீடிழந்து மாடிழந்து உள்ளசெம்பொன் வேணதெல்லாந்தானிழந்து மெய்தோன்றாமல், நாடுறைந்துபோவதறகோ வெரியோர்சொல்வார் காணாமற்புதைத்தசொல்லைக்கண்டுதேறே. (கூ)

கண்டுகண்டுதேறினவ ரநேகருண்டு-கருவறிந்துசெய்தவர்களநேகருண்டு தொண்டுசெய்துபெற்றவர்க ளனேகருண்டு தொல்லையென்றுவிட்டவர்களநேகருண்டு விண்டுசொலா தடங்கினவ ரநேகருண்டுவிண்கரிசுட்டுத்திரிவா ரநேகருண்டு-பண்டுவிட்ட குறைகள்வந்து நேர்ந்ததானாற் பலிக்குமல்லால் வீணருக்கும்பாழதாமே. ()

பாழ்நெஞ்சேபெற்ற கருமிகளெல்லாரும் - பாரதனில் ரசவாத மறிவோமென்று-நாளிலொருவர்க்கொருவ ருறவுகூடி-நல

மில்லாச்சூத்திரங்கணன்றாய்ப்பேசி-நீள்புவியி லெலமையொப்பா றொருவருண்டோ-நீரறிந்த வித்தைவெகு நேத்திஎன்றுந்-தாள் பெறுநற்கும்பகநா மறிவோமென்றுஞ்-சாராயந்தனைக் குடித்துச் சண்ணுவாரே. (கக)

சண்ணினதேயல்லாமற் சூத்திரத்தின்-சமுசயங்கடாந்தெளி ந்து சார்ந்தோரில்லை-எண்ணிஎண்ணியவரவர் கடமதுபத்திக்கேற் றபடிபார்த்தலைந்திடைவதல்லால்-மண்ணிலெழுபிறப்பாகும் பிரம கற்பம்-வாலைவிட்டுக்கீழிறங்குங் கற்சுண்ணாம்பும்-விண்ணவர்க்கு மருந்தான சாரைப்பாம்பும்-வெளியில்வெளியானவர்க்கே விள்ளுந் தானே. (கஉ)

விள்ளுமேயாதியிலே யொளியுமாச்சு-வெந்தழலாமறுபிறப்பு நீலமாச்சு-கள்ளமதாயிறப்பிறப்புச் சிவப்புமாச்சு-காங்கைகொண்டு மறுபிறப்பு வெள்ளையாச்சு-துள்ளியதுபின்பிறப்பு மஞ்சளாச்சு-தோகைமயினிறமாச்சு மறுபிறப்பில்-உள்ளபடி கடைசியெழுபிறப் பிற்றானு-முயர்கோழிமுட்டைநிறம்படிகமாச்சே. (கங)

படிகமென்ற வண்டமெல்லாம் பிரமகற்பம்-பார்க்கவன்றாலா காசப்பிரமவிந்து-குடியிருக்குமிடந்தானே பூமியாகும்-கொண்டலி னாலவதரித்த குருதானையா-அடியறிந்தா-லதின்கீழேவானவன்னி-யக்கருவைக்கண்டவனே யருள்மெய்ஞ்ஞானி-திடமானவெழுபிறப் பாய் நின்றமூர்த்தி சித்திரையின்வெண்சாரைச் செழுந்தண் ணீரே. (கச)

தண்ணீருஞ் சுண்ணாம்புந்தானேசேர்ந்தாச் சகலசித்துங்கை வசமாத்தானேசிக்கும்-மண்ணாடும்வுண்ணாடுமொன்றுமானால் வாத மடாவெளியாச்சு மாய்கைபோச்சு-பெண்ணாரும் புருடருமே சேர் ந்தாரானாற்-பிள்ளையொன்று பொன்போலேபிறக்கலாச்சு-கண்ணா ரும்பிள்ளைபிதாசூரியன்றான்-கனலிலேபிறிந்தவகை காட்டினேனே.

காட்டினேன் கிருட்டிசெய்யப் பிரமனென்றுங்-கற்சுன்னம் பிரமகற்பக் கல்லாமொன்றும்-மூட்டினேமூலவிந்தயநேபூமி மூச் சில்லைபேச்சில்லை மவுனத்தாயாங்-கோட்டிகொள்ளுநான் முகத்தன் வயிற்றுக்குள்ளே-குடியிருந்தானுருத்திரனு மாலுங்கூடி ஆட்டு கிறவாட்டெல்லாம் பிரமசித்தே யவன்பிறப்புப் பூதவங்கிசத்தைக் கேளே. (கசு)

## பூதவங்கிச விபரம்.

அங்கசத்தில்வந்துதான் மண்ணேயாச்சு-தப்பூதமொருமூளை யங்குதிக்கலாச்சு-பங்கிட்டவம்மூளையே யிலைபூவாச்சு-பருமலரே

காய்பழமாம்விந்துமாச்சு-திங்களெனும் விந்ததுதான் ரசமுமாச்சு தெளிந்தரசந் தானுமுருண் டுதிரமாச்சு-சங்கையில்லா துடலாச் சங்குபிருமாச்சு தன்னுடலிஞ்சீவசெந்து கோடியாச்சே. (கள)

கோடியென்று லெத்தனையென்றுரைப்பேனையா-கூர்ந்துபார் நாலுவிதயோனிக்கூத்தை-ஆடிநின்ற மகாபூதவண்டவித்தா லப்ப னேபிறந்ததுகாண் பிண்டவிந்துத்-தேடிநின்றலேவானே னுனக்குள் ளேயே-செலங்குதித்தும்பனிநீர்போற் செயநீராச்சு-ஓடியலர்பிரம கற்புக்கற்சுண்ணும்புக்-குயர்ந்தசிவதீட்சை யிந்தச்செயநீராமே. ()

செயநீருஞ்சுண்ணும்புஞ் சேர்ந்துகொண்டாற் சிவசிவாகுரு வாச்சு சிவனுமாச்சு-மயமானமுப்பூவென் றுரைத்தசெய்தி வகை தெரியச் சொல்வதற்கென் வாய்கூசாதோ, தயவாகநானுரைத்தே னிந்தமட்டுஞ்-சமுசயங்கடீரவென்றுற் கடைக்காண்டம்பார்-உயி ரிருக்குமிடந்தானே பிரமகற்ப-முடலிருக்குமிடந்தானே பிண்ட வித்தே (கசு)

வித்துக்குணின்றரசமப்புமாச்சு விண்ணிழிந்துவந்தரசுமுப்பு மாச்சு-சத்தித்தவிடந்தனிலே எல்லாமுண்டு சாகாதகாருணேசவுக் காரந்தான்-புத்திக்குந்தோன்றுதேற் புலத்தியாகேள்-பொருளை யிந்தநூன்முடிவுக்கடைக்காண்டம்பார்-இத்தைவிட்டு நூல்பாடையா திப்புக்க-கெடுத்தபரிபாடையெல்லா மியம்புவேனே. (உ0)

இயம்புகின்றேன்சித்தர்தம் நூலின்பாடை-யிலக்குண்டோ கணக்குண்டோ ரசவாதத்தின்-சுயம்பென்றவுப்புவுக்குச் சித்த குடிச்சொன்ன ஒருபாடைஎல்லாஞ் சொல்வேன்மைந்தா பயம் பிடிக்குஞ்சித்தர்கடங் கோபத்தாலே-பழிவருமென்றரசன் மேலே சாரம்வைத்து-நயம்பெறவே சொல்லிவைத்தே னைந்நூற்றுள்ளே-நாதர்கடா மெனைக்கடிந்து நகைத்திட்டாரே. (உக)

நகைத்தவர்களாரென்றுற் புலத்தியாகே-ணவநாதர்சித்தர் முதற்பதினெண்பேரும் செகத்திலுறுமால்கனகஞ் சமலைசித்தர் திருமூலவர்க்கமற்றச் சித்தரெல்லாம் பகைத்தெங்கனூற்பாயைக் கருவையல்லாம்-பாரதனிற்கோள்சொல்லப் பண்போவையா அகத் தியமாமுனியுனக்குத் தெரியாதோதா-னைந்நூறுங் குரைவறவென் றருளினனே. (உஉ)

## நூற்கோவை.

அருளினவோரைந்நூறும் யாருக்கென்று-லகக்கடந்தமெய்ஞ் ஞானியருள் பெற்றோர்க்குக்-குருமுகமாய்க் கொடுப்பதல்லான் மற்றோர்கையிற்-கொடுத்தவர்க்கும் பெற்றவர்க்குஞ் சாபங்கூறிப் பெருமையுள்ளசித்தர்தமை வணங்கிப்போற்றிப்-பிரமன்றனுத் தாவுதன்னாலின்நூல் கருவறியஞானிகட்கே வெளியிட்டேனாற் கையடக்கமாவைத்துக் கண்டுதேறே. (உக)

தேறவேயிந்நூலின் பொருளையாய்ந்து-செப்பினானுரோம ரிஷி யைந்நூற்றொன்று குறவேனந்திசொன்ன மூந்நூற்றொன்று குருமுறைக்கு மிகத்தெளிவாங் கொடுக்கோனாதால்-ஏறுகின்ற கொங்கணவனெண்ணூற்றுக்கு ளியம்பினான்மணிமறைக ளெடுத்துச்சொன்னான்-பேறுபெற வேண்டுமென்றாற்பிண்ணாக்கன்றன்-பிள்ளைசொன்னவெண்ணூறும்பேணிப்பாரே. (உஉ)

பார்க்கின்றமூலரெண்ணாயிரத்திற், பாடினாற்கற்பவிதியிரண்டாஞான-மார்க்சமதைச் சட்டமுனி யோகதீட்சை-மறப்பில்லையென்றுசொல்லிக்கிழித்துப்போட்டான்-ஏற்கவேபூசைவிதிமார்க்கமெல்லாமெடுத்துரைத்தான் போசனுமேழாயிரத்தில்-தோற்றியந்தவகையல்லாமிந்நூல்போற்-சொல்லாதுபிரமகெற்பத்தொகுத்தொகுப்பைக்கேளே. (உ௩)

### பிரமவுப்பின்பெயர்.

தொகுத்தபடி சொல்லுகிறேன் காரசாரத்-தோன்றுதபாடாணமுபசரங்கள்-வகுத்தநவலோகங்கணட்சத்திரங்கண் மலைபூமிமூலிகைகள் கருமானங்கள் மிகுத்தசிலவுதகங்களெதற்கானாலு மெய்ஞ்ஞானபிரமகற்பம் வேண்டும்வேண்டும், பகுத்தறியபிரமகற்பவுப்பின்மார்க்கப்-பரிபாடைப்பேர்வகுத்துப்பாடுவேனே. (உ௪)

பாடுவேன்பிரமவுப்பின் பேர்யாதென்றாற்-பாங்கானமுதற்பேர்தான் "வழலையென்பார்-தேடியேசொல்லுகிறேனிரண்டாநாமந்-தெளிவானவண்டபிண்டஞ்செப்பலாகும்-யேடணையா மூப்புக்குமூன்றுநாம-மிடைகலைபிங்கலைசுழிமுனையென்றாகும்-வாடவேவேண்டாங்காணைத்துநாம மனமொத்துப்புலத்தியனே மகிழ்ந்துகேளே.

மகிழ்வாகமதிபரிதி யெரிவில்லம்பு-வாகானதசநாமம்வகுக்கக்கேளாய்-இகறிரையந்தனித்தியம் மிரண்யகற்ப-மிடிவாய்வுங்களரியரிதாரமேகம்-புகழ்கேசம்பீசமிவைமீரைந்தென்பார்-புலத்தியனே சோடசமாநாமஞ்சொல்வேன்-திகழ்வயிர முரிசுன்னங் கடுக்காய் நஞ்சு-கிகையுவர்மண்டிரிகுணசல்சலநஞ்சே. (உ௬)

ஞ்சானபாடாணமமுரிவிந்நாதமுவர்வெள்ளைக்கல் பூமிநாதம் அஞ்சாதசோடசமாநாமமாச்சு, தொகையிருபத்தஞ்சுக்கு விவரங்கேளாய்-வெண்சாரை கருநெல்லிலவணப்பூநீர்-வெடியுப்புநவமூவிமிதுனமேடம்-அஞ்சாதவடுமுடியு நடுநீருப்பா-மமாவாசைபிரதமையுமைம்பத்தொன்றே. (௨௯)

ஒன்றுனவிடமுவண்ணன்கிரகங்கொள்ளி யுயர்குயவனரக்கிகணபதியூணுப்பு-நன்றுனவிடக்கம்பி யிருபத்தைஞ்சு-நல்லபஞ்சீகரணமென்றநாமமாச்சு-குன்றுதநாமமுப்பத்தாறுஞ்சொல்லக்-கூற்றமணற்பொடிமடையன் குடிபோம்வீடு-வென்றுனபிடர்லவணஞ்சாரிபுஷ்டி-தெடியோசையனுமிக்திர் வெளிசுயம்பே. (௩0)

சுயம்பிலிங்கமெழுபிறப்பு விஷ்ணுவையர்-சுடர்படிகமாசிமலம் பண்ணைச்சூடன்-செயம்புகழ்நீரனங்கமலம்பச்சைகாமி-சிங்கியொடு புயல்பரமஙிலத்திற்பூடு-நயம்பெறுகண்மணிமவுனஞ் சுட்டல்பொட்டல்-நாயகமு முப்பத்தாறுநாமங்கள் வியன்பெறுசொல்சாடைதொண்ணூற்றுறின்பேரை விரித்தெடுத்துப் புலத்தியனே யினிச்சொல்வேனே. (௩௧)

௬௬-மருந்தின்பெயர்.

சொல்லவே திருமேனிகன்மமந்திரஞ்-சோதிவிருட்சம் படலந்தூலஞ்சூக்கம்-வெல்லுமே காரிய கண்மேலுப்பு-மின்னொளி வெண்கடர்கொச்சிதுருசு சொக்கநான்-கல்லுமேவாசிபரிசுத்தன் சர்ப்பங்-கண்ணுடிபாலைநிலங் காந்தமூத்தான்-நல்லவிறன் கரும்பூனைகடலிற்பாசி-நந்திபுத்தான்சொரிகறடுகண்டோடாமே. (௩௨)

ஆகுமேகுருபரம வேமஞ்சூல-மவுரியிந்திரகோபமக்கினியின் கட்டி-வாகுபெறுமீனமளர் புனுகுகாவி-மலைருதுவெண் காரமயநாகம்வள்ளி-தோகைகொக்கோடுதலைப் பிள்ளைகன்னி-துத்திவெள்ளையாவரை சோமநாதம்-சாகுஞ்சன்யாசிமண்டைதொட்டிபூரஞ்-சமாதிநிலவுப்பொடுரஞ் சங்கமாமே. (௩௩)

சங்குகண்டத்தரிபொன் மத்தம்வித்து-சரபீசமகரமொடுசாளக்கிராமம-வங்குசிங்குபுரியட்டம்பஞ்சமித்திர-மதியிரவி சோடசமாமதனப்பூடு-குங்குமங் கோரோசனை கோமயங்குருத்துக்கொன்றைகொடிரசம்பூர்ணமிராசவர்க்கம் அங்கமுள்ளதாதுகத்தமுருளைத்தேர்க்காலங்களிச்சுன்னமுட்டையாணைக்கல்லே. (௩௪)

கல்லானயேக சவுக்காரம் வியாக்கிரங்கருவி தொகையான தொண்ணூறுருமாசசு-சொல்லானநூற்றிருபத்தைஞ்சின்பேரைச சொல்லுகிறேன்புலத்தியவத்தொகுப்பைக்கேளு, வில்லோசை

யுளக்கருவஞ் சனக்குடக்கு-விஞ்சைபகலவன்விளக்கு வேதைகஞ் சன் புல்லானவாமணக்குக்கானல்வேனல்புகைபருக்காலவிருபோகு நாளே. (கடு)

கஉடு-சரக்குகளின்பெயர்.

நாளானவிந்துப்புக்கழற்கொடிக்காய்-நார்த்தைவிடமுட்டிசிறு நாகப்பூச்சி நாளான நாகல்கட்டம் புறவினெச்சம்-நாட்டுசேர்க்கரை வேகாத் தலைக்கல்கஞ்சம், கோளானகண்சூரியஞ்சமுத்துக் கோளக பாடாண நாயுருவிகும்பம், நீளான முகிபாடாணம் மேர்செட்டி-நீர்வாணமாக்கிராணஞ்சலநீருப்பே. (கசு)

உப்பானவைங்காயம் பசுமைபச்சை-யுடலுயிர்தம்பனந்தாது கருவோடுழி, செப்பானபந்துக்கு நாபிபிராணன-சித்திரைபங்குனி சிலசரிகாதுவட்டை, மெய்ப்பானகிரியுதயமத்தமேருமேலவிசை துரும்புகஞ்சல்மித்ருசத்ரு, துப்பானபவளமனோசிலை, அரட்டி சூரியனை பாடாணத்துய்யதாமே. (கஎ)

துய்யசத்திசிவஞ் சீனக்காரஞ்சப்ரஞ்-சுந்தரிதாண்டவலீலன் சோதனைக்கல், ஐயமின்முனிமதனகாமரூபி-யடலையணிமாலகிதூற் றலன்னஞ் செய்யபுதுநிலம்பருதி பலமத்தாமன் கொடியுமரிகுட வியகந்தேய்வுகட்கும, குய்யமரவிபீசமணி பூரம்மட்டங் கோடை குளியானைரசக்குளிகுண்டாமே. (கஅ)

குண்டான காரமுடிமலங்கறுப்புக் குதிரைகெந்திபூரேகங் கோவணூர்மண்-உண்டான நிமிளைபொன்னிபிணங்கனுத்தையுயர் பிரமனுயிரவன்பா லுண்ணுப்பிள்ளை-பாண்டானசவுடிசுக்கிலம் பாழ்நத்தம்-பஞ்சபட்சியிரகுவத்துப் பாறையுப்பு-வெண்டானம் போன்றசலுப்புக்கட்டி-வீரமபிருதுவிநீர்விளம்பினரே. (கக)

விளம்பின்வோர் நூற்றிருபத் தைஞ்சுமாச்சு-வெவ்றேபிரித் தெடுத்து வெளியாச்சொன்னேன்-தளராதே பிரமகற்பசனனத் தோடே-தாழ்வில்லா மூந்நூற்ரு டிருபதாகும்-இளம்பிறைவந் துதித்துவளர்ந் திலகுமாம்பா-விந்தவகைப் பொருள்களெலலா மொன்றுக்காகும், பழுகனிந்தரசம்போல விந்தநூலைப் பாடினேன் கருவறிந்து பார்த்திடீரே. (உ0)

ஊர்த்தறிந்திந்தவகைப் பெயரையெல்லாம்-பாடினூற்நூல்க ளிலே பாடைமார்க்கம், சோத்தறிந்துபாராமலுலகவாதி-செப்பின வோர்சரக்கொன்றைத் தீயிலிட்டு, நீற்றினதிற்கிரியையில்லையென் றேயேங்கி-நினைவுகெடடுப் புத்திகெட்டுப் நிகழுங்கெட்டுச் சூத்திர முங்காணுமற் குருவில்லாமற் றுயர்க்கடலிலவீழுந்து சுழனமிட் டாரே. (உக)

## இவர்களுக்கு வாதமுடியாதெனல்.

சுழன்றலையும்பாவிகட்கு நூலுமுண்டோ-துன்மார்க்கசீடருக்குக் குருவுமுண்டோ, உளவுகனியாச்சண்டாளர்க்கிரக்கமுண்டோ-வுப்பைவிட்டபேர்களுக்குப் பொன்னுமுண்டோ-களங்கமன முடையோர்க்கு ஞானமுண்டோ-கன்னிமயல்கொண்டோருக்கு யோகமுண்டோ, தளர்ந்தோர்க்குச் சையோகவிருப்பமுண்டோ-சவுக்காரவிலையறியார்தாங்கெட்டாரே.

கெட்டதென்னெனிலுலகில்வாதியெல்லாங் கிருபையில்லாக் குருக்கள்சொன்ன கேள்விகேட்டுத், திட்டமில்லா மங்கையர்கள் தூரமான-தீட்டமேபிரமகற்ப செயநீரென்று, வட்டகையிற்றான் வாங்கி யதிலேபூர-மாட்டுவாரந்தவுப்பு வழலையென்பார்-சுட்டபிணத்தையெடுப்பார் தலைநாண்மைஞ்சன்-றுஞ்சுசவுக்காரமென்றுன் சோதிப்பாரே. (சங)

சோதிக்கமையெடுப்பார் தயிலஞ்செய்வார்-அடியான தாம்பிரத்தை யுருக்கிச்சாய்ப்பார் பேதித்துச்செம்புசற்றே பசுமையாறுற்-புடத்தில்வைத்துக்கண்ணுமலுயிர்த்துச்சோர்வாய், வாதிக்குங்கைபாகந்தப்பிற்றென்பார்-வகையெனக்குத்தெரியுமங்கே வாருமென்பார்-ஊதிக்கண் போனதல்லாற் காரணங்காணுருப்பிருந்தவிடமறியாருலுத்தர்தானே. (சச)

தாமென்று பிரமவுப்பு வெளியுமாச்சு-சத்தமிட்டவங்குசிங்குதலை கீழாச்சு, ஊமென்ற பிண்டத்திற் கல்லுப்பாச்சு துப்பிருந்த பாண்டமென்றுமண்ணுமாச்சு-ஏனென்றாவியாலே யுருவுமாச்சுதிங் தென்றமதியாலே குருவுமாச்சு, கானென்றமாறி கடந்தமுதமாச்சு-காயசித்திவாதசித்தி காணலாச்சே. (சரு)

காணவேசுத்தகெங்கை தீட்டமார்க்கங்-கபடமதாப் பாடிவைத்தார் சித்தரெல்லாம்-பூணவேசெந்நீரும் பனிநீராலே-பொய்யாது வழலைவிந்து பொன்னுமாகும் தானுவன்றே சடைமீதிற்றரித்தாரந்தச்-சந்திரனைக்கையாலே தடுப்பாருண்டோ-தோணவேவிந்துக்குத்தீட்சைநீரிற்-சொல்பாடைதனைப்பிரித்துச்சொல்வேன்கேளே.

## தீட்சைநீரின்பெயர்.

சொன்னவொருசாரயத்தி நீர்கள்ளு-சுரோணித மூலப்புளிநீர்சோமன் செந்தேன-கன்னிருதுவமுரிமுலை பற்சாறுகுங கல்லருக்கள்பால்செயநீர் வெந்தக்காக்கை-அன்னமுரு பிரவாகஞ்சுத்த கெங்கை யாற்றுவெள்ளங் குதம்பையொடு கிளிஞ்சல்வைத்து வன்

ணியினிற்சருபுதைகு வேர்ணவதூமை - மதிபோகாப்புனலமுத மதுமென்பாரே. (சஎ)

மதுவாலேபுசனேதிரி புரைமேனிப்பால் - வளர்கழுதைகுருதி வேசரிநீரகத்தம், சதுர்பெருகிசிறுநீ பூச்சாரமூசி - சத்திநவாச சாரம் வெண்கருநீர்தண்ணீர்-மதிபிலுறுபிரணவநீர்பனிநீ நாதம்-பாலேயிளங்குமாரிதிராவகஙகாரசிப்பி, உதகபடிகறபநீர்தாளிச்சாறு-மூன்று குளிர்கும்பிடுங்கள் கஙகையுப்பதிரே. (சஅ)

உப்புமதமறுவகைநீர்தயிலஞ்சோரி - யுகாரவெழுத்தகார வெழுத்ம்தாகாரமவண், டப்புடஞ்சதீட்சை தசமகணடசுணமை விரலிகாந்தமல ரொடடிச்சாறு, செப்புருசாஸ்வதி தீரத்தம்யாக மீட்சை சிவதீட்சைசேர்டசம ரீஙகாரதூபம், இப்புவயற சம்பள ஞ்சைசயோகநா லெட்டன்பர் பாடைதம்தாகைமெணபத்துனுன்கே,

எண்பதினுற்றீட்சைவிதி முடிவில்லாம - லிசைத்தாரேசூத் திரத்துக் கிணக்கமாக, முன்பினறியாமலிது வதுவோமென்று - மூடர்கட்கினைவுமற்று முடடிப்போட்டு, வம்புசொல்லி வாய்குழ றித்தர்க்கம்பேசி - மயிர்பிடித்துத் தெருவில்வரும்வாதப்பேய்கள-குமபுகண்டாலவர்களிடஞ் சொல்லம்வண்டாங - குருமுறைக் கெனனூல்தேடிக்கூர்ந்துபாரே. (ரு0)

கூர்ந்துபார் முப்பதிலே கைபாகங்கள் - குணமானவைம் பதிலே குருவின்பாகம், நேர்ந்துபா ரெண்பதிலே வழலைமார்க்க நிசமானநானூற்றிடைவேர்பாகம - சார்ந்துபார்மதிவெண்பாத்தீட் சைபாகஞ் - சவுமியமாயிரத்திலநேகபாகம், தேர்ந்துபா ரிந்நூலிற் பாடைபாகஞ் - செப்பினேனிந்தநூல்சிவனுரொப்பே. (ருக)

சுத்தகங்கை.

நூலிலேசுத்தகங்கை நீரைக்கேளா - யுரோமரிஷியைந்நூற்றி னுணுக்கங்காணும், பாலெனவேசுத்தகங்கை தன்னைப்பெற்றபா வைக்குமுகநாலு காருனேழு - மேலெல்லாம் பஞ்சவன்னங்கைதா னெட்டு - விரல்பதினறுெருசெவ்வாய் கலைதானென்று, சூலென பத்துநாள்சென்றபின்பு - சுத்தகங்கை யென்றொருபெண்பெற்றி ட்டாளே. (ருஉ)

பெற்றிட்ட பிள்ளைபிதா சந்திரனச்சு - பிறந்தவுடன்மறு நாடானிறந்துபோச்சு, உற்றவுதயாதியினிற்பிறந்தபிள்ளை - யுதவ மல்லாற் செத்தபிள்ளைக் குயிர்தானுண்டோ, இத்தனையும்பெற்றெ டுத்தாயின் கண்ணே - யெண்பத்து நான்குயிர்க்கு மிசைந்த யோனி, சித்திபெறச் சிவசத்தியிரண்டுங்கூடிற் - சிவசிவாசகலசித் தஞ் சிக்குந்தானே. (ருங)

சிக்குகின்றவாயின்ற ஞதந்தானே - சிவகங்கையாகாசத்தூறு தண்ணீராம், முக்கியமாய் முதற்பிறப்புச் சமுத்திரத்தின் - மூத்தவளுக்கிளையவளாமோடிகாரி சருக்கரைபோற்கனிவாச்சி பச்சைமேனிச் - சந்திரனைக் கண்டவுடன்றானேசேர்ந்தார், கொக்கிறகுபோலாணுண்மறுசென்மத்திற் கோதைக்குக் குடியிருப்புக்கொண்டருனே. (௩௪)

கொண்டவிலே தானிருந்து சிலநாட்சென்று - கொடுமையுள்ள சென்மமதாய்ப் பிறந்தான்மண்ணில், கண்டவருங் கேட்டவருஞ்சிரிக்கலாச்சு - கன்னிகுடியிருந்தவிடம் பாழாமென்று, வண்டர்களெல்லாம் விலகியொதுங்கிப்போனூர் மதிசிறந்த பெரியோர்கள் வணங்கினின்றார். தொண்டர்களைக்கிருபைவைத்துப் பிழைக்கச்செய்து - அகளிலாப்பிரணவனே சுயம்புநீரே. (௩௫)

நீரானகல்லுப்பு நாதச்சுன்ன - நீற்றெடுத்தார்பிறகுநிசமாகுங் கங்கை, ஊறுகின்ற சலந்தனிலே சிவமுஞுஞ்சேர்ந்தா - லுத்தமனை இவ்வுப்புக்குருவுமாச்சு மேவிலேயிருந்தசித்தர் சொன்னமார்க்கம் - வெளியிட்டுசமசொல்லிட்டேன் விள்ளவேண்டாம், பேர்பெறவேண்டுமென்றார் சூத்திரத்தின் - பிரமாணக்கருவையினிப்பேசுவேனே.

மோக்ஷமடைய.

பேசுவேபிரமாண மறிந்தோன் சித்தன் - பிரமவுப்பைக்கண்டவனே குணசிரேட்டன், வாசிதனை யோடாமன் மறித்தோன்சித்தன் - மாயைதனைவிட்டவனே மவுனமுத்தன், பூசைதனையறிந்தவனே கிரியைபெற்றோன் - பூவுலகதனோடிருந்தான் சரியைமார்க்கன்ஊசாரத்தினீர்பிரித்தோன் றீஞசைபெறவே - ஞேகோகோ ஞாலமெல்லா முலகுதானே. (௩௭)

உலகுமுதறசரியையோ வருத்தாற்புத்தி யுற்றுநின்ற கிரியையை தீகமாகும், பெலமானயோகம் வாதமிரண்டும் பேசுவாருவமானப பிரமாணத்தால், நலமானஞானமதே யதார்த்தமாகு - நானகுமந்தப பிரமகறபததாலே யலலால, பலபலயோசனை செய்துமயஙகவேண்டாம் - பரமசித்தர் மறைவாகப்பாடுநூலே. (௩௮)

நூலதனிற் பெரியோர்சொல் கருத்தாற்பத்தி - நோக்கில்லாதிருந்தக்காற் சரியையாகும் - மாலசெய்யுமரந்தனிலே பேயுண்டென்றுமனத் திதித்தாலேதீக கிரியையாகும - மேலுவமை மறைபசுப்போமெனறலயோகம - விசாரணையாற் பிறியும் ரசவாதவேலைகாலகருவனககாணடல்பிரதிதியடசங - கதிகருமெய்ஞ்ஞானமெனக் காணலாமே. (௩௯)

## யோகம்,

ஆகுமேபுகையதனைக்கண்டுவெய்ய- வக்கினியுண்கடன்பதுவே யனுமானந்தான்-போகுமிந்தம்பிரமாணத்தனுபவத்தைப் - புகலுகிறேன்புலத்தியனேபுத்தியாய்க்கேள்- சோகமில்லாவக்கினியேநகாரரூபங்- தூனமேயனுமானமாகும்பிண்ட - தேகமேபுகையாறுற்புகையையீன்றதீக்காட்டமங்கென்றேதெரிந்துகொள்ளே. (௬௰)

தெரிந்துகொள்ளுந்தூமத்தைக்கண்டேயங்குத் - தீயிருக்குமென்பதைநிச்சயித்தாற்போலும் - அழித்துவிடும்பிண்டமதேவழலையெண்ணி-லப்புகைதானெருப்பாகிலதுவுமெய்யே - எழுந்தபுகையாவுமிந்தக்காயவுப்பே-யெரிதுரும்பதக்கினியு மெங்கென்றேபார்-குளிர்ந்தபுகை யச்சுனியுமொன்றேயொன்று கூறினானுமானக்குறிப்புத்தானே. (௬௧)

குறிப்பான யோகத்துக் குவமானத்தைக் - கூறினேன் புலத்தியனேகூர்ந்துபாராய் - வெறிப்பானவஸ்துவென்றே வெறுநீருக்குமெஞ்ஞானமதியமுத விந்துவுக்குஞ்-செறிப்பாக வுவமானமொன்றுக்கொன்று - செப்பினர்சாராயத்தனைக்கொள்ளென்றே - மறிப்பான புத்தியினற்புகைநீருண்டு - மாளாமன்மதியமுதம் வாக்காலுண்ணே. (௬௨)

## வாதம்.

உண்ணவே மவுனரசவாதயோக - முத்தமனேவானிரசவாததாது - விண்ணுறையும்யோகரசவாதத்திற்கு - விந்துநாதப்பொருளைவிளம்பக்கேளு - தன்னிறையுந்தாதுரசவாதத்திற்குச்- சதுரானலவணமதேவிந்துநாதம்- பண்ணரியவிரண்டிற்கும்பேரொன்றாகும்-பாடையினுலுவமானம்பற்றிப்பாரே. (௬௩)

பாரப்பாவிரண்டிற்கு மொருபேரிட்டுப் - பாடினுருவமானப்பாடையாலே-வாரப்பாதாதவிந்துவழலைக்கும்பேர் - மவுனமென்றவசியோகவாழ்க்கைக்கும்பேர் -ஆரப்பாவிதையெடுத்ததிலேசொல்லாரதையெடுத்திதிற்புகட்டியதுவாமென்பார்- கூரப்பாநாதவிந்துமுடித்தபேர்க்குக் - கூசசமற்றஞானமென்னும் பொருடான்வாய்க்கும்-சாரப்பாலவணவிந்துபூமிநாதந் - தனையறிந்து முடித்தவர்க்குத்தங்கமாமே. (௬௪)

தங்கமதையுண்டாக்கும் விந்துநாதஞ் - சாரமென்றுங்காரமென்றுந்தருமேபூமி - வங்கென்றுஞ் சிங்கென்றும் பூமிநாதமதியிரவிசுழிமுனையின்மாட்டாக்கானும் - திங்களென்றவுடல்சித்தேய்தற்கேபூமி-திருக்கொடுக்கமாட்டாமற் செகத்துள்ளோர்கள் தங்கள்பஞ்சேந்திரியவிந்துநாதம் சவுக்காரமென்றெண்ணிதவறுண்பாரே. ( )

## கிரியை.

தவறுமல்யோகமொடு வாதத்திற்குஞ்-சமாதான மானபிரமாணஞ்சொன்னேன்-பவமானகிரியையெனுமைதீதத்தின்-பாடைதனைப்பிரித்துரைக்கப்பண்பாய்க்கேளு கவரானமரந்தனிலே பேயுண்டென்று-கைகாட்டப் பேயின்றன்கண்ணிற்கண்டாற்-சிவமான மந்திரசித்தியுண்டாமென்று சிந்திப்பதேகிரியை செழிக்குந்தானே. ()

## சரியை - ஞானம்.

தானென்றசரியைக்குக் காமியார்த்தந் - தருமத்திற்குருதிமெஞ்ஞானமாமென்றீன மறுபாக்கிய வான்றுபத்ரயோ - னிருவரையுஞ் சாட்சியெனவெடுத்துக்காட்டில்- ஊனென்றசரியையிதுபத்தியாச்சு-துத்தமனேஞானபிரதிட்டைகேளு நானென்றவிருதிதனி லூற்றுப்பார்த்து-நல்லகட்டை யென்றறிதன்ஞானமாமே. (சுஎ)

ஞானமென்ற பிரமாணமூலங்கண்டா - னலமான நூற்குறிப்புநன்றாய்த்தோற்றும்-வானமென்றயோகசித்தி காயசித்தி - வாதசித்துங்கைவசமாம்வாகாரத்தாலே - கியானமென்றே னானென்றேனெங்கேயென்றேன் - காயசித்திபெற்றநிசக் கருத்துளோர்க்குப்பானமென்ற ஞானசித்திமுத்தியாகும் - பஞ்சசுன்னக்கருவையினிப்புகருவேனே. (சுஅ)

## பஞ்சசுன்னவிவரம்.

பகருவேன்குக்கிடத்தின்சுன்னமொன்று - பரிவானகற்கிளிஞ்சிற்சுன்னமொன்று நிகரில்லாவெள்ளைக்கற் சுன்னமொன்று - நீராணகடற்னுரையின் சுன்னமொன்று - சுகமானவலம்புரியின் சுன்னமொன்று - துகளிலாவஞ்சுவகைச் - சுன்னத்தாலே - தகைபெறுசீர்நாதமதைச் சுண்ணும்பாக்கிச் சாகாநாதஞ் சேர்க்கத்தண்ணீராமே. (சுகூ)

தண்ணீராஞ்சிவசங்கைசுத்தகங்கை - தாயானபிராணனுமேசத்திரபானம் - தண்ணீராஞ்சத்தியெனு நாதத்துள்ளே - கலந்தபரப்பிரமவிந்து கலந்ததாலுல் - ஒன்றானசுக்கிலமுங்குருவுமாச்சு - ஓகோகோதங்கரசமுதித்ததம்ம - மண்ணேடுபுலமுதலாவேமமாச்சு - மாறுமலிந்திரன்போல் வாழ்வுண்டாச்சே. (எ0)

## சத்திதீட்சைவிவரம்.

வாழ்வானசத்திக்குத்தீட்சைமூல - வகையறியச்சொல்லாதுநால்கடோறும்-தாழ்வில்லாசத்தியுஞ் சிற்சத்திக்குள்ளே - தான்கலந்து முன்சென்மந்தானேசென்றுள் - கோளேதுமில்லாத நாதசுன்னங்-குறுமந்தசுன்னநவகடலின்மூழ்கித் - தாளான பிரணவநீர்தானுமாச்சு-சவுக்காரசெயநீரைச்சாற்றினேனே. (எக)

துற்றுகின்றசிற்சத்தி பஞ்சமித்திரஞ்சத்திக்குப்பின்புதித்த போகசித்தி, வேற்றுருவு போலிருந்தா லுயிருமானன் - மேதினி யோர்க்கு பகாரிபஞ்சமித்திரம், தோற்றுகின்ற பஞ்சமித்திரந் தீட்சைவிட்டாற் சுத்தகங்கையாகா துநாதசத்தி காற்றடிக்குங்காந்த மலர்கட லுஞ் சேர்ந்தாற் கரைகாணுவாதசித்தி கைக்குள்ளாச்சே.

ஆச்சப்பா சிவத்திற்குதீட்சைமார்க்க மைந்நூற்றிற் சொல்லு கிறேன்விரிவதாக, மூச்சப்பாநாதமெனு முன்னிற்பின்னின் மூத ண்டபிரணவமாஞ் செயநீர்க்குள்ளே, தோச்சப்பாவபிடேகஞ்செய் யச்செய்யத் தோஷமெலாம்விலகியேசுயம்புமார்க்க,நீச்சப்பா கடல் கடந்தேயமுதமாச்சு-நிசமாச்சு சிவதீட்சைநினைவாய்ப்பாரே. (எ௩)

நினைவாகப்புருட னுக்குப்பெண்மேல்மோக-நெரிகரி பூங்குழன் மகட்கடாவன்மேன்மோகம் கனமருவுமிருவருமேகலந்தபோது கம லமலர்வதனமோடுதிக்கும்பிள்ளை, இனிதானபிள்ளையினுலெல்லா முண்டாமிந்தவிதமாயிருக்குந் - தீட்சைமார்க்கம், வனவாச மாய்த் திரியும்வேடத்தோரே மன்னவர்க்கு மங்கையர்க்கும் வயதுகேளே.

மங்கையெனுமுகாரசத்தி நாதத்தாய்க்குவயதுபத்துச் சந்தி ரன்றன்மகளுமானள், திங்கண்முகம் போலிருப்பான் சிறியகன்னி- திரண்டபின்புகுடிலைவிட்டுத் தெருவில்வந்தாள், கங்கணத்தி யென் ஞெருவன்காப்புமிட்டான் காலெடுத்தேகாலிகந்தைக்கிட்டான், பங் கமில்லாவயதுபத்துச் சென்றகன்னி பசிதவிர்ந்த வாதிமுகம்பார்த் திட்டாளே.. (எ௫)

இட்டவொருமன்னவனே யகாரவிந்தை யென்சொல்வேன்பதி ஞறுவயதுமாச்சு, சட்டகதிரேனிடத்திற் பிறந்தபா லன்ருே கை யெனும்பெண்ணெடுத்து வாழ்ந்ததீரன், இட்டவிதியோவவனும் வெளியேறும் லெண்ணிரண்டுமுழத்துள்ளா யிருந்துபோனன், மொட்ட லென்பாரிருவர்களுமிகுந்தவீடு - புலத்தியனே சூத்திரத் தைப் பொருந்திப்பாரே. (எசு)

பொருந்துகின்ற காலமெனு மீனமேடம்-பூவையரும் வளர்பி றையிற்பூரிப்பானள், திருந்துகின்றபுருட னுக்குமீனங்கீழே தேய் பிறையாம்பதினறிற் செனிக்குங்காலம், அருந்திருந்த விரண்டுக் குங்குணங்களுண்டா-லடையாளமுண்டொரவை யடாகமுண்டுவரு ந்தி விலகின்றஒரு காலமுண்டு - வனமுண்டு நகருண்டுமகிழ்ந்து கேளே. (எஎ)

கேளையாவளர்பிறையிற் பிரதமை யொன்று-கொடியானதுவி கைதிருத்திகைமற்றென்று நாளையாசதுர்த்தி பஞ்சமிதானென்று

நலமான சஷ்டிசப்தமிதானென்று, வாளையாவஷ்டமியு நவமி யொ ன்றுவண்டசமியிவைபத்து மகத்தாந்தீட்சை ஆளப்பாதசமியிலே முடிந்தபிண்ட-மதுதப்பிற் சுத்தகங்கையாகாவாறே. (எஅ)

ஆகாதுதேய்பிறையிற் பிரதமைதொட்டுற்ற - வமாவாசைபதி னேந்துக்கடுத்தநாளில், சாகாதகாலுக்குட் பிரமகற்பங்-தாண்டினுற் சிவனீங்கிற் றவறுண்டோபோம், வேகாதத்லையன்றோ வுப்புப்பு-மே லாசவளர்கலையே யப்பப்பப்பும்-போகாதபுலனன்றோ சுத்தகங்கை-பூரணமுகாரணமும் போதிப்பேனே. (எகூ)

போதிக்குமுப்பூவே முப்பாழாச்சு-புரியட்டபூரணமுமதுவே யாச்சு-நாதிக்குமிடந்தனிலேயெழுந்தவுப்பு-நன்றானகாலடியிற்சமா தியாச்சு-சாதிக்குநலமொன்றிற்சத்தியுப்புச்-சந்திரனுஞ் சூரியனுந் தாங்கிப்பாராய்-வாதிக்குமானிடரே வறிவர்நல்ல மகாமவுனயோகி யர்க்கேவாய்க்கு மன்றே. (அ0)

வாய்க்கவேசிவனுக்கும்பாலைமுல்லை-வளர்குறிஞ்சு யிவைமுன் றும்தன்கையாகும் - சேர்க்கவே மத்திக்கு மருதசெய்தல் - செழிப் பானதலமென்று செப்பினலும்-ஏற்கவேபாலையென்று முதலாம்பூ மி-யிரண்டிற்குங்குறிஞ்சிமுல்லை யிறப்பநன்று-பார்க்கவேவனதீரம் பொடிபண்போட்டல்-பங்குனியுஞ் சித்திரையும்பதிவுதானே. ()

பதிவானகரிசநிலமடுக்கொணுது - பருங்கடற்றண்ணீரையடுத் திருக்கலாகா-சதுரானமலையருளித் தண்ணீராமா - சமரசமாவிருக் கின்றதலமேகொண்டு-நதிரானபாலைநிலம் வண்டல்பொட்டல் கன் னிவனஞ்சிறுகாசா கவந்தபூமி-விதிகாணுஞ்சுக்கான் பாரிவைகள் கண்டால்-விமலசதாசிவஞ் சத்திமேவும்பாரே. (அஉ)

மேவுகன்னிதுலா மீனமூன்றில்-வேளைதிதியுச்சமொடுசம்பாவ த்தில்-காலைதிரிபுரைபுவனைவாலைமூவர்க்கண்டுருதிகாமசையோகமூ ட்டிப் பூவாரணாவிமுத்ரை யிந்துமுத்ரை-பூரகத்துமனதூன்றிப் பூசைமேவித்தேவிவிந்து சிவவிந்தவ் விரண்டுங் கண்டுசித்தாந்த ஞானமுத்தியானஞ் செய்யே. (அங)

செய்யவேமனே விருத்தி யவித்தைதன்னைச் செந்தீயிலிட்டு வறுத்திட்டார்பின்னும்-வையகத்தின்முளையாது ஞானமுத்திமாத வந்தோர்க்கெய்தும் ரசவாதவேலை உய்யமவென்றுகற்சீடர்தனக்குச் சொன்னேனுத்தமனேநாதவிந்தி னுண்மைபார்த்தே-ஐயமில்லாவு ள்ளத்தோடிரண்டாங்காண்ட-மருளுகின்ற முறைப்படியேதெரிந்து செய்யே. (அச)

தெரிந்துகுருச்செய்கின்ற குருவின்பாசந் தினையளவுந் தப்பாது கைபாகங்கள், தெரிந்துரைத்தபடியேநீ குருவைச் செய்து சிவயோக வாழ்க்கையிலே சித்தமாகி, விரைந்துதமக்கேதேனும் வேண்டுமென்றால்-வேதையிட்டுச் செலவழித்து விரைந்து தள்ளி-இதலிலாணவக்கருத்தை யொடுக்கிமுத்திக்-கேணியாம் யோகத்திலிருந்தேறுயே. (அ௫)

ஏறுதற்குநூன்முடிவன் - நூலின்பாடை-யியம்புகிறேன் சித்தமதினியல்பையெல்லாம், ஆறுமேயானைகண்ட குருடர்போல வறியாதபிள்ளை மாற்றறி வானென்றும் பாறுமேபசிய மண்ணுந் தண்ணீரென்றும்-பகர்கஞ்சநாதத்தி னுதமென்றும், காறுமே கள்ளனை வெள்ளனை நீர்ப்பந்தல்-காடுமென்று மின்னல்வெகு கதைசொல்வாரே. (அ௬)

சொல்லு நெருப்பாறு மயிர்ப்பாசம் போலச்-சுண்ணும்பிலே யிருக்குஞ் சூட்சமொன்று, மில்லறமேநல்லறமதாகுமென்றுமிறைத்தாரைக்காததபள்ளிமூண்டேயென்றும், வல்லமுத்து மாணிக்க நிலமென்றும்வணனுனுகமேதெரியும் வகாரமென்றும் வில்லோசையென்றும் வீட்டுகுள்ளென்றும்-வித்தையுள்ளதிட்டாந்தம் விளங்குநூலே. (அ௭)

விளங்குமிந்நூல்களிலே கதையின்பாடை விவரமெலாமுரைக்கவென்றுற பெருநூலல்லால, உலககுளிர முதற்காண்ட மெருநூற்றுககு-லாடுககமா வெடுத்துரைத்தே னுணமையெல்லாம் பிளிறுகின றயானைகண்ட குருடேதென்றுல-பிரமாமெழுத் துறுதி பேணிப்பாராய், இளககுழந்தை மாறறறிவானென்ற சொல்லி-மெண்ணாருவயசுபத்துமிசைநத மாதே. (அ௮)

மாதுமண்ணுந்தண்ணீருமப்புமுப்பும்-வரைகஞ்சநாதமென்றுல்வாழைததாது-காதலனுமவெள்ளனைக்கள்கணை நீர்ப்பந்தல்காட்டுமெனறுற பிரமகறபககலலின்பூமி, வேதமெனுநெருப்பாறு மயிர்ப்பாலநதாண-வேதையிட்டுமேலாகததில வெளளிமூலம் சூதறியுஞ் சுணணுமபிற சூடசமொனறுற - சுத்தசறம்பிறபபதற்குச சுனனமெணமிண. (அ௯)

எண்ணவேயில்லறநல் லறமென்றக்கா லிசைந்த பஞ்சநிலமதிலேயிசைந்தபூமி-கண்ணவேயிறைத்தவரைக் காக்கும் பள்ளங்கைபாகங்காண்பதற்குக் கருதானையாவண்ணமுத்துமாணிக்க நீலமென்றுல் வழுலயெழுபிறப்பான வண்ணின்கூறு-சொன்னவகையறிவதுவே வண்ணுனென்றுற்றுவைப்பதற்கு வெள்ளாவி தோன்றும்பாரே. (௯௰)

தோன்றுதவில்லோசையென்றூற்சூதந்-தொகையான வீட்டுக்குளுண்டேதென்றால்-காணுதபிரமகற்பக் கல்லென்றேபோ-காட்டினூற்நூல்களிலேகாணுதென்றே-பூணுதகதைகளின்னும் வெகுவாயுண்டு-பொருளெல்லாமுப்பினுக்குச் சுத்திக்கல்லால்-வீணுனசொல்லென்றுநினைக்கவேண்டாம் - வெளியாகப்பாடை-தனை விண்டிட்டேனே. (கூக)

## பஞ்சாட்சரம்.

விண்டுசொல்லுஞ்சத்தமுதற் பதினெண்பாடை-விளங்குகின்றவட்சரமாம் விருத்திக்கெல்லாம் பண்டுவந்துயிரெழுத்தைப் புலத்தியாகேள்-பண்பானவகாரமென்றுமிகாரமென்றுங்- கண்டுசொல்வேனுகாரமென்றுமெகாரமென்றுங் - கருவான வொகாரமென்றுமித்தவைந்தும்-அண்டர்பிரான்சொன்னவெழுத்தைஞ்சும்வேத-மகாரநாதத்துக் கருளிதாமே. (கூஉ)

அருளானவெழுத்தைஞ்சு மில்லாவிட்டா-லப்பனேபுகலாது சத்தமொன்றும்-பொருளானவட்சரமுமற்றபோது-போதித்தால் வேதம்பொய்யாய்போசசு தெருளான வுயிரெழுத் தொன்றில்லாவிட்டாற்-செத்தெழுத்தாற்காண்டம்விண்டு செப்பலாகா-மருளானவெழுத்தைஞ்சும் பிறப்பெங்கென்றுன்-மைந்தனே யூமையெழுத்தாகுமாறே. (கூங)

ஆறுனவூமையென்றாலாணுமாச்சே - யப்பனேயறிவாச்சுமயங்கவேண்டாம்-கூறுனவூமையெழுத்தொன்றினாலே-கூசாமலஞ்செழுத்தும்பிறக்கலாச்சு - மாறுனமவுனவெழுத்தறியவென்றால் மனமழுந்திவிட்டக்கான் மவுனந்தோன்றும்-தேறுனமனமன்றோ பிரமவித்துச்செப்புகிறேன் ஞானவழிதிறமாய்ப்பாரே. (கூச)

பாரப்பாவழலைக் கோயிலக்கப்பாடை - பாங்கானவட்சரமாபாடையோடு-கூரப்பாநற்பாடைதேசபாடை-குருமுடிக்கும்கைபாகங்குருவின்பாடை-கீரப்பாபரிபாடை - சித்தரெல்லாம்பலபலவாச்செபபுமபாடை-கோரப்பாவிவையெல்லா மைந்நூற்றுக்கு - ணிரைநிரையாச்சொன்னதினை ணிகண்டதாமே. (கூடு)

## இந்நூலிற்சொல்லியவிபரம்.

ஆகுமேமுதற்காண்டம் வழலைகங்கை-யாதியிலேபிறப்புமதின் பெயருஞ்சொன்னேன் - சேகரமாவிரண்டினிலே குருமுடிக்கும் செய்பாகக் கைபாகத்திறத்தைச் சொன்னேன் - பாக்மதாமூன்றினிலேகற்பமூலம்-பதியானயோகமதை வகுத்துச்சொன்னேன் - வாகுபெற நான்கினுக் குண்ஞானசார - மணிமுடிக்கும் வயனமெலாம் வழிகண்டேனே. (கூசு)

வழியானவைந்தாங்காண்டத்தினுள்ளே - மறைத்த பொருட் பாடையெலாம்வகைகள்காண - நெளிவிலாக் காண்டத்திற்சுருக்க ளெல்லாநிகழ்த்தினேன் பல்பொருட்சொல் காண்டமென்றே-சுரு வாகக்கருவறியக் கடைக்காணடத்தைச் - சோதித்தாற்றோன்றுமே தோன்றுவெல்லாம் - வெளியாகுமிந்தநூலைச்சுகரகாண்டம்வேதமெ ன்றேசித்தர்களுவிளம்பி னரே. (கஎ)

விளம்புகின்றவழிலைக்கு மூலமொன்று- விசையானசுத்திக்குமூ லமொன்று-தளும்பாதகும்பகமாமவுனமார்க்கந்- தாங்கிநின்றயோக த்தின்மூலமொன்று-குளம்பானகற்பத்தின் மூலமொன்று-குளுகை யெனுஞ் சாரணைக்கு மூலமொன்று - வளம் பெறவே ஞானத்தின் மூலமொன்று-வகையாறுமூலத்தின் வயணங்கேளே. (கஅ)

வயனமென்றவயலைதனக் குப்புமூலம் - வாகான தீட்சைக்குக் கனலேமூலம்-நயனமென்ற யோகத்தில் வாசிமூல-நல்லவொரு கற் பகத்தில்ரசமேமூலம் - குயனமென்ற குளிகைக்குப் பாட்டுமூலங் குற்றமில்லாஞானத்தின் மனமேமூலம்-தயினமென்றவிவைக் கெல் லாமென்னும்மூலஞ்-சாரகாரத்துறைத் தாங்கிப்பாரே. (கக)

தாக்கிப்பாரிந்த நூலைஞ்சுகாண்டந்-தமைப்பார்க்கிற் சமுசயங் களுண்டேபோகும்-நோக்கிப்பாரிந்தநூ றனக்குச் சாட்சி உரோம ரிஷியைந்நூறுநந்திநூலும்-தேக்கிப்பாரிதனலைதெளியாதுண்டோ சிவசிவாகுருதேடித் திரியவேண்டாம் - பாக்கியமாநூலதனிலிரண் டாங்காண்டம்-பாடுகிறேன்முதற்காண்டம் பரமாமுத்தே. (உ)

முதற்காண்டம் முற்றிற்று.

---

# இரண்டாங்காண்டம்.

———(0)———

முத்தணிநகையாள்வேத முதல்வியைய் பாகம்வைத்த - சுத்த மெஞ்ஞானதீபச் சுடர்ப்பெருஞ்சோதிபாதம் - நித்தமுந்தொழுது போற்றிநிதிசொல்படை நூலின்-புத்திசேரிரண்டாங்காண்டப் பொ ருளினைப்புகலுவேனே. (க)

புகலுமுற்காண்டந்தன்னிற் புகட்டினேன் வழலைமார்க்கம்-செ கத்துயருபபின்றீட்சைசிவத்தின்பேர்செப்பினேனலை - இகத்தினின் மூடஞானவிருளினை யெளிதினிக்கும்பகவவன்போலுமிந்தப்பாடை னுல்பயன்பெற்றோர்க்கே. (உ)

பயனறியாதமாண்பர் படிக்கிலென் விடுக்கி லென்ன-உயிரினை யடக்கிடாதாருரை பொருடெரிந்தா லென்னதயையுள்ளகுணமிலா

தார் தாட்டீகாரனுமென்ன-சுயமதாமுப்பைவிட்டுச் சுட்டதோஷிக் கொப்பாவார். (௩)

ஒப்பிலாவிரண்டாங்காண்டத்துரையறிந்தவனேவாதி - தப்பிலாச்சிவயோகத்திறறலைவனுமிவனேயாகும் இப்புவிதனிலேதேக சித்தியுமிவற்கேயெய்தும் ஆப்பணி சடையோன் சொன்னா னறிந்திடு மறிவுளோரே. (௪)

அறியவாம்ரசவாதத்துக் காதியா முப்பொன்றேகாண்-திரிவிதவழலைச்சுன்னஞ் செய்யு நீர்த்தீட்சையொன்று - குருசெய்யுமிடைபாகத்தாற் குடுகைபாகமொன்றின் னிரையினையறிந்துளோர்க்கு நிட்டையுநிலைக்குமன்றே, (௫)

வேறு.

நிலைப்பதற்குச் சூத்திரங்க ளநேகமுண்டு - நீணிலத்திலிந்நூல் கிடையாதப்பா-மலைக்குள்வளர் பெரியோரை யடுத்துக்காத்து-மனமுருகிநின்றகாலவாய்க்குமிந்நூல்கலைத் தமிழிற்காப்புமுதற் கடையும்பார்க்க-கைகாட்டுவகுரு வென்னக்காணுமிந்நூல் விலைப்படுத்தியுடல்வளர்க்குஞ்சண்டாளர்க்கு விமோசன காலஞ்சிறிதுமில்லைமாதோ. (௬)

இலையென்றுகூறாமல் யார்க்குமைந்தா விந்நூலைச்சிவயோகிக் கீதனமன்றே இல்லையென்றுசொல்லாமல் யார்க்குமைந்தாவிந்நூலைச் சொற்றவருக்கீதனமன்றே - இல்லையென்றுகழறாமல்யார்க்குமைந்தா வெழிலஞானமுடையோருக்கீதனமன்றே - இல்லையென்றுரையாமல் யார்க்குமைந்தா-விந்நூலைப்புண்ணியருக் கீதனமன்றே. (௭)

நன்றானபிரமகற்பக் கல்லின்மார்க்க நாட்டினேன்பாடையினான் முதற்காண்டத்தில இன்றுணர்ந்த வுலகத்தில வாதியெல்லாம் மந்த வாதங்கண்டறிவாரில்லையில்லை அன்றுதானீசனெனக்குரைத்த வுண்மையப்பவ்விரண்டாங்காண்டத்திற் சொல்லுவன் குன்றனனவறிவுடையபுலத்தியர்கள் குருமுறைக்கு வழலைதனைக்கூறுவேனே.

கூறுவேன்வழலையிலே நாலுசாதி-கூசாமல் முடித்துவைத்தார்சித்தரெல்லாம் தேறுவாய்ந்தவகையாதென்றால் சிறுநீராற்காச்சுகின்றவழலையொன்று பேறுபெறச்சுண்ணம்பு முவருங்கூட்டிப் பிசகாமற்காச்சுகின்ற வழலையொன்றுநாறுகின்றசயிந்தலவணங்கள் கூட்டிநலமாகக்காச்சுகின்ற வழலையொன்றே. (௯)

ஒன்றானசளியவர் மாணவீரமவெள்ளையுள்ளபடி காச்சுகின்ற வழலையொன்றே என்றானவென்மகனே வேம்புபுன்கினெண்ணெயிட்

டுச்செய்திடுவாரிந்தநான்கும் - நன்றேதுமில்லையிந்தசவுக்காரத்து-ணட்டுக்குள்ரசவாதிசுன்னஞ்செய்து-குன்றுத சரக்குகளைப்பொதிந்துசுட்டுக் குணமில்லாவகைகண்டு குறையாவாறே. (ம)

குறைபட்டுப்போகாதலிந்தநூலிற் - கூறுகிறேன்வழலையின்றன்குறிப்பைமைந்தா-நிறைவானரவிமதியுமங்கி மூன்று-நின்றுவகலண்டத்திற்பிரமவித்தாய்-மறைவான மூன்றதிறுலுலகமாச்சுவாயுவங்கியப்புமன்றேமகத்தாம்விந்தே-உறுகதிர்முச்சொடு தரிகர்த்தாவாகியோங்கிநின்ற பிரமசித்தி னுண்மைமன்னே. (மக)

சாதிவெடியுப்பின்பிறப்பு.

உண்மையாக்கினியினுறு கோபத்தா-லுற்றரவிமதியிரண்டுஞ்சையோகித்து, தன்மையாம்விந்து வெனுமழையுண்டாச்கித்தாணிமுதலெழுதோற்றசார்புண்டாக்கி வண்மையாமுறுபஞ்சேந்திரியங்களாகிவந்ததாற்பிரமமெனும் மாயக்கூத்து-வண்மையாம் விசும்பாலே விடமுண்டாகி-மேகசலத்தாற்பிறந்த வெடியுப்பன்றே. (கஉ)

வெடியுப்புச்சத்தாவிபீசமாச்சு வெருட்டஞ ரிதைத்தானேமுடிவாமென்றே-இடியுப்போ விருந்தவிடஞ் சொல்லாமற்றுனிணங்கஞப்பைச்சிவமென்றேயிசைந்தே சொன்னர் - அடியுப்புநிலவுப்பென்றறியமாட்டாரடுத்தவுப்பைச் சிவமென்றே யறியமாட்டார்-குடியுப்புப்பாறையுப்பென்றறியமாட்டார் - கோடானகோடியுப்புக்கூறுவாரே. (கங)

கூறுவார்முதல்வழலைநிலவுப்பாச்சு-குறித்தறிய வேண்டுமெனிபூமிநாதம் மாறுவார்காச்சுவார் வழலைசெய்வார்-மல்புப்புப்பிண்ட மென்பாராயினுதம்-தேறுவாரிவர்தாமேசிவமாமென்று- செப்பிரிந்தாமறியாக்காற்றிறந்துசொல்வேன்-பேறுபெற நிலவுப்பேபூநீரொன்று-பேரிட்டவகைபிரிந்துப் பேசுவேனே. (கச)

நிலவுப்பு.

பேசுவேன்பூவென்பதயனுமாச்சு-பெரிதானநீரென்ப தறைமாலாசசுவிசுகிறேன்மாறுனே ஈசனுன்-வேதனெனும் பிரமதேசத்தியானுன்ஊசரத்துக்கடுத்திருந்த வுப்போசு னுப்புக்கு மேலிருந்தமண்ணேசத்தி - தாசியர்க்குமண்ணன்றுவளையலாச்சு-சத்தியைவிட்டகன்வுப்பத்தானேபோச்சே. (கரு)

போச்சப்பா வீசனுக்குப்புத்தண்ணிராச்சு-பூத்தசுன்னஞ்சத்தியன்றேமண்ணேயாச்சு-தேச்சப்பாவிழிகுலத்திற் பிறந்தவீசனிதனுலேசத்திக்குளடக்கமானுன் வாச்சுதப்பா கரதலையாய்த்தலைஏகாலாய்மாறிநின்றபடியாலே மறைத்தார்நூலில்-பேச்சப்பா நாதமென்று மடியாமென்றும்-பிண்டவுவற்சத்திஎன்றும் பேசினுரே.

பேசாதபூவழலை பிரமகற்பம் - பின்னையொன்றுமில்லைநிலவுப்
பேயீசன் கூசாதேமுடிதலைஎன்றிதற்குப்பேருங்-கொண்டன்மதியுப்
பென்றுங் கூறலாகும்-பூசாரமறியாக்காலீசனுப்புப்-பொருந்தாது
முதல்வழலை பொய்யாப்போகும்- ஆசாரக்கள்ளருக்கப் பேசவேண்
டாமாதித்தனுப்பையுனக் கறையக்கேளே. (௧௭)

ரவியுப்பு.

அறையக்கேள்பொட்டிலுப்பு வெடியுப்பையா-வாராகரா கடை
சியென்றவழலையாகும்-பறியக்கேண் மண்ணெடுத்துச்சலத்தான் மூ
ட்டிப் பக்குவத்தினாற்பிறக்குங் கம்பியுப்பேயுறையச் செந்தீக்கண்
டாற்பிடித்துவெந்தே-யொடிந்தாக்காற் சிவமென்று முரைப்பாரை
யா-முறையாக்கேளீசனுக்கு மாணமுண்டோ-மோசமுண்டோவிண
ங்கன்வெகு மூர்க்கனுமே. (௧௮)

மூர்க்கமுள்ளரவிவிந்து மதியின்விந்து - மூன்றுபங்குமிரண்டு
பங்குமாகக்கூட்டி-தீர்க்கமாமிணங்கியெனும்பெயருமாச்சு சிவசிவா
•வெண்ணெய்குடித் திருக்குமுப்பு - மார்க்கமாயக்கினிக்கு ரோமம்
போல-மாமிசத்தின் கருவைவிட்டான்-மாளாதுப்புப் - பார்க்கவே
காலுக்கு முடியென்றேபேர்-பரிதிவிந்து பாரென்றுச்சே. (௧௯)

பாரையுப்பு.

பாரப்பாநிலவுப்பு வெடியுப்புக்குப்-பாடையென்ன ஒன்றல்லா
விரண்டுமுண்டோ-நேரப்பாவடிஎன்று முடிதானென்று நிரைநிரை
யாய்ச்சொன்னதினாற்பலனேதுண்டு - கூரப்பாவடுப்பிலிட்டெரியுந்
தீயிற்கொள்ளியிலேசுடர்க்கொள்ளிகுறுக்கேயுண்டோ-சீரப்பாமுன்
பின்னுச் சொல்லுநூல்க?டிருவிதமாமுப்பினத்து தீர்க்கந்தானே.

தீர்க்கமாய்வெடியுப்பே சிவனுமாக்குஞ்-சிலநாளிற்சித்தி என்
றுசெப்பலாகும் - மார்க்கமாய்ச்சொன்னதல்லா லுப்பின் மார்க்கம்
வகையறுத்துச்சொல்லாதவகையேதென்றால் - மூர்க்கமுள்ளசித்த
ரென்மேற்கோபஞ்செய்வார் மூடிவைத்தனிதனாலேமுன்பின்னைகப்-
பார்க்கின்றபிள்ளையறிவுடையனானாற் - பதறுமனுன்முழுதும்பார்ப்
பன்றானே. (௨௧)

தானானபாரையுப்பைச் சொல்லவென்றாற்-சமுத்திரத்திற் பா
றையிலேதானுண்டாகும் - வானானகல்லுப்பென்றிதற்கும்பேராம்-
வாரியென்றுமப்பென்று மதற்குப்பேரும்-தேனானகன்னியென்றும்
போரஞ் - செப்பரியகங்கையென்று மதற்குப்பேராம்ஊனனதிரா
போகமென்றும்பேரா - மூத்தியிலேபாறையினில் வளரும்காரே. ()

வளருகின்றவுகாரவுப்புச்சிறு நீருப்பு - வகாரவுப்புத்திரையி
னுப்புவத்துப்பைய - துளிரானசுத்தசல தீட்சையுப்புத் - தொழின்
மூடிக்குஞ் சீனவுப்புசசத்தியுப்புத் - தெளிவானகடன்மதிக்கத்திர
ண்டவுப்புச்செப்பவதிமதுரவுப்புச்செந்தீயுப்புக் - களியாதகளியுப்
புக்கரியினுப்புக்-கண்டுபாராதித்தன் கட்டுமுப்பே. (உங)

கட்டுகின்றவங்கியுப் பீசனென்றுங் - காட்டினார்முடியுப்புக்கா
ணுரென்றும்-விட்டகழியகாரமென்றுமையாவையா-மேனிவிந்துநா
தமதை வினவலாமோ-பொட்டலென்றஊசரத்துக்குள்ளேயீசன்-
புதையுண்டுபோனானேசமர்தியாக - ஓட்டுகின்றசிவசத்திவிரண்டு
பேரு-மோரிடத்திற்குடியிருந்தாருற்றுப்பாரே. (உச)

உற்றுப்பார் சிவமிருந்தபூமிதன்னி-லொருபூண்டுமுளையாதே
யுவருப்பாலே-அற்றுப்போமறுதலிலமயானருத்திர - னவனுடனே
சத்தியடுத்திருந்ததாலேமூத்துப்போற்கொஞ்சம் விஞ்சச்சலமுண்
டாச்சு - முழுதுமோசமில்லாமற்பசுமையாச்சு - சித்திக்கும்பசந்த
மண்ணுந்தண்ணீகண்டாற்- சிவனுப்புநிலமுவராந்தெளிந்துபாரே.

பாரப்பாவீசனுப்பைக் காணவென்றாற் - பனிக்காலங்குடியி
லிட்டுப்பார்க்கவேண்டும் - ஊரப்பாவெளுகின்ற வண்ணானுப்பா
லொருமுழமோவிருமுழமோ வுயர்ந்தானே - வாரப்பாபக்கமோபூ
மியுள்ளோ-மாலையுச்சிகாலையோமதியோவெய்யோ- ஆரப்பாவாகாச
வுப்பைக்காண்பாரானாலுமூசரத்தையடுத்துக்காணே. (உசா)

அடுத்துக்கான்மாசிபங்குனியின்மட்டு - மமாவாசைமுன்னே
டும்பின்னும்பாராய்-தொடுத்துப்பார்நிலவுப்புக்கதிராய்ப் பூத்துத்
தோன்றுகின்றநாடனிலேமழையுமாசா தெடுத்துப்பார்குளிச்சிகொ
ண்டெழிமப்பூவிலில்றலத்திலீசன் விந்தைச்சையோகித்துவடித்த
வுவர்சத்திகவளீகரித்துவந்ததுநல்விறவுப்பின் மகிமைதானே.(உஎ)

மகிமையாமூசர முமீசனுப்பை-வாங்குமுன்னேயதிகமாஞ்சை
யோகத்தால்-பகையானசத்திக்குமிரவிமுத்திரை-பாடிநாநாதிசெய்
யப்படிகமூன்றி-யுகமுடிவுநமக்கென்ற வீசனுப்பை யுட்கொள்ளமா
ட்டாதேயூசாந்தான்-வகையானமஞ்சணின்ற வன்னமெல்லாம்-வரு
ஞ்சுத்தவெண்மைநிறம்வாங்கிப்போமே. (உஅ)

வாங்கிப்போமூசரத்தில்வெண்மையில்லை மஞ்சளுக்குச்சிவக்
கின்றமார்க்-மில்லை- ஏங்குகின்றதீயிலிடக்கருத்துபோகுமிந்தவகை
வாதிகள்கண்டெடுக்கமாட்டார். நீங்கிப்போகாதபடிஈசன்விந்தை-
நிலவுப்பைக்கிருகித்துநிற்கும்பூநீர்பாக்கிக்காவளையல்செய்வோனு
ப்புவேறாய்ப்பண்ணு வோனந்தவுப்புப்பாழதாமே. (உகூ)

பாழென்றுசொன்னதென்ன புலத்தியாகேள்-பரமசிவனுப்பும
ங்கேகைத்திடாது, வாவென்றசுண்ணம்புகாரசார மண்ணன்றோ

நிலவுப்பின் மருவிக்கொள்ளும், கோனென்றசலம்விடுவொருலேக்குள் வைப்பார்-கொடுங்காரந்தானடக்கிக் கொடியகைப்பாம்தானென்ற உப்பை எடுத்தொன்றுமில்லே - தண்ணீரில் மண்கலந்தாற்றாழ்வு தானே. (கூ0)

தாழ்வில்லாப் பூநீரைச்சுன்னமென்று, சாற்றுவார்தழைகளி லேதானேபூட்டி - வாழ்வுபெறச்சலமெடுத்து வேதைப்பார்ப்பார்-மைந்தனேயதினலேவன்னமில்லே தாழ்விலாச்சத்தியுவர் சாரத்தெண்ணெய் தான்கலந்துசிவசுன்னந்தணிந்துபோச்சு, நாளிலேசிவவுப்பைச்சத்தியுண்டு-நாரிமருந்தேபெரிதாய்நடப்புமாச்சே. (கூக)

நடப்பானசத்தியெனுஞ் சாரம்விஞ்சி-நற்சிவனற்காரமன்றே நாட்டமாச்சு-தடிப்பானகாரத்தையுண்டசாரந்தன்குணமுமாறியன்றேதவறிப்போச்சு-அடைப்பானகானகத்திற்புலியுங்கண்டே - யப்புலியாற்கானகமுமழிந்தாற்போல-உடற்போனலுயிர் நிலேயாவாறுபோல ஓகோகோகாரசாரங்கள்போச்சே. (கூஉ)

போச்சென்றுமலேயாலே சத்திசாரம்-புட்பிக்குநாளேயிலேபூண்டுபொருவாய்ச்சுதென்றுகடனீரைக்கவிழ்ந்துமேகம்-வாங்குகின்ற தன்மைபோல்வாங்கும்பூநீர், நீச்சென்னுஞ்சிவனுப்பைச்சத்தியுப்பை-நிளேவாகவெவ்வேருய்ப்பிரித்துவாங்கி- ஆச்சென்றயந்தவகையுபாயுமெல்லா மைஞ்சாங்காண்டத்துறைப்பேனறிந்துகொள்ளே.

கொள்ளப்பாகடைசியஞ்சாங் காண்டத்துள்ளே-கோள்சிறிதுமில்லாமற்பிரித்துரைத்தேன் எள்ளளவுதவருமல் சொல்லினேனு-லீசுனுப்பைஎடுக்கின்றவியல்பைஎல்லாம், தள்ளறக்கான்சொன்னபடியேநீயுஞ்-சாதித்துக்கற்சுன்னத் தொழிலேப்பாருகொள்ளற்கமற்றவெல்லாமுப்பேயல்ல-கூறுகின்றமதிவெண்பாநூறும்பாரே. ()

## கல்லுப்பறிதல்.

நூருனவுரோமரிஷியைந்நூறும்பார்-நுணுக்கமதிலறியவென்றுலிந்நூல்பாராய் - சாருனமுப்பதிலேகைபாகங்கள் சவுமியமாஞ்சாகரத்திற்கலேப்பாருய் - பேருனவின்னுமற்ற நூல்களெல்லாம்-பேசாதுகருங்குருவும்பிடித்தநன்ருய்த்-தேறுதுசிவவுப்புத்திறந்திடாது-செய்பாகங்கைபாகஞ்செப்பிடாதே. (கூ௫)

செப்பினேனுப்பினுடசெய்கையெல்யாஞ் - சிவவுப்பேமுதலேஞ்சுஞ்சேரச்சொன்னேன், உப்பெல்லாம்வழலேயென்றுசித்தர்சொன்ன-ரோகோகோநிலவுப்புத்தானுமொன்று - தப்பில்லாக்கல்லுப்புத்தானுமொன்றுசாரமெனும் பூரமாம்-வெடியுப்பொன்றே அப்பனேயிவைகளெல்லாமாதியுப்பு - மவையுடனே சிவவுப்பாமதுவுமொன்றே. (கூசு)

அதுவென்னசிவசுன்ன மாகாசத்தை-யடக்கினரெடுப்பதற்கத்தாமென்றுயிதியுடனேசொன்னக்காலெடுத்திடாரோ - மேதினியிற்

சிரிதுவித்தாரமென்றேஉதவிசெய்வார் தங்களைப்போலுமுண்டாக்கி யொளித்திட்டாரொன்றானவுப்பைத்தானே. (௩௭)

ஒன்றானவுப்பொன்றுதீட்சையொன்றெனவொளித்தாரேபரி பாடைக்குட்புதைத்தே - எண்ணாயிரத்திரட்டிதிருமந்த்ரத்தையிரு நூறுத்திருமூலர்பாடிவைத்தார்- வண்ணான்றானுப்பைவெளியாகச் சொன்னான்-மருவிலொருதிரைமறவாயுரைத்தசித்தர் சுண்ணம்பை ச்சுத்திசெய்யநீருஞ்சொன்னார் சத்தவுப்பைஎடுக்கும்வகைசொல்லி டாதே. (௩௮)

சொல்சட்டைமுனிவரிருநூற்றிற்றீட்சை - தோன்றுமென்று கிழித்தாரேதோடந்தோடம்- வல்வராற்றீட்சைகிழிபட்டபோதே- மற்றவர்கள்சொல்வதற்குவாயுண்டாமோ - சொல்லுமகாவாக்கியந் தான்கொங்கணன்றான் செப்புகின்றநூலெல்லாமுப்பேயென்றால் - வெல்லரிதுநந்திகண்டொருமுந்நூற்றில்- லெருட்டினார்மிகச்சற்று மின்னினாரே. (௩௯)

மின்னினார்மச்சமுனி நூன்மறைப்பு-வெட்டவெளிசவுக்காரமெ ன்றேசொன்னார் - தனனிமையோற்போகருமேகாரசாரந்தா மென் றேபேசினார்தப்பில்லாமல்-கன்னன்மொழிச்சிறுபிள்ளைச்சுந்தார்தா ங்களிச்சுன்னமென்று சொல்லிக்காட்டிவைத்தார்பின்னுமற்றசித்த ரெலாம்வழலைஎன்று-பேசினார்பரிபாடைப்பேதத்தானே. (௪௰)

பேதத்தைக்காண்பதென்றேகற்சுண்ணம்பைப் - பெரியசத்து வாங்கிமுத்தேபிரிப்பதென்றே தாதுற்றமதிசாரந்தந்நிற்றாக்கிச்ச முத்திரமாஞசிவகங்கை- சார்வதென்றேசூதத்தைமணியாக்கிஎமபீ சஞசூட்டிஒருகுருவாக்கித்தோமில்லைபம்பொன்வாதத்தைக்காண்ப தென்றே-காயசித்திவாகாகச்செய்வதென்வயசுநூறே. (௪௧)

நாறானவயசதிலேலையம்பதாண்டுநோக்கமில்லா நித்திரைக்கு ளொடுங்கிப்போகும்-கூறானபாலர்முதற்பதினாறாண்டு-கொள்வார்க கத் தறிவில்லாப்பருவமாகும் - நோானமுப்பத்துநான்காமாண்டு - நிறைந்தவர்க்குசசுகதுக்கநினைப்போகோடி பேறானவிதிவெந்தநா லைப்பாரப்பீர்-மெய்மக்காண்ஞானகுருபின்செல்வீரே. (௪௨)

பின்சென்றுநிழலபோலத்தொடர்ந்துகாத்துப்- பேசாதமவுன ரகசியத்தைக்கேளும-முன்சொன்ன-வழலையுப்பைப்பிறகேகேளு மூ லவிந்துவாசியின்றன்மிடிவைககேளும் தன்செயல்விட்டுஞ்செயற்ற னித்துநிலலுஞ்சாத்திரமானகுப்பைகளைத்தள்ளிப்போடும் - என் சொலலுமைநநூறும்ணங்கிப்பாரு-மிணக்கமறிந்திணங்கியிருமிகத் திற்றானே. (௪௩)

இகத்திலுற்றமுடியுப்பைஎடுக்குமார்க்க- மெள்ளளவுஞ்சொல லமாற்சதத்ராலலாம-மகததுவமாம்வழலைநிலவுபபேயென்று வழூ த்தினார்சவுக்காரவைப்புமார்க்கம்-சுகமதாய்ச்சிவசுன்ன நிலவுப்புக்

குட் - டோற்றுமதனாலதனைச்சுற்றியாக்கப் பகுத்தசிப்பியண்டனீர்
தேசியூசிபலபலவாஞ்செயநீரிர்பாடந்தானே. (௪௪)
பாடமென்னப்புடமெரிப்புச்சுண்ணாம்புக்கல்- பாய்ச்சியேநீர்வி
டுதல்சுடரிவாட்டல்-ஈடமென்னவிதனாலேசவுக்காரத்தி-லெண்ணெ
ய்கக்கும்படிமுடித்தெடுப்பார்சுன்னம்-நாடுகின்றசுன்னத்தாலுப்பை
க்கட்டி - நன்றாகதாளகல்வங்கங்கட்டி - ஆடுகின்றபடிசேர்த்துச்சிந்
தூரித்தே-யாறேழெட்டொன்பதுமாறுவாரே. (௪௫)
மாற்றுகுமிந்தமட்டுங்காணவென்றால்- வழலையுப்புநிசமாகவை
த்தாலுண்டு-காற்றானவழலைசவுக்காரந்தன்னை- கந்தல்கந்தலாய்ப்பிரி
த்துக்கசடர்சொன்னார்- கூற்றானமண்ணுக்குந்தண்ணீருக்குங்குடி
த்தவெண்ணெய்க்காமற்குளிர்ச்சிசந்தார்- பார்த்தாவதொன்றுமில்
லைவண்ணானுக்குப்-பழஞ்சீலைவெளுப்பதற்காப்படித்திட்டாரே. ()

## பரங்கிசவுக்காரம்.

படித்திட்டவுலகத்தார்மகாசீனத்தார்- பரங்கிசெய்தசவுக்கா
ரம்பண்பன்றுமால்-தடித்திட்டநிலவுப்பைக்குறிச்சிப்போட்டான்சா
ரமதில்வெடியுப்பைக்குறிச்சிப்போட்டான் - வெடித்திட்டகல்லுப்
பைக்குளிரப்போட்டான் - வீணாகற்சுண்ணமிகவும்போட்டான் -
எடுத்திட்டவெண்ணெய்தனைமிதக்கவிட்ட - னென்னசொல்வேனு
ண்டைமிகவெடுப்பாச்செய்தான் - மடித்திட்டபுத்தியினான்மயங்கிப்
போனான்-மாறாட்டமாச்சுதிந்தவழலைதானே. (௪௭)
வழலைமுறைநவரிசையாய்ச்செய்தாலுந்தான் - மக்களே தங்கம்
விட்டால்வன்னமில்லை-விளவென்றுசொன்னதென்னவாகாசித்தின்-
விந்தென்றவீசனுப்பைவிட்டதாலேதொழின்முறையாய் முடித்து
வைத்தவழலையையா சொர்ன்னமல்லாற்சொர்ன்னமுண்டுசுயம்
பேயானால், பழமென்றரசனையடாவீசன்விந்து பட்டவிடந்தொட்
டவிடம்பசும்பொன்னாமே. (௪௮)
பசும்பொன்னேமாற்றதிகமாணியில்லை - பருகினாலூழிகண்ட
பாமனாவீர், விசும்பென்றவாகாசவுப்புப்போயின்-வெடியுப்புநிலவு
ப்பும்வீணாமையாநிசமாகச்சொல்லவில்லைசவுக்காரத்தி-னெடுநாளா
ய்நீருழைத்துநின்றாலும்மே-நசையிரசம்வேதைபிடமுடியாதையா-
நல்லபுத்தியுங்களுக்கானான்சொன்னேனே. (௪௯)
நான்சொன்னே னென்றெண்ணி விடவேவேண்டா - நந்தீசரு
ரோமரிஷியைநாறும்பார்-வான்சேர்ந்தவுப் பெடுக்கவையைச்சொ
ன்னான-மறதிகொண்டுமாய்வதுதா னென்னேயப்பில் தான்சொன்ன
படிக்குவிந்துநீதான்பார்த்தாற்-சாண்வயிறுவளர்ப்பதல்லாற்தவங்
கிட்டாது - என்சொன்னேனிவ்வளவும்புலத்தியாவல் - வியமனைக்
கோன்றெந்நாளு மிருக்கவன்றே. (௫௰)
இருக்கவன்றோபிரமவித்துச்சிவமாஞ்சுன்ன - மெடுங்களென்
றேயடிவைத்தேன் கடைக்காண்டத்தில் குருக்களொருபுத்தியுனக்

இருக்குமாகிற்-கூற்றென்னுஞ் சமுசாரவலைக்குட்பட்டுப்-பெருக்கி மாயுண்டுடுத்துச்சாதற்கோது பிரமையுனைத் தொடராமற்பேசக் கேளு, தருக்கொளுயர்தாதுவன்ன வழலைப்போக்குத்-தனையுரைப் பேனதையறிந்து நீசெய்வாயே. (ருக)

செய்யவேவழலைவிட்டொன்றுருசுகாணுன் - செயமானதுருக விட்டோன்பொன்னைக்காணுன், மெய்யானவேமப்பால் விட்டானு லுல்வீணுகுஞ்சூதமுத பாடாணங்கள், சையோகரசபீசமில்லா வேதை-சாதகமாவொன்று முதலைஞ்சுகாணும், கையாரப்புடத்தில் வைக்கப்புகைவதன்றிக்-காரியம்போலதிலேகழன்றுபோமே. (ருஉ)

பூநீர்த்தீட்சை.

சழன்றுபோகாதபடி வழலைமாக்கங் காட்டுகிறேன்கற்சுன்னம் படித்தானென்று, தழைந்தோங்கும்படிநல்லவமுரியோட்டிற்றுனரை த்துக்கலக்கிவைப்பாய் தாழ்வில்லாமல், குழைந்துபோகாதபடி தெளிவைவாங்கிக்-கொட்டப்பாதீட்சைசெய்த புட்பமெட்டும், மூழ ன்றுபோகாமலே கலக்கிக்கொண்டே - யுத்தமனேசெயும்வகையை யுரைக்கக்கேளே. (ருங)

கேளப்பா மேலான தீட்சையுப்புக் - கிரமமதாய்ப்படியிட்டுக் கிண்டிப்போடு ஆளப்பாதீட்சையென்ன வென்பாயாறு-லறைகடலி னுப்பன்றோ வாயினுதம், தூளப்பாகடைவது பங்குனியின்மட்டுந்-துரிதமாரவியில்வைக்க வுப்பேயாகும், ஆளப்பா வுப்பெடுத்துக் கீறிப்பார்த்தே யடியினடுவெடியுப்பு முடிமேல்வையே. (ருச)

வெடியுப்புத்தீட்சை.

மேலானமுடியிலஞ்சுபலமேயாகு - மிச்சமதாவடியிலே பலந் தானெட்டுக்; கேளானகடுவிணங்கன்படிதானென்று-கொட்டப்பாச மதியிலே யிட்டுமூடி நாலானமேன்மூடி சீலைசெய்து - நாறெருவிற் புடம்போட நீற்றுப்போகும், மாலானவண்டநீரிட்டேயாட்டி-மகத் தானவில்லைசெய்து புடத்திற்போடே. (ருரு)

புடம்போட்டேயாறினபி னெடுத்துக்கொண்டு புதியவோரமு ரியிலே கரைத்துக்காச்சித், திடம்பெற்றுக்கம்பியதாய்க்கட்டிப்போ குந்-செய்யுப்பி லரைப்படிதான் றாக்கிக்கொண்டு - குடநிறைந்த வெண்ணெயோரரையாழாக்கிற் குழையவேகலக்கி நன்றுவரைத் துக்கொண்டு, நலங்காட்டும்வேகாத வழலைநீறைத் - தாச்சிவிட்டிடு வாய் தாழ்வில்லாதே. (ருசு)

இல்லாமற் போகாதே யெண்ணெயுப்பை - யெரித்துமெல்லக் காச்சிடவே யிருக்கும்பாராய், உல்லாசமாகவே யண்டம்போலவுரு ட்டியேரவிழுகத்தி லுலரப்போடே, எல்லாருமிந்தமுறைபாடமா ட்டா-ரிந்தன்றோ வீசனுப்புக் கீடாச்சொன்னே, வல்லவராமச்சர் கொங்கணர்தாஞ் சொன்ன - வழலையிந்த முறையில்லை மகிழ்ந்து பாரே. (ருஎ)

சவுக்காரம்.

பாரப்பாவிப்படியே சவுக்காரத்தைப்-பாடாமன்மறைத்தவரே வழலைமார்க்கம், நீரப்பாநிலவுப்பேவழலைக்காதி - நினறதிறைற்றுரு சைமுந்திக் கொல்லுங்கொல்லும், போப்பாதுருசாலே சூதங்கட்டும்-பேய்மக்காள் சூதத்தாற்றங்கசீறும், தாரப்பாதங்கமிட்ட சிந்தூரத்தைத் தாக்கினலைஞ்சதுவுந் தப்பாதன்றே. (௫அ)

தப்பாமல்வழலைசவுக் காரசுன்னஞ் - சமுசயங்க ளில்லாமல் வெளியாச்சொல்வேன் மெய்ப்பான கும்பிடுங் கற்சுன்னமார்க்கம் விள்ளாதேமறைத்தாரே சித்தரெல்லாம், அப்பாகேள் கிளிஞ்ச லெனுமுமைதன்னை-யடைவாகச் சுத்திசெய்யும் வகையாதென்றால் உப்பானவுவருடனே கற்சுண்ணும்பை யுணர்வாகத் தண்ணீரிற்கலக்கிக் கொள்ளே. (௫௯)

கிளிஞ்சிற்சுண்ணம்.

கலக்கியதிலூமை விட்டெரிப்பாய்நீயே-கன்மஷங்களொருபுறிதுங் காணுதோடு, வலுக்கமுத்துவீரமுடன் சீனஞ்சூடன்வவருற வே நவாச்சாரங் கல்லுப்போடு, பெலக்கவேவகைவகைக்கோர் பலமதாகப் பிசகாமற்கிளிஞ்சிலைஞ்சு பலந்தானையா, இலக்கமுள்ள வண்டநீ ரெருக்கம்பாலின் - றெளிவுவிட்டுமுன்மருந்தைத் திடமாவாட்டே. (௬௰)

ஆட்டியேசிப்பிக்கு மேலுங்கீழு-மப்பிப்பின்னூறெருவிற்சிடத்தைப்போடு, நீட்டியவோர் சுன்னமுமாமந்தநீற்றை-நினைவாகவெண்கருவா லரைத்தேயூது, நாட்டியேகடுஞ்சுன்ன மாகக்தட்டு-நாலாறுதினமறைத்துப்புடததிற்போடு, தாட்டிகமாக்கடுஞ் சுன்னஞ்சிப்பியாசசு-சாதகமாவின்னமொரு சுன்னஞ்சொல்வேன்; கூட்டுடனே யண்டங்களைந்துவாங்கிக்-குணமான மீஙகலன்பாத்திரத்துள் வைத்தே. (௬௧)

அண்டச்சுன்னம்.

வைத்தவுடன்பழச்சாறு படிதானென்று-வாகாகமுழுகவிட்டதனின்றாயமை - பெறறகடுங்காரசீனம்மிரண்டும் - பொடிசெய்தே போகிட்டுப் பழச்சாறூடு, குற்றமில்லாக்கடுவெயிலி லேழுநாள் வை, கூசாமலண்டமெலா முருகிசசாற்றில், அத்தமென வுறைந்திருக்குமெடுத்துக்கொண்டே-யண்டத்தின் சவ்வெல்லாமறுத்துப்போடே. (௬௨)

அறுத்தபின்புமூன்றுநாள் ரவியிலிட்டே - யப்பனேயண்டத்தினீறுதன்னை, மறுத்தவிர்த்தகல்வமதி லிட்டேநன்றாய்-வளமான வெறுக்கம்பால வார்த்தேயாட்டி, குறிக்குமொருசாமமட்டு மரைத்தெடுத்தே-குணமாகவில்லைசெய்துரவியிறபோடுசெறித்தபின்புமேன்மூடிச்சீலைசெய்து-சிறுபிள்ளாயைம்பதெருப் புடத்தைப்போடே.

போட்டதனையாறிய பின்பெடுத்துக்காண்டு - புகல்பத்துக் கொன்றுகவீரங்கூட்டி, நாட்டமுடன் வெண்கருவாலரைத்து வில்

லை நல்லிரவிதனிற்காயிற் புடத்தினிறும், தோட்டமுனெண்பதெருப்புடத்திலையா - சிவசிவாகடுஞ்சுன்னமண்டந்தாமுங் கூட்டிவிடுமுற்சிப்பிச்சுன்னத்தோடு-கூர்மையுடனிச்சுன்னங் கூடச்சேரே. ()

சேரப்பாவிச்சுன்னந் தனக்குநேராத் - திடமானநவாச்சாரஞ்சேர்த்தேயாட்டில், கூராப்பாநெட்டங்கிப் பனிநீராகுங்கோபமெனுஞ்சிப்பிநீர்கொடுஞ்சுறுக்கு-வீரப்பாவண்டவுப ரசத்திலாதி-வெடியுப்பைக்கட்டுதற்குவிந்தமிங்நீர்-நேரப்பா விந்நீற்றைப்பதனம்பண்ணு-நிசமான வழலைமுறை நிகழ்த்துவேனே. (௬௫)

வழலைச்சுன்னம்.

நிகழ்த்துவேன்முன் சொன்னசவுக்காரத்தை நிலைபெறுகற்சுன்னம்பாண்டத்திலிட்டு, மகத்துவமாஞ்சவுக்காரங் கிளியாய்க்கட்டிவாகாகவைத்ததின்மேற் சுன்னங்கொட்டித், துகளில்படிநீர்வாருபொங்கிநீறுஞ்சுகமாகநீறிய பின்னெடுத்துக்கொண்டே இதத்தினிலே நூறுதரநீறச்செய்யினென்மகனே சவுக்காரமென்புமாமே ()

எலும்புபோலேயிருக்கு மெடுத்துப்பார்க்க-வெண்ணெய்க்கக்கிமேற்படார்ந்துதறுத்தேநிற்கும்-சிலபூண்டாமல்லிகைப் பூச்சாறுவாங்கித்-திறமானசவுக்காரநனையப்போட்டுக்- குலுங்காமரவிழுகத்திலெழுநாள்வைத்து; குணமானமல்லிகையி னிலையைவாங்கி, அலம்பாமற சீலையிலே பரப்பிக்கொண்டே-யதின்மேலேசவுக்காரக் கட்டிவையே. (௬௭)

கட்டிலுக்குமேலுமந்தவிலையான்மூடிக் - கனமானகிளிபோலேகட்டிக்கொண்டு-சட்டியன்றிப்பானையிலே நெல்லுமிட்டுத் தண்ணீரும்வார்த்தரிய சவுக்காரத்தின்-பொட்டணத்தைதொங்கவிட்டு மேலும்மூடிப் - புகையாமற்றீயெரிப்பாய் நெல்லிதாவி திட்டமாயதன்மேலேபடியவேகுந்திடமாகவெந்தபின் யிறக்கிடாயே. (௬௮)

இறக்கியே இந்தவிதமூன்றுவிர்த்தி யென்மகனேயவித்தவித்துநெல்லவிக்குள்-மறக்காமற் சுன்னம்படிதானிட்டுவழலையைவைத்ததின்மேலே சுன்னங்கொட்டித்-திறக்காமன் மேலுமொருசட்டிமூடித்திறமாகச்சிறு தொளையிட்டதையும்பின்பு, பிறிவறவேமல்லிகையினிலையான்மூடி-பிணங்காமற்கொதிகிளம்பநீரும்வாரே. (௬௯)

நீர்வார்த்தேயடுப்பிலிட்டுக்காச்சுகாச்சுநிசமான கச்சுன்னநீறுமட்டும்-பேர்பார்த்துமுன்போலேசுன்னமிட்டுப்-பிசகாமற்றொளையிட்டசட்டி மூடிச்சீர்பார்த்துநீர்விட்டுநிற்றுநிற்று-செயலோடேபதினைந்து தாமுமைய-நேர்பார்த்துநிற்றுகின்ற - போதெல்லாநீ-நிலைகிளியாய்க்கட்டிவைத்து நிற்றுவாயே. (௭௰)

வாயாரநிற்றுகின்றசவுக்காரத்தை மைந்தனேய்வித்தெடுக்குமார்க்கஞ்சொலவேன் - தாயானமல்லிகையி னிலையைவேறு - தானரைத்துக் குகைபண்ணிக்காயவைத்துப் - பேயான சவுக்காரமதற்

குள்வைத்துப் - பிசகாமற்சீலைசெய்துசட்டிக்குள் ஓயாதுகிளிஞ்சி னிறதனைக்கொட்டி-யுற்றகுகைவைத்ததின்மேலுமிகிர் கொட்டே. ()

கொட்டமாசீலைமண் நன்றாய்ச்செய்து-குலுங்காமலடுப்பிலிட் டொருசாமந்தான்-விட்டாதீயாறவிட்டுப்பாரு-வெந்திருக்குஞ் சவு க்காரமதனைவாங்கித், தட்டடாவம்மியிலே பொடித்துக்கொண்டு- சாரவெடியுப்புத்ராவகத்திலேயா - மட்டடாசாமமொன் றரைத்து வாங்கி- வளமானவில்லைமிகவிலேசாய்ப்பண்ணே. (எஉ)

வில்லைபண்ணியண்டத்தின்பொடிக்குள்வைத்து - மேன்மூச்சு ண்ணும்புசசீலைசெய்து-நல்லவொருபத்தெருவிற்புடத்தைப்போடு- நலமானசுண்ணம்போல் வெள்ளையாகும்- அல்கலில்முன்வைத்தசிப் பிச்செயநீரொன்னு- மதைவிட்டுச்சாமமொன்றாட்டிப்பின்பு - வில்லை பண்ணிக்காயவைத்து முன்னுள்வைத்த - வீறானகிளிஞ்சிலண்ட சுன்னத்துள்ளே. (எ௩)

உள்ளானவீரமொரு கழஞ்சுபோட்டே யூறவெருக்கம்பாலா லரைத்துக்கொண்டு - தள்ளாதசவுக்கார வில்லைக்கேதான் - சாதக மரக்கவசமிட்டுச்சீலைசெய்து - மெள்ளவேபத்தெருவிற்புடத்தைப் போடு-வெண்ணீறுபோற்சுன்னம்விதயமாகும், துள்ளாதேவமூலை யின்றசுன்னங்கண்டாற் - அருசுதன்களிம்பற்றுச்சுன்னமாமே. (எச)

சுன்னமோரைந்தென்று முதற்காண்டத்தில் - சொல்லினேன் சவுக்காரச்சுன்னஞ்செய்ய, வன்னமென்னவைந்து சுன்னங்குகை யாப்பண்ணி-வழலையைத்தான் குளிஞ்சிலண்டசெயநீராட்டித், திண் ணமாக்குகைக்குள்வைத்துப் புடத்தைப்போடு - சிவசிவாகடைசியி லேசெயமாஞ்சுன்னம், அண்ணலுமைக்கே யுரைத்தாளிந்தவித்தை- யம்மையுமென்றனக்கன்பாவறைந்திட்டானே. (எரு)

## வெடியுப்புத்திராவகம்.

அறைந்திட்டவெடிப்புத்திராவகந்தா னப்பனேயன்பாகச்சொ ல்லக்கேளு, திறம்பெறுநல்வெடியுப்புப் பலந்தான்பத்துச் சீன மதை, யிணங்கனுக்குச்சேர்ப்பாயொன்று, உறைந்திட்ட சவுட்டுப் புப்பலந்தா னென்றேடுத்தமனே வெண்காரப் பலந்தானென்று- அறைந்திட்ட கல்லுப்புமிணங்கன்நேரா-வரியசீர்வழலைபலங்காலா மன்றே. (எசு)

காலாகுந்துருசு வெள்ளையன்னபேதி - கமகமென்றுபரிமளிக் குங்கற்பூரந்தான்-நாலானதிட்டையெல்லாம் வகையொன்றுக்குநன் றுக்வொருபலமா நிறுத்துக்கொண்டு - சூலானசிப்பியோடுருவியப் புந்துக்குவாய் பலமொன்றுத்துகளினல்ல - மாலானமருந் தெல் லாம்பொடித்தொன்றாக்கி-மைந்தனேகுப்பியரைப்பங்குமாட்டே.

மாட்டியேயடுப்பேற்றி யெரிநேர்பாக - மைந்தனே மேற்குப் பிவாய்மூக்காநீர் - ஊட்டியே புகையுடனே வடியுநீரை - நினைவா

கப்பிங்கானினேராவாங்கு தேட்டமாய்வழலையிட் டெரிக்குமிந்நீர்
செப்புகிறேன் வழலைக்குத் தீட்சையாகும் - தாட்டிகமாவிருப்பன்
சாண் வயிறல்லாமற்-சமுத்திரமெல்லாம் வயிறேசண்டிமாடே. ()

மாடோகேள்வழலைசவுக்காரச்சுன்னம்-வகையாக கைம்முறை
யாவைத்துக்கொண்டு - நாடோடே நீயிருந்துவாழவேண்டினல்ல
சவுக்காரமெனுஞ்சுன்னத்தாலே கூடாத துருசினுப்பை முன்னே
கட்டிக்-கொண்டு நல்லசூதத்தைக்குளிகையாக்கித் தேடவேகெந்தி
தங்கநாகஞ் சேர்த்துச் சிந்தூரஞ்செய்து நவலோகத்தீவாய். ()

நவலோகமொன்றுக்கு மொருமாவீந்தா-லைாறு மாறுகு நல்
லவேதை-பூலோகத்திருந்துபெண்டிர் பிள்ளையோடு-போசனங்கள்
செய்துவரிற்புத்தியுண்டாகும்-தவமான யோகநிட்டை காயகற்பந்-
தன்னிலேமனதுவைத்துச்சார்ந்தாயாகிற் :சிவமானவாகாகவுப்பை
த்தேடித்-தேகசித்தி முதலிருபத்தைந்துஞ்செய்யே. (௮௰)

செய்கின்றசித்தியோ ரிருபத்தைந்துஞ் - சித்தருக்காமென்று
சொன்னபொதிகைத்தேவே ஐயமில்லாதடியேனுக் கருள்கவென்ன
வதன்பெயரைச்சொல்லுகிறேன் புலத்தியாகேள்மெய்யானசிவதீட்
சைசத்திதீட்சைவேதாந்தஞ் சித்தாந்தமேலுங்கீழும் உய்யவேமந்
திரசித்தி-மவுனசித்தியுண்மையுடன் காயசித்தியுடநீகேளே. (௮௧)

உடனனவெட்டெழுத்து மஞ்செழுத்து முற்றவாதாரசித்தி
பிரசாதசித்தி-திடமான வானமசித்தி தத்வசித்தி-தேகசித்தியாதா
ரசித்தியோடுகுடமான குளிகைசித்திசொரூபசித்தி கூறியதத்வ
பிரசாதசித்தி-மடலானவாதசித்தியோகசித்தி மகிழ்வரப்ரசாதசாம்
பவத்தின்சித்தி. (௮௨)

சித்திதரும்போதசித்தி காலசித்திதிறமான ஞானசித்தியிவை
தானையா-முத்திதனைத்தருமிருபத்தைந்துசித்திமுதன்மையாஞ்சித்
தர்களுக்கெய்துமெய்தும் இத்தனையுஞ் சித்திக்கவேண்டுமென்று
லீசனுப்புஞ்சிவனுப்புமெடுத்தால்வாய்க்கும்-புத்தியிலாதுடல்வள
ர்க்கவேண்டுமாயின்-புகலுகின்றசவுக்காரப் போக்கைப்பாரே.(௮௩)

சிவசுன்னம்.

போக்கற்றசிவசுன்ன மில்லாக்காரம்-பொன்றருமோ வென்
றெனைநீபுகழ்ந்துகேட்டால் வாக்காரஞ் செல்லுதற்கு மனமோ
வில்லை மலையிலுள்ள்சித்தர்கடமறைவுத்தாகத் - தாக்கானசவுக்கார
வழலையென்று-சாற்றினதேயல்லாமனிசமேயென்று நீக்காமற்சிவ
யுப்பைத்தின்றேமென்று-நிலவுப்பைத்தின்னுமனிகழ்த்திறுரே. ()

ஆரணிந்தவேணியுடைச் சிவனுருப்பை யன்றைக்கேதின்று
விட்டதடியாமுப்பூ-நீரணிந்த சிவவிந்தைச் .சத்தியுண்டுநிசமில்லா
வளையலுப்பைப்பெற்றுணிலி - வாரணிந்தசத்தியே தாயுமானுள் -
வளையலுப்பைபிள்ளையென்றுண் மரித்துப்போச்சி - கூறணிந்தவா
காச:வுப்பைக்காணக்குடியிவிட்டுக்கும்பமெனு நாளென்றுளே. ()

கும்பமெனுமாசியுரந்திங்களேபங்குனி யிடபமேடமாங் குடி
சைபோடு-பம்பரன்போன் மனமுழன்று திரியவேண்டாம் - பாரத
னின்மடைவாயிற்பறவைபோல, வெம்புகின்றபசுமைநிற முற்றுப்
பாரு மேலெழுந்தவூசரத்தி நுணுக்கம்பாரு அம்பலவர்நடனமிடு
ஞ்சத்தம் பாரா-யறிவதற்குக்கடையிலைந்தாங் காண்டம்பாரே. ()

குருமுடிச்கும்வகை.

பாரப்பாசிவசுன்னம்பண்ணும்மார்க்கம்-பாடுகிறேன் குருமுடி
க்கும்பாகந்தன்னை-ஊரப்பாவெளிதிறந்துசொன்னிரானா - லொரு
பொருளுஞ்சித்தியா துரைத்தேன்சாபம் - சீரப்பாநற்சீடனானற
சொல்லு-தெளிவானலிங்நூலைத் திறந்துகாட்டு-கூரப்பாவறியானு
க்கிந்தாயானாற்-குற்றமுள்ளவெழுநரகிற் குடியாவாயே. (௮௭)

குடியாகப்போகாமலீசன்விந்து - கூறறியநிலவுப்பின்கூட்டம்
பார்த்து-அடியொடுகல்லாமவிக்காண்டத்திற்சொன்ன வடையாள
ப்படியெடுவாகாசவித்தை - இடியோடேபிறந்தவன்னி மிகுதியாவு
ண்டெடுப்பானேனெடுக்கின்றவெடையாதன்றால்படிமீதிற் பணவெ
டையா முப்பினாலே பாய்ச்சலாப்பூமி எல்லாம்பழுக்குமன்றே. ()

பழுக்கவேசிவந்துவுப்பாகுஞ்சுன்னம்-பாலகனே பணவெடை
தான்பார்த்தெடுத்துச் - சழக்கில்லாப்பொரு ளெல்லாமாயினாகந்-
தானறியப்பாறையுப்புத்தடையில்லாமல்-கொழுக்கவே எண்கழஞ்
சுநாதநாழிகொண்டுவந்து பாறையுப்பைக் குணமாச் சேர்த்து-வெ
ளுக்கவேகடைந்தீரைந்தோர்நாள்மட்டும்-வெயிலில்வைக்க வாடை
கட்டி மிதக்கும்பாரே. (௮௯)

மிதக்கின்றவாடைதனிலெடுத்துப்போட்டு முகுந்தநீர் முழு
தும்பீங்கானில்வார்த்துமதிக்கின்றபனியில்வைப்பா சந்திரனாளின்
மைந்தனே மூன்றுநாளானபின்பு - துதிக்கின்றசுத்தகங்கைநீர்போ
லாகும்-துகளிலதைவாயில் விட்டாற்கைத்திடாது - கதிக்கின்றவிந்
தைநீர்மற்றொருபீங்கானிற்-கனமாகவிட்டபின்பு நிகழ்த்தக்கேளே.

நினைவரியவாகாயசிவனார்விந்துநிலவுப்புக் கடுத்திருந்தநிசக்
காரந்தான்கனமானபிரமகற்பக் கற்சுண்ணாம்பைக்-கனகமெனுமதியு
ப்புபணந்தான்றூக்கிப் பனியதனில்வைசதசுத்த கங்கைக்குள்ளே-
பணவிடையாமுப்புட்டிரவி முன்பாகத்-தினமொருதாருகைவைக்க
த்தயிர்போற்சுத்தசலந்திரண்டிரவிதனிற்றீர்க்கமாமே. (௯௧)

தீர்க்கமாய்வயிரம்போற்கட்டிப்போகும் - திரண்டமுந்துமணி
போலேதிரட்சியாகும்-பார்க்கவேகண்கூசும்வயிரம்போலே - பரம
சிவனுப்பினதுபழக்கத்தாலே - மார்க்கமாவிளையெடுத்ததைஞ்சுசுங்கம்
வளர் குகையில்வைத்ததின்மேற்சீலைசெய்தே ஏற்கவேகவுதாரிப்
புடத்திற்போட்டால்-ஈசனுப்புச்சுன்னமதாயிருக்குந்தானே. (௯௨)

இருக்கின்றசுன்னமன்றோ வழலைச்சுன்னமே மதையுண்டாக்கு
மீசன்சுன்னம்திருப்பொதிந்தகாரசாகரத்தின்சுன்னஞ்-சிவசிவவண்

டபிண்டந்தெளிவாஞ்சுன்னம் பெருக்கின்றசத்திசிவன் சேர்ந்த
சுன்னம்பிரபலமாத்தாயின் விந்துசேர்ந்தசுன்னம் உருக்கினத்துக்
கர்திளனுமுகாரச்சுன்ன முற்றமண்ணுந் தண்ணீறுமுறுதியாமே.

உறுதியாச்சூதத்தைக்கட்டுஞ்சுன்ன-மொப்பிலாத்துரிசைமூந்
திநீற்றுஞ்சுன்னம் - மறுவிலாத்தங்கத்தையாட்டுஞ் சுன்னமாறவா
விநிமிளகத்துவாங்குஞ் சுங்கம் பருதிபோற்காயசுத்தி பண்ணுஞ்
சுன்னம்பாஙகாகக்கமனமிட்டுப்பாயசுன்னம்-சுருதி முடியவமிருத்து
தட்டுஞ்சுன்னந்-துகளிலதுபூரணமென் றியம்பலாமே. (௬௫)

இயம்புகின்றபாடாண மெட்டெட்டந்தா-வெண்மகனே சுன்ன
மதாவியைக்குஞ்சுன்னம்-யயம்பெறவேயுபரசநூற்மிரண்டுபத்தும்
பம்பரம்போலாட்டுவிக்கும்பரமாஞ்சுன்னம்-களிம்புதையு மூலோ
கங்களனைத்துந்தத்தங்-களிம்பற்றுப் படிகமதாக் காட்டுஞ்சுன்னம்,
செயம்புகலுமலைமரமண் செடிபூண்டெல்லாஞ் செம்பொன்னாற்செ
யும்பரம-சிவசுன்னம்மே, (௬௫)

சிவசுன்னந்தட்சிணா மூர்த்திமுன்னந்-செனகாதிருஷிகளுக்குச்
செம்புஞ்சுங்கம்-தவமானபதிநெட்டுச்சித்தர்க்கெல்லாஞ் சகலசித்து
ங்கொடுக்கின்றசுத்திசுன்னம் நவசுன்னந்துவாதசத்தைச கடந்தசுன்
னநாதாந்தகுண்டலிக்குணண்ணுஞ்சுன்னம் - பவமெந்நுங்கடல்கட
ந்துஞானதீபப்பரஞ்சுடராகின்றிலங்குபரமசுங்கம். (௬௬)

சுண்ணாம்பிற்கடுகிலொரு நாலுபங்கு - சூதமொருசேரதனிற்
றூவினக்கால் - அண்ணாந்துபார்த்திருக்கக்கிறிகிரொங்றே-யாடியேம
தமனையடக்கும்பாறு-அங்காந்துகிரியாதேயந்தச்சூத - பணுவளவு
மலையளவிலெடுத்துப்போட - விண்ணேந்துமேருவைப்போன்மாற
றுக்காணும்-வேதைகளின்றுமை கோடிவிள்ளொணாதே. (௬௭)

விள்ளவேயங்கியுடைச்சூதந்தன்னில்-வெந்திய மல்லய வெ
டுத்துப்பாலிற்போட-வெள்ளைநிறப்பாரிரண்டே யுறைந்துநிற்கும்
வெள்ளமுதைமூன்றுதினந் தின்றுயானல் கள்ளமன்றுதேகந்தான
ருணன்போலாங-காயசித்தியோகசித்திகைக்குள்ளாகும்-எள்ளளவு
ம்பிசகில்லை யூழிகால-மிறப்பின்றிச்சூதமுண்டிருக்கலாமே. (௬௮)

இருக்கலாம்வென்சிவனுமேவல்செய்ய - விவ்வுலகுமவ்வுலகு
மென்றும்போற்றப்-பெருக்கலாஙகைலைவாழீசன்பாகம்- பெற்றிட
லாஞ்சித்தருடன்பேசலாகும்- நெருக்கமுறுமாயிரத்தெட்டண்டந்த
ம்மை-நிமிடத்திற்சுற்றிவந்து நிலைக்கலாகும்-முருக்கவா மீசநுப்பு
முருக்கெல்லான் முத்துமேமடியவுப்பின் முடியவாறே. (௬௯)

ஆறானவிரண்டாங்காண்டத்துக்குள்ளே - யருவழூலக்குறுச்
செய்யுமார்க்கஞ்சொன்னேன்- கூறானமூன்றினிலேகற்பமூலஙகுண
மானவேடைபஞ்சீகரணஞ்சொன்னேன்மாறிலாநான்கினிலேயோக
ஞ்சொன்னேன்-மாசிலுப்பெடுக்கும்வகையைஞ்சு சொன்னேன்-தே

றுவாயுப்பெடுக்கும் வகையை நன்றுய்ச்- சிரான விந்நூலாற் சிவ முண்டாமே. (௱)

இரண்டாங்காண்டம்-முற்றிற்று.

ஆக-காண்டம்-உ-க்கு விருத்தம்-உ௱.

# மூன்றுங்காண்டம்.

சிவமானபூரணமே நாதவிந்து-சின்மயமா நின்ன ஒருபரமே யாதிஉவமானமில்லாதபரந்தனக்கே யுறவவாகிநின்ற ஒருநாதமந்த, நவமானநாதவிந்திரண்டுமொன்றுய்-நன்மைசெறி பரிதிமதிசுடர்க ளான-பவமறுமிந்நூன்மூன்றுங் காண்டத்திற்கப் பராபரனு மைங் கரனேகாப்பாமன்றே. (௧)

காப்பாகவிந்தநூன் முற்றும்பார்க்கிற்-கைகாட்டுமாரியன்போ ற்காட்டுங்காட்டும்-தோப்பானசாகாத காருனன்மைக்-குணத்துயர் ந்தபுலத்தியவசரமாமென்று நீப்புரியபரிசுத்தவமுதகங்கை நிலைபிற ந்தபூவழலை-முப்பூமார்க்கம்-மாப்பெரிய விந்நூலினூற்றுக்குள்ளே வளர்நடஞ்செய்பராபரமாஞ் சோதிகாணே. (உ)

சோதியாய்நின்றவழி தீட்சை எல்லாஞ் - சொன் மறைவோ ஒன்றுமில்லையைஞ்சாங்காண்டம், வாதியாம்வாமமது தீட்சைதீட் சை-வாமமென்றநாகமதுபூமிநாதம்- வேதியாநாதவிந்தண்டபிண்ட ம்வேதமதுநால்வேத மாறுசாஸ்திரம்-ஆதியாநாதவிந்தப் பட்டை யா-வாகராவிதிப்பிறந்த வண்டந்தானே. (௩)

பஞ்சீகரண தீட்சை.

அண்டமெனிலண்டமன்றுதியண்ட - மாகாசம்பிருது விதண் ணீர்போக்கற்ற-பண்டமெனிற்பண்டமன்று பரமேசோதீ - பகராத பொருளேயாநந்தியாவட்டம்- கண்டமேனியிற்கண்டமென்று-கல்லு கல்லுகருவாகி யைஞ்சாம்பிண்ட, தெண்டமென்று நினையாதேநக் திக்கல்லு, தெளிவானபிருதுவியா லொன்றுமாச்சே. (௪)

ஒன்றுன விருதுவிபத்துயிர்தானேறென்-றேகோகோவப்பீ ரைந்தச்சிரண்டாம் - வன்மைமிகுதேயுபத்துச் சீவன்மூன்றுவகை யானவாயுபத்துச்சிவனுன்காம்-அந்தரம்பத்துச்சிவனேரைந்தென் பராகரபஞ்சீகரணதீட்சையாச்சு பன்னரியபூதவழி தரித்துச் சொ ன்னேன்-பகரார்களாகாச வுப்பைத்தானே. (௫)

நாதவிந்து-அண்டபிண்டம்.

உப்பென்றுலுப்புமுதற்கற்பூரந்தா னுடனிருந்தாற் குமரிகறி சமைப்பாளன்றே-அப்பென்றுலப்பதினுலுப்புண்டாச்சு - தாகரப் போம் புளியிக்கேயாச்சுதப்பென்ற தீட்சைதசதீட்சைதானே-யறை வாதமொருவராலறியப்போமோ-மப்பென்று விரண்டாங் காண்ட த்தின்முப்பூ-மாசிலேந்தாங்காண்டத்தின் மறைப்பிராதே. (௬)

மறையாமற்சவுமியசாகாமுங்காணு-மதிவழியே தானறிந்துதீ ட்சையோதி - கறையற்ற தீட்சையில்லாப் பாதகர்க்குக் காணுதே

யொருநாளுங் கடினமாகும், மறுவற்றகர்ப்பூர சோதிமின்னல்-வா மத்தினந்தியொளி காணலாகும், மறையாத சோதிகடந் தப்பாற் சென்றுன்-மகத்தானகணபதியைக் காணலாமே. (எ)

காணலாந்துரியமொடு துரியாதீதங்-கனகமயசிதம்பரத்தின்மே லாம்பீடம், காணலாமாறுக்கு மேலாம்பீடங் - காதலனேகணபதியு மெதிரிற்றோன்றும், காணலாங்கோடானகோடிபூசை-கருதத்தோடு செய்தக்காற்குருவைக்காண்பாய் காணலாம்வங்கென்று பூசித்தக் காற்-கருங்குழல்வல்லபைநல்வரமளிப்பண்மன்னே. (அ)

கணபதி பூசை.

வல்லபையுங் கணபதியு முன்னைக்கண்டு-மவுனமந்திரமுபதே சித்தருள்வர்பாராய், அல்லலறவிப்பொருளை வெளியிடாதேயாம் ஓம்ஊம்சிவாவெனயானறியசொன்னேன்,சொல்லரியகணபதியின் பூசையாச்சு-துகளிலாப் பரப்பிரம பூசைதன்னை விள்ளது வேண படி செய்யினுச்சி-வெடித்து மரித்திடுவையித்துன்மையாமே. (௯)

உண்மையா முறுதிகொண்டுற்றுப் பார்த்தா - லோசோகோ தெரியுஞ்சாகரத்தினேர்மை, றுண்மையாவங்கென்று வாசியாலே யுறக்கும்பித்திடிலோர்பரப்பிரமவாயில்காணும் வண்மையா நாற் சாதியிடமுந்தோன்றும்-வாவாவாவங்கென்றுதம்பிப்பாயே. (௰)

பிரமன் பூசை.

தம்பித்தேயிரேசகபூரகமுஞ்செய்து - சாற்றுநெற்றிநேர்மை சுழிமுனையைமேவித், தம்பித்துவாசியை நேரிழுத்துவாங்கிச் சது ராகக்கும்பகத்திற் பாய்ந்துநன்றாத், தம்பித்தேயிடகலையிற் கும்பி த்தக்காற்சுற்றரிய பரப் பிரமசோதிதோன்றும் கும்பித்துவாசி யைமேற் கொண்டெழுப்பிக்-கோதறநின்றிடிலோர் குருக்காணும் பாரே. (௧௧)

குருவான சதுமுகனுங் கலைமாதுஞ்சீர்க்-கோடிரவிபோலநின் றன்கண்ணிற்காண்பா, யருவான வச்சபையிற் பீடந்தோன்று மங் கென்றுபூசித்துத் தரிசிப்பாயால், மருவாகிமலராகிப் பிரகாசிக்கு- மவுனமந்திரமுபதேசித் தருள்செய்வார்காண், கருவாளகருவையா வருபங் கண்டறிவாய்நமயவசிய ரூபந்தானே. (௧௨)

அருபமாநாத தரிசனமுமாச்சு-தரகரா பரப்பிரம பூசையாச் சு, சொரூபமாஞ்சங்கையில்லா மவுனமாச்சு-துகளில்சச்சிதானந்த வுருவுமாச்சு, தருபமாஞ்சாகரத்தி னேர்மையாச்சு-தானுபசொருப த்தின்மூன்றுங்காண்டம்,நிருபமாம்பூரகத்தைக்காணலாசசு-நிகரிலா ச்சதகோடி யுகங்கள்காணே. (௧௩)

விஷ்ணு பூசை.

காணேநீபூரகத்தைக் கண்டால்மோட்சங்-காணுயோசொற்பன த்தின்மூன்றும்பீடம், வாணேநீ மவுனசிவ யோகியாகி - வழியான

சபையையாவங்கென்றான்றி, மானேநீகும்பித்துத் தம்பித்தேதான் மைந்தனேயிரேசபூரகத்தாலொட்டிச் சேணேநீயங்கென்றே யொட்டிப்பார்த்தாற்-றெரியுமப்பாவிட்டுணுவின் சோதிமாதோ. (கச)

சோதியாமவுனகுரு சோதியையா-சுடர்கோடி காந்தியிலே வாசிவேகம், நீதியாஞ்சோதியிலேயறிவையொட்டி - நினைவாகப் பார்த்தக்காலொடுக்கங்காணும், பாதியாமோக்ஷமதிற்கும் பித்தாக்காற்-பளிச்சென்றுவாயிலதுதிறக்கும்பாரு, சாதுவாம்விட்ணுகாஓடணங்குகாண்பாயசமர்த்தாக விருவரையும்பூசிப்பாயே. (கரு)

பூசிப்பாய்கற்பூரதியவாசம் - பூரணத்தின்மலினமலர் சோதிசோதி, யாசிப்பாயவர்கடரிசனத்தைக்கண்டா-லப்பனே கேட்டதெல்லாமருள்வர்பாராய், ஆசரிப்பாய் மவுனகுருவுபதேசத்தையையனேயுனக்குய்யும்வகைசொல்வாரால், வாசிப்பாயுபதேச முனக்குசொல்லி-வண்மையுடனீநிற்கும்வகைசொல்வாரே. (கசு)

நிறுக்குமப்பாவாயிலதுமவுநத்தாலே நினைவாகவாசிகொண்டு தம்பித்தக்கால், அறிந்துபாரங் கென்றுகும்பித்தேதானமுதமிழியிரேசகபூரகமேசெய்தால், பறக்குமதுசுழுமுனையில்வாயில்காணும்-பார்த்தக்காலத்தின்பெருமைபகரொண்ணுது-சிறக்குமது சிகாரத்தின்வகாரசோதி-சிறப்பானசோதியிலேயறிவாய்பில்லே. (கஎ)

ருத்ரபூசை.

நில்லென்றாற் சும்மாதானிற்கப் போமே-நேரானசோதியிலே நினைவாய்க்கும்பி, அல்லவென்றால்நாகத்தில் ருத்ரன்ருத்திரி யவர் பெருமையிவ்வுலகிலார்தாங் காண்பார், வல்லமையாலவரொளியைச்சொல்லப்போமோ-மகத்துவமா மதிகோடி பிரபைகாணும், எல்லென்னுமவர்தம்மைமவுநமாக - வென்மகனேபூசிக்க முத்தியாமே.

பூசிப்பாய்வாசிமலராச்சித்தக்காற் புகழ்பெறவே யுன்றனைக் கண்டுபதேசிப்பார்-யாசித்துமவுனகுரு வுபதேசத்தை-யையனே சொல்லுகிறேன் வண்மையாக-ஆசரித்துநீகேளு வங்சிங்கங்மங்-கராராவநாகதத்தின் மவுனதாசசு-பாசமற்றுப்பரமபத சோதிதன்னைப்-பாலகனேபணிந்துநீபூசிப்பாயே. (கஅ)

மயேச்சுரபூசை.

பணிந்திடுவாய்சுழுமுனையின் பூசையாச்சு - பராபரமாம் விசுத்தியின்றன்பூசைகேளு - அணைந்திடுவாய் மயேச்சுரனை யைந்தாம்வாயி-லறைவயி மயேஸ்வரிதா னைந்தாம்பீடம், அணைந்திடுவாயைங்தென்னும் வாலறன்னை - யானறிவனங்கென்று வாசிகொண்டு குனிந்திடுவாய் கும்பித்துத்தம்பித்தாக்காற் - கோடானகோடிரவி மதிகாண்பாயே. (உ௰)

மதியான மதியையா ரவிதான் கோடி - மகத்தான நாதர்கடம் பரமவாயில்-துதியான துதியையா துரியமேரு-துரியமாம் பதவியது மவுநவாசி, விதியான மவுனத்தின் வாசி கொண்டு-வினையமாவி

மூத்துநீ கும்பித்தக்கால்-அதியானவதீதங்காண் வகாரசோதி-பரக
ராவங்கென்றுகும்பிப்பாயே. (௨௧)

கும்பித்துதம்பித்து மேருபாய்ந்தாற்-குணமானவாயிலதுதிற
க்கும்பாரு, நம்பித்தான்சொல்லிவிட்டே னங்கொன்றுந்தானன்றுன
விரேசகபூரகமுஞ்செய்தால் - வம்பித்துவாசியதுக்கிடமாமைந்தா-
வாயுவதுவெழும்புமடா-வண்டமட்டும்-தம்பித்துவாசியேநீ தாண்
டிப்போனாற் றமவாயின்மூடாதுதடைக்கட்டாமே. (௨௨)

கட்டாமேமவுனத்தாற்கும்பித்தாக்காற் கைலாசங் கொள்ளா
துபுகைபோற்கப்பும்-அட்டாமேயென்மகனே யண்டரண்ட-மங்கெ
ன்றும்கும்பித்தா லப்பாலோடும்-மட்டாமேயிருந்ததிறலைவமெதன்
ன-மவுனைவிட்டானமாயையிலேமாண்டு போவாய்- தட்டாமற்றம்ப
னத்தாலொட்டிபாரு-தடையறுக்குமவுனத்தாற்றாண்டிடாயே. ()

தாண்டியேமனக்கண்ணாற் பார்க்கும்போது சதகோடி பிரபை
யொளி சோதிகாணும்-மாண்டதொருமயேச்சுரன்றன்கொலுவிருக்
கு மகத்தானசபைவளர் மெய்ஞ்ஞானவீடு - அண்டியே யவன்றன
னைத்தரிசித்தக்கா-லப்போதே மாயையெல்லா மகன்றுபோகும்-தா
ண்டியே துரியமலர்கொண்டுபூசி- துரியத்தினமயேஸ்வரியை தெரிசிப்
பாயே. (௨௪)

தெரிசித்துப்பூசித்தாற் கும்பங்காணுங்-தெரியாத மவுனமெல்
லாந் தெளிந்தேபோகும் - அருச்சித்துக்கும்பத்தாலமுதஞ்சிந்து
மாச்சையாவுபதேசமருள்வர்பாருய்- பரிசித்துப்பால்முதமூட்டுவா
ர்பார்-பாலகனேசொல்லுகிறேன்மவுனவாக்கியம்-நாசசித்து நங்மங்
யங்சிங்கென்றேநீ-நலமாகச்செபித்துநின்று தெரிசிப்பாயே. (௨௫)

சதாசிவபூசை.

நலமாகச்சொன்னேன் மயேச்சுரனு மிந்த-நயமாக மயேஸ்வரி
யும் பிரகாசிப்பார்-வளமாசவிசுத்தி யுடைப்பூசையாச்சு - வளராறு
தாரத்தாக் கினையின்பீடம்-அலையாமலாதார மாறும்வாயி-லாக்கினை
யிற்சதாசிவத்தின் சத்திபூசை-வளமாகவாசியைநீயிங்கென்றேதான்
மாட்டாறுதாரத்தின்வாயிறுனே. (௨௬)

வாயிலாராதாரத்தாறுமவாயில் - வகையறியாச் சித்தர்களாற்
றிறக்கப்போமே, ஆயிலாதாரசிதம்பரத்தின்வாயி-லாயிரத் தெட்டி
தழதனையார்தான்காண்பார்-பாயிலதுபாயும் வகை பரிவாய்க்கேளு
பங்கென்றுவாசியையநீதம்பித்தக்கால் - பாயுமதுதோன்றுதுமைந்தா
சொல்வேன்-பகல்போலேதெரியுமாதாரம்பாரே. (௨௭)

பாரரியவாசியைநீ தம்பித்தக்காற் பகிராணுவாறுதாரத்தே
யுன்னை-ஆரென்றேகேட்பார்கள்சபையோரையா-வாக்கினையிற்றெரி
சனத்தை யரியவந்தேன்-நேரென்றுசபையார் மெய்ஞ்ஞான வீட்டி

ல்செப்புகாணுதியறவாழ்விப்பார்கள்வாரென்றுவாசிகொண்டு கும்பித்தக்கான்-மதிகோடிரவிமதிபோற்சோதிகாணே. (உஅ)

சோதியாமவுனசிவயோகசோதி சொற்பெரியசோதியிலேயங்கென்றேநில் - ஆதியாஞ்சோதிசொலவெளிதோவப்பா - வாதாரசோதியிலேயண்டசத்தம்-பேதியாதண்டபகிரண்டமட்டும்-பேசரியசெயபேரிமுழக்கங்காணும்-நீதிசேர் நடனசபையோகங்காணும்-நிகழ்த்தரியபதினெண்பேர்பூசிப்பாரே. (உகூ)

பாரையாவகமெனுநற்சுகங்கள் காண்பாய் பாலனேயகத்தீசன் பீடந்தோன்றும்-ஆரையாவறிவாகத்தியன்ற னேர்மை யறிந்தவனே மெய்ஞ்ஞானமவுனயோகி-தேரையாசதகோடி யோகம் பார்த்தேன்-செப்பரியவகமதனிற்றெரிசிப்பாய்காண்சீர்பெற்றமவுனகுருவுபதேசித்தார்-செம்மைமிகுகுருபூசையருளினாரே. (௩௰)

அருளினர் குருபூசை மவுனபூசை யையனே, விரேசகபூரகமுஞ்செய்தே-அருளினன் மவுனகுருபூசையையா-வதையறிந்தேன்சுப்பிரமண்யனுபதேசத்தால்-தருளினூற்சத்தசாகரங்களாச்சு-தரியசச்சிதாநந்தமறியலாச்சு-தருளினலண்டரண்டமேறலாச்சு தறைவரியவிப்பூசையருளினைச்சே. (௩க)

ஆச்சுதையாவாசியைநீயிழுத்துவாங்கி-யாதாரவாயில் கடந்தப்பாலேயா-பேச்சாகும்பித்துத்த பித்தக்காற்- பேருனபரைவாயில் காணும்பாரு- கூச்சையாகமலமலர்கொண்டேநீயுங்குமரகுருபாதமலார்ச்சிப்பாய்நீ-ஆச்சுதையா வாசியினூற்பூசைதந்தவரகராதெரிசனத்தைக்காணலாச்சே. (௩உ)

காணலாமாதாரபூசைசெய்தாற் - சாயமதுபெலக்குமதற்கழிவோவில்லைமாணலாமாதாரமாறுந்தொல்லை - வையகத்திலார்செய்மவுனிதீப-வேணவாவற்றசிவயோகஞானி வேதாந்தகுருச்செய்வார் சித்தர்செய்வார் தோணவிலாவைந்நூற்றின்மவுநபூசைகுறைவறவே முடிந்ததொருசெய்திகேளே. (௩௩)

கேளையாவெத்தனைசொன்னாலு மெய்யாக்-கேடுகெட்டமானிடர்க்குவிவேகமில்லை-ஏனையா வென்னூலின் மறைத்தவெல்லா மென்மகனேநினைவாகவிந்நூல்பாரு வாளையாலாதாரமாறுஞ் சொன்னேன் மகத்தானவாசிசிவயோகஞ்சொன்னேன்-பாழையாபரைவாயிற் பூட்டுச்சொன்னேன்-பரிவானமவுநத்தினோட்டம்பாரே. (௩௪)

ஓட்டமாந்துலாராசி சென்மக்கூறு டோகோகோபாசத்தினுடுக்கஞ்சொன்னேன்-ஆட்டமாஞ்சிதம்பரத்தி னடனஞ் சொன்னே-னகத்திலுபதேசமதையடைவாய்ச்சொன்னேன்- நாட்டிகமாச்சராசரத்திலேயுஞ்சொன்னேன் சச்சிதானந்தவொளி யரியச்சொன்னேன் ஈட்டமாமாயிரத்தை யாய்ந்துபார்த்தே யிந்நூலேந்தாங்காண்ட மினிதாய்ப்பாரே. (௩௫)

இந்நூற்றுநானூற்றிற் சூட்சாசூட்ச-மென்ன வித்தை சொன்னேனையா வினிமேற் பாரு - அந்நூற்றுன மதிவெண் பாவாதஞ்

சொன்னே னாறிவாரலைகடல்சூழவனிமீதில்-மூந்நாற்றான் சீவரத்ந ஒளியைக்கேளு - மூர்க்கமிலாக்குரு நூலைம்பதையுன்பாரு உந்நிலைதானிந்நூலிற் றிறமாச்சொன்னே னுரைக்கின்றேன் பதினெண்பேர் சாபமன்றே. (௩௭)

சாபம்.

சாபமதைப் பதினெண்பேர்சித்தர்கூடிச் சமத்தாகவேகவுபனிடத்திற்சென்று - பாபமில்லாப் பரனருளாற் சாபங்கொண்டு பாவித்தேளென்னாறான் பலித்திடாமற் - சாபமென்று லைந்நூற்றின்மவுநசாபந்-தாமிட்டார்யோகசிவப் பொருள்களெல்லாம், ஆகவென்றையா யிரத்திலநேகசாப - மருளினா ரதனாலேபலியாதன்றே.

சாபநிவர்த்தி.

பலித்திடவேயேகவுபனிடத்திற்சென்று - பரனருளாற் பரப்பிரமபாதந்தன்னில்-பலித்திடவே பராபரத்தோடொத்தியானும் பரமஒளியொத்தவிதம் பண்பாய்க்கேட்டே-அலைக்கலெனச் சாபத்தை நிவிர்த்திசெய்தே - யாயிரத்திந்நூலிதுகா ணென்றுசொல்ல, முலித்திடவேசாபமது நிவர்த்தியாச்சு-மூதண்ட வுபதேசமுரைத்தார்பாரே. (௩௮)

பாரையாசாபத்திநிவர்த்திகேளு- பாலகனேயிந்நூலாநிவர்த்தியாச்சு-தாரையாவறிவரையா யிரத்தின்கொச்ச -மையனே யிந்தநூலைந்நூறுந்தாம்-சேரையாசிவநயமசிறிங் உறிங்காச்-செபிப்பாய் நீசிங்கிலியும்ஓம் ஆமென்று மாறையாநமபவசிமறிங்கிறிங்கா மகத்தானதிறங்சிறிங்மசிநவென்றோதோ. (௩௯)

ஓதவேபதினெண்பேர் சாபம்போச்சு-தோகோகோ சகலசித்தர்சாபம்போச்சு-தேதமறலடமவுரு நிவர்த்திசெய்தா-லென்மகனே சதங்கைகொஞ்ச நடனமாடும்-போதவேசத கோடிரிஷிகள் சாபம்-பொய்ம்மையன்றன்மகநே நிவர்த்தியாச்சு-மாறவேமகத்தான சாபமெல்லா மாண்டதையாலிந்நூலினிவிர்த்தியாச்சே. (௪௰)

இந்நூல்சித்தி.

மாண்டதேசாபங்கணிவிர்த்தியாச்சு-மகத்தான வைந்நூறும் பலிதமாச்சு- ஆண்டரியவாதாரமாறுஞ்சித்தி-யையனேயாயிரத்தில் வாதஞ்சித்தி-மாண்ட ஒருவாதசித்திகமனஞ்சித்தி-வாழலாம் சிதம்பரத்திற் குளிகைசித்தி-தாண்டுமத்தண்ட ரண்டபிண்டஞ் சித்தி-சாற்றறியவட்டகன்மஞ் சித்தியாச்சே. (௪௧)

சித்தியாம்பரிபாடையிதுவேயாகுஞ்-சிவமானவைந்நூறுமிதுவேயாகும்-முத்தியாமுந்நூறுந்தீட்சைசித்தி-மூலமாங் குருநூலைப்பதுவுஞ்சித்தி, சத்தியவாமதிவெண்பா நூறுஞ்சித்தி-தனிப்பூசை விதியோரிருநூறுஞ்சித்தி - அத்தியா மைம்பதற்குண் முப்பூசித்தியரகராமுப்பதக்குட் குருவைப்பாரே. (௪௨)

நூற்றொருகை.

குருவானநந்தீசர் மூந்நூறுஞ்சீர்க்குணமானபஞ்சகாவியமுஞ் சித்தி, பரிவாகப்பதினொன்றுஞ் சித்தியாச்சு-பாங்கானகாவியத்தின்

கருவாம்பீடம்-அருவான கர்வியத்தா தாரபீட-மாச்சுதையா யிரத்தொடந்நூறுஞ்சொச்சம்-துரிசற் சொச்சமையா பூர்வக்கியானஞ்-சொன்னேனேயாயிரத் திருநூறுமால். (௪௩)

சொன்னேனுயிரத்திருநூறதனிலேயதுகளில் வைத்தியத்தைக் கைபாகத்தோடு-முன்னமுந்நூற்செந்தூரஞ்சொன்னேன்மூர்க்கமற நூற்றிலுயர் பற்பஞ்சொன்னேன்-வன்னமுள்ளவாயிரத்தைந்நூறுஞ்சொன்னேன்-வகையானவயித்தியத்தை வளமாச்சொன்னேன்-பன்னுகுணவாகடங்கள் பரிவாச்சொன்னேன் - பண்டிதர்நோயாளிகுணமறியச் சொன்னேன். (௪௪)

அறிவரியபதினெந்திற் பாவபுண்ணிய - மாய்ந்துறைத்தேனென்மகனேயிந்நுங்கேளு; செறிதறவீருயிரத் திருநூற்றுக்குட்சேர் முத்திவயித்தியத்தைமுழுதும்பாரு-பறிதலிலாச் சகலவகையதீதக் கோவை - பார்த்தக்காவிதன்பெருமை பகருண்ணுதால் இறுதவிலாப் பன்னிரண்டி-நூற்றிற்சொன்னே-னிந்திரமயேந்திரமாசாலந்தாமே. (௪௫)

சாலநவிலேந்நூற்றே டீனத்தினுக்குஞ் சாற்றயுயவிந்நூலேரிகண்டாச்சொன்னேன் - பாலபஞ்ச பட்சியைந் நூற்றிற் சொன்னேன்-பரிவானசல்லியமோ நூறுஞ்சொச்சம்-சாலஒருதொட்டியந் தொண்ணூற்றிற் சொன்னேன்-சாற்றுமோ ரெழுபதிலொட்டியத்தைப்பாரு-ஆலமெனுஞ் சாலத்தின் கோவையையா-வாயிரத்தோடைரம்ப தீரைந்தாமே. (௪௬)

ஆமேகாணதன்றுகையை என்னசொல்வேன்-னதனிலொரு மூன்றுலட்சங்காப்பதாகப்-போமேசீர்ப்புலத்தியனே சொல்லக்கேளுபுகழ்மருவு சாத்திரத்திற்கிலக்கமில்லை - நாமேகாணிவ்வள்வும் பார்த்துத்தேறி-நயமாகப் பொருள் படவேயுனக்குச் சொன்னேன் வாமேகாணத்திபன்வர்க்கமுதவாக்குமாநிலத்தி லாரறிவார்மவுனிக்காமே. (௪௭)

## வயிரவபூசை.

ஆமையா நூற்றெருகையையறிந்துசொல்ல வம்புவியிலொரு வராலாமோவாகா - ஆமையாவசிமநயவறிம்நறிமென் - றடைவாக மறிமென்று வாறுவாயகாண் ஏமையா வெண்கோணம் வளமாய்க்கீறி-யிடம்வலமாயிரேகையினற் சூலம்போட்டு-நாமையாவெட்டெழுத்தை நன்றாய்மாறி நயமாகவயிரவனைப் பூசிப்பாயே. (௪௮)

பூசிப்பாயமுதகும்பம்வைத்துநன்றாய்-புகழ்மருவுமவுனத்தின் மதனப்பாலும்-யாசிப்பாயாயிரத்தெட்டிதழினலே, யருச்சனைகள் செய்துகற்பூரசோதி-மாசிப்பாய் மவுனசிவஞானத்தாலே மந்திர பஞ்சாட்சரத்தகற்றூபதீபம் - நேசிப்பாய்வயிரவனைப் பூசித்தக்கானொகப்பளிச்சென்று சோதிகாணே. (௪௯)

## சுப்பிரமணிய தியானம்.

பளிச்சென்றுசோதிஎதிர்கண்டதாலுற், பயிரவனுந்தோன்று வான்பயமோவில்லை வழிச்செல்லவேணவரமீவானுற்சூர்ப்-பகைவ

னைத்தியானஞ்செய்வாமேகேளு-அளிச்சென்றே யவசிவநவாஓமெ ன்றே-யழகாகவறுகோண மடைவாப் போடு-செழிக்கவே யாரெழு த்து நடுவாகாணுந்-தெளிவாகவிரேகையோராறும்போடே. (ருய)

பூசை.

போடிரேகையிற் சரவணபவாவென்றேபுகழாகவறு கோண த்துள்ளேவிந்து-வீடுமிருத்தம்மிரண்டுவாயினான்கு-மிளர்வீர வாகி னுடைப்பீசங்காணும்-ஆடையாநால்வாயிற் பீசஞ் - சொல்வேஙரீம் ஸ்ரீரீம் கிரீமடைவாப்போடு-மூடயா ஓங்கார வட்டங்காணு - மோ கோ கோவறுமுகவன்றியானமாச்சே. (ருக)

மவுனபூசை.

தியானமாந்தெரிசனத்தின் பூசைகேளு - திறமானவைத்து வையாமவுனசித்தி - கியானமாமதனப்பான் மதனசோதி கிருபையு டன்மவுனமலரர்ச்சிப்பார்பார்-தயாநிதியாஞ்சுப்ரமணியன்பூசை யா யாச்சுதானபிரத்தியக்கமாய் மவுனன் சொல்வான் - அவாவருத்தே மெஞ்ஞானமவுநபூசையான் கண்ணேனிப்பூசைநலமாவின்றே. ()

இப்பூசையார்செய்வார் மவுனி துன்ப - வின்பமிலாவேதாந்தி யோகிசெய்வார்-இப்பூசைசித்தர்ஞானியர்கள்செய்வாரெழிற்துலா ராசிஎடுத்தவர்கள்செய்வார் அப்பூசைதனையான்கண்டுனக்குச் சொ ன்னேன்-னம்புவியிலெவர் செய்வார்மவுன ஞானம்-தைப்பூசைசொ ன்னேன்மூன்றுங்காண்டத்துத்- தாரணியிலாரறிவாரிந்நூல்பாரே.

பாரானசித்தரடையாளஞ் சொல்வேன்-பரனருளான் மனிதர் களிலொருவராவார்-தாரானதுலாராசி பூர்வஞானந்தான்றொடர்ந் தவனிமிசைத்தோன்றிமேலும்வீறனவிட்ட குறைதொட்டநேர்மை விளங்கவேலபித்தககாற்சித்தியாகும் - ஆறனபிராணமயவிந்துவா லே யாச்சுதையாமாயையிலே மனிதர்வாழ்வே. (ருச)

மனிதருய்ப்பிறந்ததினாலாவதென்ன மகத்தானதுலாராசியறிய் வேண்டும் செனித்தக்காற்சடமழியாதிருக்க வேண்டுஞ் - செடத்தி னுள்ளபொருளெல்லாங்காணவேண்டும்-கனிட்டனுக்காயமது பெ லக்கவேண்டுங்கருவிகாணுதிகளைக் காணவேண்டும்சினத்தொழிந்து துலாராசியடுத்தகற்பஞ்சிவயோகமவுனத்திலிருந்துதேரே. (ருரு)

தேறவேசொல்லுகிறேன்மைந்தாகேளு-தெளிவாகவாதார மா றுங்கண்டுமாறவேவாலயிலேஒடுக்கங்கண்டுமவுனசிவயோகத்திற் ச மாதிகண்டு-வீறவேமெஞ்ஞான தீட்சைகண்டு மேதக்கபூருவத்தின் பூசைகண்டு-ஆரவேயண்டாண்டாபிண்டங்கண்டே யாகரா செகற் குருவையறிந்துகாணே. (ருசா)

செகற்குருவைக்காணவழிசொல்லக்கேளு-தீமைமிகுபொய்கள ருசாமித்துரோகம் வகுத்தகொலைகாமம் வஞ்சனைகள் பாவம் வழு த்தறியவாணங்கள்ற்றுப்போனல் அகப்பேய் போய் நீநினைத்தபடி

யேயாகுமன்றன்றேசமாதிதநிற்கற்பங் கொண்டால் விகிர்தகுரு
மெஞ்ஞானமவுநமாகுமேலாநகற்பமுண்ணக் கருவைக்கேளே. (௫௭)

கேளையாகாயமதுவச்சிரமாகுங்-கிருபையுடன் வல்லாரைக்க
ற்பங்கொண்டால்-ஆளையாமண்டலத்தைச்சாவுபோச்சு தறைவரிய
சட்டைதள்ளிப்பூர்வமாச்சு - ஏலையாசிவசத்திதேகமாச்சுதெப்போ
தும்வச்சிரமாயிருக்கும்பாருசோளேதுவாராதி நான்சொல்வாக்கி
யங் கொண்டவகேமெய்ஞ்ஞான குணமுள்ளோனே. (௫௮)

வல்லாரைக்கற்பகம்.

குணமுள்ளவல்லாரைக்கற்பஞ்சொல்வேன்- குருவானசத்தியு
ப்புச்சிவத்தினுப்பு-மணமுள்ள பீங்கானிற் போட்டுமைந்தா - மகத்
தான சுன்னத்திற் பலந்தான்போடு அணியுள்ள வைம்மூல மைங்
காயந்தா-மப்பவோர்பஞ்சிகாணதீட்சையுப்பு-நணியுள்ளநான்கையு
மேகூத்தி-நன்றுகவிரவினிற்றன்பனியில்வையே. (௫௯)

வையையாவிரவிதனிற்றண்பனியில்வைக்க-மகத்தான செயநீ
ருமாகுமாகும்-கையையாவதிற் பட்டாலற்றுப்போகுங்-கத்தூரிவ
ன்னம்போலிருக்கும்பாரு - செய்யையாசீசாவிற்பதனம்பண்ணிச்
செயமானசெயநீர்சரிஎடையாக் கூட்டிக்கொள்ளே. (௬௰)

வாலைபூசை.

கொள்ளையா விரண்டனையும் பீங்கான்றன்னிற் குணமாகச்
சொன்னபடிகொஞ்சம்போடு நள்ளையாரவிதனிலே நிமிடம்வைத்
தானதாந்தவிலேகியம்போலிருக்கும்பாரு - பள்ளையாமகிமைநிறை
குருவின்பாகம்-பதமாகவெடுத்நீதேவிபூசை-வள்ளையாவாலைஎனு
ம் வாமப்பெண்ணைமனதாரநினைத்துநீதியானிபபாயே. (௬௧)

தியானித்தாயாகின்மெஞ்ஞானந்தோன்றுந்- திருவுடைய வா
லைப்பெண்ணெதிரேநிற்பாள்-தயாபரியாமளைகௌரி- சூலிசீலிசாம்ப
வியந்தரிபஞ்சாட்சரிகௌமாரி-உயர்உறவேவல்லாரைக் கற்பமெற்
கின்றுன்னுபொருடறுமாறுவரமீவாய் காண்கியானத்தோடிருந்து
லகிற் சீவித்தம்மடிகேல் சிவானந்தமுறக்கடாட்சிப்பாயே. (௬௨)

ஆவென்றசத்தமதுகேட்டதானு லப்பொழுதேவனென்றுவரு
வாள்பாரு- ஆவென்றசத்தத்தாநீயாறென்பாளப்பனேயகத்தி யன்
றன்சீடனென்பாய் - ஓவென்றசத்தமிட்டு முத்தமிட்டு யொண்மை
முகமலர்ந்துபதேசஞ்செய்தாள்வாள்-ஈவென்றசற்குருவை நாவா
ரத்தா-னுதாந்தசிறேமணியைப்பூசிப்பாயே. (௬௩)

பூசிப்பாய்சமாதிதனில் யோசத்துற்றுப்-புகலிலேகியமோர்ப
ணவெடைதான்கொண்டால்-மூசிப்பாய் லகிரியையாய் னென்னசொ
ல்வேன்-மொழியவரிதைந்து நாளளவும்போதை யாசிப்பா யண்ட
ரண்டவாசிகொண்டே யங்கென்று கும்பித்தாலுயரத் தூக்கும்-மாச
ரவேமலசலந்தான்திரண்டுபோகு-மைந்தனே விந்துவையுநகட்டும்
பாரே. (௬௪)

பாரையாமண்டலந்தான்கொண்டாயானாற்-பாலகனேபசிபோ
குமதனமாகும்-பாரையாவாசியோ ஒடுங்கிப்போகும், பசாரியபா
ரைவாயிலடைக்குமாங்கே-ஆரையாவறுசுவையுண்டியில்வெறுப்பா
மதாரமாறுமன்றேசித்தியாகும்-தேரையா வல்லாரை வருடங்கொ
ண்டால்-சீராகவதன்பெறுமைசெப்பக்கேளே. (௬௫)

கேளாய்நீயென்னசொல்வேன்பூர்வஞான - கேசரத்தின்மேல
றைதான்றிறக்கும்பாரு, மாளாய்நீமண்டலத்துக்கொவ்வோர்சட்
டை-மைந்தனேயுரியுமந்தக் கற்பத்தாலே-வாளநீமதனைப் பாறினங்
கொண்டேபார்-வண்பசுவின்பாலேதான் மயங்கவேண்டாம், கோளி
றெண்ணூற்றுறுசட்டைதள்ளு மெய்யாக்-கூறுதொகை யாயிரமா
முருவங்காணே. (௬௬)

காணப்பாதேகத்திற்சூடுகொண்டாற்-கண்மணியே கண்டவுட
னயச்செந்தூரம், மாணச்செந்தூரமெடைபணமாக்கொண்டு-மைந்த
னேசெந்தேனிலடைவாயுட்கொள், நாணிப்போஞ்சடத்தி லுள்ள
நோய்களெல்லா-நவிலரியசெயகற்ப மகிமையாலே-வீணப் பாவலே
யாதேயாருஞ்சொல்லார் - வெளியாகச்சொல்லிவிட்டே னுண்மை
தேறே. (௬௭)

தேறியந்தவல்லாரைக்குருகற்பத்தைச்-சீராக முறையறிந்து
செய்வாயானால், வீறியைந்தபயன்பயக்கும்பரத்தினானே - மெய்ம்
மையாச்சொன்னேனையா குருவினானே, மாறிலிந்தமுறையதனைச்
செய்துபார்த்தேன்-மாசற்றகுருவழியிற்பலிக்குங்கண்டாய், ஆற்றி
வார் கைபாகஞ்செயயாகந்தா - னறிந்து செயவின்னமொருநூல்
பாராதே. (௬௮)

இன்னுமொருசெய்திதனைச்சொல்லக்கேளு-வெழிலானகற்பத்
தையுண்ணும்போது பன்னுகின்றகாற்று வெயிலாகாவோட்டம்-
படர்நடைசத்தித்தலிவையாகா பொய்ம்மை, துன்னுமொழிகொலை
களவுமாகாவெண்ணெய்-சுண்ணும்பு கடுகுபுளி யுள்ளியாகாத னனி
றிகாம்கொம்மைமுலைமடவார்தங்கட்-சையோகமதனைநீதள்ளுவாயே.

தள்ளையாகள்ளுகெஞ்சா விறைச்சிமச்சந்-தன்னோடுபுகையிலை
யுமுப்புந்தள்ளு, மெள்ளவேகடுங்கோப மதனைத்தள்ளு - விரிகடல்
சூழ்புவிவாழ்வையொருங்கேதள்ளு, கொள்ளையாவிடயவாசனையிற்
செல்லுங்குணமில்லாமனப்பேயையதிற்செல்லாதோர், விள்ளரிய
வேதாந்தத திருக்கின்மாயை - வெருண்டோடும் பூரணத்தினமுத
முண்ணே. (௭௰)

## யோகநித்திரை.

அமுதமிழியோகமது செய்யவென்னி லப்பனேகாணிட்டிப்படு
த்துக்கொண்டு, மமதையிலா திடக்கையைமூடி மேல்வைத்து-வழுத்
துபுரணத்தொர்சுழுமுனையைமேவிசமரசமாவாசியை நீயிழுத்துக்
கொண்டுசமர்த்தாகததேசரத்தின் மனதைவைத்தே, அமைதியொ
டுபராபரத்தைத்தரிசித்தேதா-னையனேலலாடத்திற்றூங்குவாயே.

தூங்குவாயிமமுறையே தூங்குவாயேற் - றுவாதசாந்தத்தன்
றேசிறந்தேயாடும், வாங்கவென்றுன்மாலிலத்தின மனிதரை யாவ
கையதனைத்தெரியாமன் மாண்டார்கோடி, வாங்குதிரைக்கடற்புவி
யின்மனிதரென்று மாளாமலிருக்கவன்றேசொன்னேன்பாரு, ஏங்
கிநின்றலையாமலிருந்துமைந்தா-வென்றனைப்போற்கோடியுக மிருந்
துதேறே. (௭௨)

## பத்தியம்.

தேறவென்றுற்சற்பத்தைச் சீராக்கொள்ளு - தியங்காதேயின்
னுமொருசெய்திகேளு-பாறவென்றுற் பத்திரமாப்பண்ணு-பழியில்
திரிகடுகுதிரிபலாதியோமம், வீறுபெறுசீரகமொண்கிராம்புபத்திரி
சீர்ச்சாதிக்காய்நல்புளியாரையோடு, நாறுசிறுகீரைசிறுபயறுடை
யா, நலமாகக்கட்டிய தோருப்புமாமே. (௭௩)

## வெண்சாரைக்கற்பம்.

ஆகுமேநற்கொறுக்கைபுளிமற்றைய-வறைவரிய கற்பூரசிலையி
ற்சுன்னம், வாகானவண்டக் கல்லின்றன்சுன்ன-மகத்தானகனறுரை
தங்கச்சுன்னம் - சேகாகுமொருபொழுதே யன்னங் கொண்டாற்-
றேகமதுசட்டைகளித்திகழும்பாரு பாகமாவெண்சாரைக் கற்பஞ்
சொன்னேன்பகாரியசித்தர்கட்குக்குருவிதாச்சே. (௭௪)

ஆச்சப்பாவின்னுமொரு கற்பஞ்சொல்வே னண்டபகிரண்ட
மதையிடித்துக்கொண்டு, கூச்சமில்லாதிடித்ததிலே தண்ணீர்விட்
டுக்-குறைவரவேபிழிசாறுநாழிகொண்டு, ஆச்சியமோர்படிகுடவிட்
டுப் பின்ன-ரடுப்பேற்றியதனையோர்சாமமடடும், காச்சப்பா மெழு
குபதமாகும்போது கனிவாகக்குருசெயநீர்ப்பாகங்கேளே. (௭௫)

## காயாதிகற்பம்.

கேளையாவதையாற்றியெடுத்துப்பாரு - கேசரத்தின் காயாதி
கற்பமாகும், கோளொன்றும்வாராது குருவைப்போற்றிக்-குருசெ
யநீரொருபலத்தானதனில்விட்டு, வாளிரவிதனிச்சாமங்காய வைக்
கின்-வண்மைசேர்மெழுகுபதமாகுங்கண்டாய், தாளுறவிம்முறைய
தனை முடித்தேயேகாட்-சாமதனுற்றியாணித்துப் பூசைசெய்யே. ()

## மேன்மூலசுத்தி.

செய்யப்பாபரபாத்தைத்தியானபூசை-செய்து நீமுடித்தபின்
புசெப்பக்கேளு ஐயனேசூரியோதயத்திலேதா - னடைவாகப்பெரு
விரலிற்றடவிக்கொண்டு-உய்யையாவுணுக் கிற்புரளவேற்றி-யம்
மென்றுவாசியைநீ கும்பித்தக்கால்கைப்பாகவியன்றகப்பொருங்கே
யல்லாங-கழன்றுவிடுமின்னுமொருசுத்திகேளே. (௭௭)

## கீழ்மூலசுத்தி.

சுத்திசெயமூலத்தின்கற்பஞ்சொல்வேன்-றுகளிலாக்கற்பமது
சூட்சாசூட்சம், பத்திமையாசசெய்யவொரு செங்கற்குழைப்-பகா
யறிசோற்றேடே குருவைசசேர்த்தே-அத்தை யொரு சீலையிலே

முடிந்துகொண்டே-யடைவாகப் பிழிந்தக்காலிழியுஞ்சாறு, சித்திதருங்குருசெயநீர் கூடவிட்டுத்-தீயேற்றியோர்சாம மெரித்திடாயே.

எரித்திடுவாய்மெழுகுபத மாகுமப்போ-திறக்கிவைத்தென்மகனே யின்னுங்கேளு, புரையற்றசுத்தசல மதனில்வார்த்துட் புலத்தியனேயிரவிதனிற்காயவைக்கின், அரக்கதுபோற் செம்மைநிறமாகுமையா-வையமதைச்சுத்திசெயு மிதைப்போ லுண்டோ பருத்ததனமுடைய மூலிகளைப்பூசை - பண்ணிசெயநீர்மகிமை யறையக்கேளே. (௭௯)

அறையக்கே ளென்னிடத்தின் புள்ளசீட-வநாமிவிரலதினாலே தோய்த்துக்கொண்டு-பறியுமப்பா வுண்ணாக்கிற் புரளத்தேய்க்கிற் பாழானகபமெல்லாங் கழன்றுபோகும்-முறைப்படிசெய்மூலத்தின் கற்பத்தாலே-முடிந்ததே காயசுத்தியாகுங்காணே-மறப்பிலாதடிமூலஞ்சுத்தியாக-மைந்தனேயந்திசந்திநாட்டம்பாரே. (௮௰)

நாட்டமையாகண்ணோட்டம் பார்த்தாயானா- லலமானசுழு முனையில் வாயில்காணும் - ஆட்டமையா வவ்வாயிறக்கும்பாருவமுதகெங்கையங்கிருந் தடைவாய்ப்பாயும்-வாட்டமையாவமு தமதைக்கொண்டாயானால்-வாழுலாங் கோடானகோடிகாலம், பாட்டமையா பாவிகட்குச் சொல்லவில்லை-பாலகனேயுன்றனுக்குப்பாவித்தேனே.

பாவித்தேனின்னமொரு கருவைக்கேளு-பற்பினியினண்டமையாவைஞ்சாம்வைப்பூ-ஆவித்துமறிவீர்களண்டைக்கூறே - டையிரண்டுபத்து மனேயைஞ்சுஞ்கூட்டி, வாவித்துப்பதினைந்துமெடுத்துக்கொண்டு-வளமாகக்கல்லுரலிலுலக்கைநாட்டி - ஏவித்தேயிருப்புலக்கையதனாலையா-விடித்திடுவாயிருசாமமின்னுங்கேளே. (௮௨)

கேளையா வென்மகனேயறியச்சொல்வேன்-கெவுன மென்றரசகெவுனக் குளிகையையா-ஆளையாகத்தனையுமாவதாக்கி -யையனேசுத்தசலந்தன்னிலிட்டு - காளையாவலக்கையாற் கலக்கிமைந்தா கண்மணியேதெளியவைப்பாய் சாமமட்டும்-பாளையாமலிதமாங்கெவுன வித்தை-பாலகனேபரிட்சைதனையின்னுங்கேளே. (௮௩)

இன்னங்கேளினமறிந்துசொல்வேனையா-வெடுத்தமுறை தப்பாதுகுருவின்வாங்கேஅன்னங்கேளவிமூலப்பழக்கத்தாலே - யையநேகல்வத்திற்புளியைப்போட்ட, இன்னங்கேள் சொன்னகுருசெயநீர்விட்டே-யெழிலாகவிருசாமமெழுகாலாட்டி, அன்னங்கேளண்டமதினிதானமாக-வப்பவேகெவுனத்திற் குளிகைபாரே. (௮௪)

பாரப்பாகுகையெடுத்து ரவியில்வைப்பாய்-பாலகனே பன்னிரண்டு சாமங்காய்ந்தால்-வேரப்பாகுகை யெடுத்துக் கையால்றட்ட வெண்கலத்தின்சத்தமையா வென்னசொல்வேன்-ஆரப்பாலறிவார்

களண்டவித்தை-யாடலாமிந்தவித்தை யநேகங்கோடி, சீரப்பா முன்சொன்ன தெளிவைக்கொண்டு - திறமாகத்தீயெரிப்பாய் சாமந்தானே. (௮௫)

## காயாதிசுன்னம்.

சாமமட்டுமிக்குருவைக் காய வைத்துச் - சமர்த்தானகேசரத்திற்றீயைப்போட்டு, காமேவுகறப்பு வன்னம்போலேகாணுங்-கருக்குருவாஞ்சுன்ன மதிற்பலந்தான்போட்டே-ஆமென்றபற்பமினி முதல்வைபிண்ட - மையனேயிக்கருவிலண்டம்போகிட்டோ மென்றயோர்கொதிதானு கொடுத்ததான் லோகோகோவிறக்கிவைத்தெடுத்திடாயே. (௮௬)

எடுத்துப்பாரண்டமது சிவந்துகாணு-மென்மகனே குருசெயநீரதனிற்போகிட்டுடுத்துப்பாரோர்சாம மாறவிட்டே-யூமையென்றகுகைதனிலேயண்டம்வைத்தே-அடுத்துப்பார் மெழுகினுற்கந்துமூடி - யையனேகெசபுடத்தி லடைவாப்போடு, மடுத்துப்பார்மகத்தானபுடத்தினிறு-மைந்தனேகாயாதிசுன்னங்கானே. (௮௭)

தானனகாயமஃதாகி-தருவானசுன்னங்கே சரத்தின்சுன்னம்-கானனகடையில்விற்குஞ் சரக்செல்லாந்தான் கட்டுமையா விச்சுன்னக் குருவினுலே - மீனைசுன்னமதைப்பதனம்பண்ணுவேதாந்தசுந்தரமே பின்னுங்கேளு-ஆனைமம்பிகையாம் வாலைப் பெண்ணே-யர்ச்சித்துப்பூசித்துச் தெரிசிப்பாயே. (௮௮)

தெரிசிப்பாய்தேனமுதஞ் சொரியுமாதைத் - தேவர்முனிவரர் துதிசெய் தேத்துமாதை- அருசிப்பாயண்ட சாரசரத்திற் சுன்னமாச்சுதையாவின்னுமொரு கருவைக்கேளு பரிசிப்பாய்பராபரத்தின் முப்பூச்சுன்னம் பரிவானசுன்னங்காயாதிசுன்னம்-முரிசிப்பாய் முச்சுனம்பலந்தான்கொண்டு - முன்சொன்ன மூதண்டதயிலங்கேளே.

## கருத்தயிலம்.

கேளேநியைஞ்சுவைப்புந்திங்களொன்று-கேசரத்தின்பச்சோந்திபச்சைப்பாம்பு-ஆவேநிஞெண்டடோடுபச்சைநாபி-யன்பாகவரத்தைக்கல் கோட்டான்பிச்சி-தேளேநிதேவாங்குக்கண்ணும்பிச்சுந்தேசியுடையிரத்தமப்பாபிச்சுமாகும்-மாளே நிமிட்டவளே பிச்சுங்கண்ணு மகத்தானதேரையையா பச்சையாமே. (௯௦)

ஆமையாசெய்யானு மெய்யாம்வித்தை-யருநட்டுவாக்காலிகுழிவேழத்தோ-டேமையாவீம்புலிக்கருநாய்மண்டை - யிபமஞ்செவ்வாலரணையுடும்பின்பிச்சு-காமையாகரும் பூனைக்கண்ணினேடு - கருவானஞெண்டோடு கபாலவோடு மேன்மையாவழிமறித்தான்பிச்சுங்கண்ணும் வேதாந்த்விச்சுளியின் பிச்சுமாமே. (௯௧)

ஆமென்றசெந்தேளுங் கருந்தேளாமை-யையசெங்குளவிகருங்குளவியோடு-தேகமேகருங்குளவி கண்ஞெண்டோடு-தெளிவானசுமல்நண்டு கருவண்டோடு-மாமேவுபுனுகோடு பிள்ளைப் பூச்சி வகத்தானநாகத்தின்விடம்பிச்சோடே-ஏமென்றவிந்திரகோபந்தோடைய-வேறுதொகைமுப்பத்திரண்டாமன்றே. (௯௨)

ஆமேகாண்சுந்தரமே யின்னுங்கேளு-வையனேயழிஞ்சிவிரை நாழியப்பா - மாமேவுமதனப்பூமத்தம்விர்து-மகத்தான மருப்பியானவணங்கிவேரும் காமேவுகாஞ்சொரியின் வேருங்கூட்டி - கண்மணியேகஞ்சாவின் வித்துங்கூட்டி வேமேதான்வெண்குன்றிக்கருங்குன்றிக்கு-விளங்கியவேர்பருப்பாகுமின்னங்கேளே. (௯௩)

கேளையாசாதிக்காய்சாதிபத்திரி-கேடிலிலவங்கப்பூ லவங்கப்பட்டை, கோளறுசிர்க்கத்தூரிமஞ்சள்சாருங் - கூறரியமுறையப்பாபதினஞ்சாகும்-ஏலவேயிவையனைத்தும் ரவியிற்காயி-னென்மகனே மெத்தநன்றினிமேற்கேளு-கோளையா வலியகல்லூரலிற்போட்டுக்-குற்றுவாயிருப்புலக்கையதனுற்றுனே. (௯௪)

தானென்றவிருப்புலக்கைகொண்டுகுற்றச்-சாற்றரிய குருசெயநீரதனில்விட்டுக்-கானனைவம்மூலங்கூடச்சேர்த்துக்-கனிவாகவிஞ்சுளியைப்பண்பாயச்சேரு-தேனனைசஞ்சரியாய்க்கருவாய்க்குத்து தேற்றமிகவேண்டுமென்று தாயைப்போற்றிக் கோனனைபிசின்போலே வரும்பாரன்பாப்-பேய்மகனேயலையாதே பின்னுங்கேளே. ()

இன்னுமையாசொல்லுகிறேன் கனிவாய்க்கேளு-வியம்பரியசாலமெண்ணூற்றுறுகோவை-அன்னமையா விளைவக்கெல்லாஞ் சித்துவித்தை-யாடலாமித்தயிலத்தநேகம்வித்தைகனனமையாகலியுகத்துச்சித்துவித்தை-கண்மூடிவிழிக்குமுன்னே யனேகவித்தை-இன்னம் வெகுவித்தையையாவினேதவித்தை - என்னசொல்வேனட்டகன்மவித்தையாமே. (௯௬)

ஆமேதானறுபத்துநான்குசித்து - மாடலாமித்தயிலத்தாலே பாருசாமேமுன்சொன்னவைஞ்சாநிதங்கள்- சாற்றரியதயிலத்திற்பிசறிப்போட்டு-வாமேவிகம்பதினுற்சுழற்றுவாய்நீமகத்தான பிசினெல்லாந்தயிலமாகும்-கோமேவுகுழிவெட்டிக் கலசம்வைத்துக்-குழித்தயில மிறக்கிடுவாய்குணமாத்தானே. (௯௭)

தானென்றஒருமுழமாக்குழிதான்வெட்டித்- தகைமைபெறுபுதுக்கலசம்புதைத்திடாய்நீ - பானென்றகருத்தயிலப் பாண்டந்தன்னைப்-பாலகனேகலசத்தின்மேலேவைப்பாய் - ஆனென்றபாண்டத்துத் துவாரமிட்டே - யாரணியிலிட்டவெரு முட்டைகொண்டே-ஏனென்று நீயெரியாய் முட்டையாலே-யிறங்குமையா கலசத்திற்தயிலந்தானே. (௯௮)

இறங்குகின்றதயிலத்தைஎடுத்துப்பாரு-வென்னசொல்வேனதினுடையவன்னமையா- கறங்குகின்றவன்னநதான்கருப்பதாகுங்-கண்மணியேசீசாவிற் பதனம்பண்ணு-நிறம்புகின்றசவ்வாதுபுனுகுவச-நிகழ்த்தரியகத்தூரிமூன்றின்வாசம்- பிறங்குகின்றவாசமதைப்புகட்டிநீயும்பேசரியவாலையைநீபூசைபண்ணே. (௯௯)

பண்ணையாவெண்ணூறுசாலவித்தை-பலிதமையாவித்தனையுந்தொட்டேயாடாய்-அண்ணையாவாரிரண்டு நூறுசாலமையநேயித்தயிலங்கொண்டேநன்று மண்ணையாயிரவிலக்கப் பெருநூல்பீடமகத்தானவித்தயிலத்தொட்டேயாடு-விண்ணையாவிநோதவகை யிருநூறுமல்விவேகமுள்ளபாலகனே யாடுவாயே. (ஙா)

ஆடுவாரகத்திஎன்றுன்சொன்னவாக்ய - மையனேயித்தயிலப் பெருமைதன்னைப்-பாடுவார்பதினெண்பேர் நூல்கடோறும்-பாலகனேயித்தயிலங்கொண்டுசாடு சாடுவாய்சகலசித்தர் நூல்கட்கெல்லாஞ்-சற்குருவாமிந்நூலைந்நூறுமாமற்-நீடுபடவெந்நூலு மிந்நூலெவ்வா-விந்நான்மூன்றுங்காண்டம்பூர்ணமென்றே. (ஙாக)

மூன்றுங்காண்டாம்-முற்றிற்று.

ஆ-காண்டம்-ரு-க்கு-விருத்தம்-ஙாக.

---

# நாலாங்காண்டம்.

பூரணமாம்பரிபாடை நாலாங்காண்டம் புகழ்பெரியபனிமலைநற்றவஞ்செய்தீன்ற-வாரணவுகொம்மைமுலை மங்கையற்கு வழுத்திஞானபுடனேயானுமாதிகாரணமாங்கருக்கமெல்லாங்கண்டுதேறிக் கருக்குருவிந்நூங்கவியைந்நூறுமைய சீரணமாப்போகாமற்சித்தர் கட்குசு-செப்பினேனிதற்குச்செவ்வேள்காப்பாமே. (க)

செயமாகச்சொல்லிவைத்தே னிரண்டாங்காண்டஞ்- சீராகமுப்பூவின்கருவுங்காணும் வயமாகமறைத்தகருக் குருவுந்தோன்றும்-வசனித்தேனைஞ்சாங்காண்டம்மறைப்பாச்- சுயமாகவுதகமஃதப்பேயாகுந்-துகளறுசீர்தீட்சைவிதியைஞ்சாங்காண்டம் நயமானசரக்கினதுகுணங்கூறெல்லா-நானறிந்தபடிசொன்னே னலமாத்தானே. ()

தானென்றகைபாகஞ்செய்பாகந்தான் - தப்பிதங்களில்லாமலைஞ்சாங்காண்டம்-வாவென்றபூவெடுக்குந் தீட்சைமார்க்கம்-வகைதெரியாமூடருக்குத் தெரியச்சொன்னேன் - தேனதனைப்பொழிந்தாற்போற் கருக்கமெல்லாந் திறமான மூக்கருவாமண்டக்கூறே-யானென்றுகைகாட்டுமைஞ்சாங்காண்ட - மாதவினுற்சோதியிலே யடங்குவாயே. (ங)

நாகவிந்து-அண்டபிண்டம்.

வாரானவகாரமது விந்துமாச்சு-வகையானவுகாரமதுநாதமாச்சு போரானஒகாரமதுபிண்டமாச்சு-பேரொளியாம் பராபரத்திலெடுத்தஉறு-ஊராணசிவசெந்துபாத்தின்கூறு-வுதித்துநின்றநாதவிந்துசத்திகூறு-ஆறுனவிண்டவிந்தண்டக்கூறு- வாச்சுதுபார்மூன்றுலே யைந்நூறுச்சே. (ச)

ஆச்சுதுபாகாரமுகாரம்மிரண்டு-மறைவரியஒகாரமொடு மூன்றேமூலம்-பேச்சிதுபார்பேசாதமூலமாச்சு-போனயூமையென்றவு

யிருமாச்சு-காச்சுதுபார் கருக்குருவாம்பிண்டமாச்சு-கருவுக்குளமு தமென்றசலந்தானாச்சு- வாசசுபாரமுதமென்றபனிநீராச்சு-மகத்தா னசுத்தசலமதற்குப்பேரே. (௫)

அருகலரசமதுதான்விந்துமாச்சு-தறைவரியநாதங்கா யிலையு மாச்சு-பதியானவதுவதுவாம் விந்துமாச்சு-பரம்பொருளே றத் தையாவமுதக்கங்கை-அதுவானவிதுவதுவாந்தேசிநீரு-மதிலுதித்த வமுரியதுசுத்ததீர்த்தம்-அதுவான பசியதுதானசோதியாதி-யதை யறியவேண்டினைந்தாங்காண்டம்பாரே. (௬)

பாரேதுசீரேதுபதிதானேது-பருதிஉன்றரவிமதியுங் கூடுநா ளிற்-சீரேதுநீர்தானேதுருவமேது-செய்ததவப்பயனதினாற் சென் மக்கூறும் ஆரேதுவாமேதுசுகிர்தமேதா-லறிவரியகருவியினால்வள ப்பக்கூறு-காரேதோவேரேதுபுளிதானையா - கடைந்தெடுத்ததிரு வாணியாமே. (௭)

ஐம்மூலமும் ஐங்காயம்.

ஆணியென்றுலாணியது வானைக்கொண்டே-யறுக்கலாமதின் கதிவைமனதினாலே- ஏணியென்றுரேணியக்தேறெறப்ப-வெழுங்கு வங்கிருந்தாரே துருவங்கண்டுபாணிஎன்றுறபாணியினா லூன்றிக கொண்டு-பராபரமாமைம்மூலமைஞ்சுகாயம்-வேணிஎனறுல வேணி யன்றோ அங்கவேணி-வேதாந்தமதனில்விளையாடும்பாமர. (௮)

ஆடுவார்யமுனையென்றவமுததீர்த்த- மண்டலத்திலகண்டமதி சுத்ததீர்க்கம்-பாடுவாசலமதனிறசங்கையாவும-பரபூசைகுருபூசை செயதேநிற்பார்-நாடுவார்நாதாந்தசத்திகொண்டு - நலலபணிநீரை யன்றுதெளியவைப்பார்-தேடுவாரிலலை யதையறிவினாலே - தெளி வான வுப்பெடுத்துமுப்பூவாக்கே. (௯)

கல்லுப்பு.

முப்பூவாமுப்பதனிற்றப்போவில்லை முக்கருவா மக்கருவைக் கண்டுதேறு-சப்பானசப்பதுவுங்கவுசிபோக்கிச்-சாரனைக்குட கெவு னமதாக்குப்பிக்கேற்றி-அப்பானகொப்பதுபொன்மணிகளாக்கி-யம் புசாந்தொடுத்தாற்போனுணியேற்றி- ஒப்பானகப்பரைகொண்டடு பபிலேறறி-யோர்பத்துசசாரவதயுப்பதாசசே. (௰)

ஆச்சுதேயாகரசவுப்பதாசசு-தறிவாலேயவரைவெல்ல யாரா லாகும்-தோசசுதேதொடுத்ததுவும்படுத்துப்போச்சு - அரியமென றவருவமதுதுரும்பதாச்சு - தூசசுதேதிரும்பதுவுந்தூணிதாச்சு தொடுத்தசரமணடலந்தானேறலாச்சு - காசசுதேகருவாகியுருவுமா கிக் காயகனியாயுறபவித்த கலலுப்பாசசே. (௧௧)

கல்லானகலலதுவும்வெல்லமாட்டார் - கருவானவருவதுவுஞ் சொல்லமாட்டார்-விலலான வில்லதுவே தொடுக்கமாட்டார்-விற பிடிக்குஞ்சாயலதைக்காட்டமாட்டார் - இல்லானவில்லதுவு நல்ல வீட-யிலலமென்றுசொலலதுவேநிறுத்தமாட்டார், அலலானபுல் லதுவே யண்டநீரா-மப்பூவிலம்பனிநீரடைவுகேளே. (௧௨)

அடைவானடைவதுவா மண்டந்தானு-மதிலிருந்துவிந்துவை நீஎடுத்துக்கொண்டு-கடையானசத்துருவாமங்நீரோடு - கருவான ஓட்டினுடைச்சவ்வுபோக்கி-நடையானநாதமதைக் கூடச்சேர்த்து-நாட்டுவாய்கல்லுரலினுட்டக்கேளு அடைவானவச்சிரமா முலக்கைகொண்டே யண்டத்தின்மேலோட்டை வலுக்கக்குத்தே. (௧௩)

குத்துவாயிருப்புலக்கையதனைக்கொண்டு- குமுறவேயிடித்ததனைத்தூளதாக்கி-அத்துவாய்மாச்சேரக்குத்துக்குத்தே யதினுடையவீரமெல்லாம்போகக்குத்து- தத்துவாய்தங்கமென்றமாவெடுத்துத்-தாயானமயேஸ்வரியைப்பூசைபண்ணு - வத்துவாமாதாவேநாதரூபி-மாதேவி என்றெண்ணிவாழ்த்துவாயே. (௧௪)

எண்ணவேபுருவத்திலமுதவாழ்வே-எங்கள்குலம்விளங்கவந்த மங்கைப்பெண்ணே - கண்ணவேசொருபவண்டவருப்பபெண்ணே, கருவதனிலுருவுதித்தகன்னிப்பெண்ணே, அண்ணவேயமுதத்தில் வாழும்பெண்ணே-யண்டத்திற்குடியிருக்கு மாதிப்பெண்ணே-சொன்னமொழிதவறுதசொந்தப்பெண்ணே - சொற்பெரிய வகத்தியன் றன்வாழ்வேயம்மே. (௧௫)

வாழவேவேண்டுமென்றுலேயவிந்த-மாவதனிற்பணவெடைதானெடுத்துக்கொண்டே-ஆழவேயாதிவிந்தமுதந்தன்னி லேயநேயிக் கருவையடைவாப்போடு காழவேசலம்போலேயிருந்தவிந்து கன்னியாநாதவிந்துகலந்ததாலுல் -சாழவேசலநிதியாஞ் சமுத்ரதீர்த்தஞ்-சங்கையிலாப்பாலமுதத் தெளிவதாச்சே. (௧௬)

சுத்தசலம்.

தெளிவானபாலமுதம்பனிநீராச்சு-தெவிட்டாதசுத்தசலமிதுவேயாச்சு-அளியானவாருச்சுபாலாருச்சு-தாயிரத்தெட்டண்டமட்டும்பாயலாச்சு-குளியானதெளிவாச்சுதறிவுமாச்சு, கோடானகோடி சித்தாதிதமாசசு-வளியானவளியாச்சுபாறையாச்சு-மகத்தானதேசிநீரென்றும்பேரே. (௧௭)

தேசிநீர்·ஊசிநீர்.

போனதேசிநீர்குருவைக்கொண்டு - பேருகத்தெளியவைத்த வூசிநீர்தான் ஊரானவூசிநீர்மூன்றுஞ்சுத்தி - யுடன்சேர்ந்தகாசிநீர் கருவைக்கேளு,காரானகருவதுதான்காசிநீரே, காசியென்றசலநிதியாம்யமுனைத்தீர்த்தம், தூரானதுங்கபத்ரிவிருத்தகங்கை துவருமென்ற சாஸ்வதியின்றீர்த்தமாமே. (௧௮)

தீர்த்தமாமுயர் தூங்கவேணிவாணி - திறமானநர்ம்மதையாந் தூயகன்னி, ஆர்த்தமாம்பறபந்தி-யென்றும்பேர்மற் - றறைவரிய குமரிஎன்றுமிதற்குப்பேர்சி *சார்த்தவெண்சங்கநதி யென்றும்பேராஞ்-சாற்று சரவணப்பொய்கையென்றும்பேராம் ஆர்த்தமாமறுமூன்றுங் கூட்டினக்கா·லமுதமெனுஞ்சலநிதிசிர்ச்சுத்தியாச்சே. ()

---

* சார்ந்தவென்பது-சார்த்தவென விகாரப்பட்டது.

ஆச்சுதுபாரமுதமென்றவமுரிதன்னு லடைவாகமுன்சொன்ன பாவைதோன்றும், பாச்சிதுபார்கலநிதியாங் கஙகையாலே பாலமுதமென்றவொரு பனிநீராலே, காசசிதுபார்கனகமென்ற கையினுலே-கலக்கியேவடித்திடுவாய்கஙகையைத்தான் ஏச்சிதுபாரெச்சலமுந் தெளிந்துபோகு-மினத்தோடே யினமதுசேர்ந்தேகமாமே. ()

ஏகமென்றவேகமென்னை தேகந்தேக-மெடுத்ததொரு துறைக்கெல்லாமிதுவேயன்னம், பாகமென்றபாகமென்ன கைபாகந்தான்-பாலமுதம்வடித்துநீ பசிதீர்த்தாக்கால், காகமென்றகாகமென்னவிதுவேயன்னங்-கருவுதித்தம்மதுச்சுன்னங காட்டொணுதோ மாகமென்ற மாகமென்ன மதியினுலே-வண்மையா வறிகுருவை மாட்டினேனே. (௨௧)

மாட்டினேன்புலத்தியனே யின்னுங்கேளு-மறைக்கவில்லையொளிக்கவில்லைமறைப்போவில்லை, காட்டினேன்குருப்பாக மைஞ்சாங்காண்டங்-கைபாகஞ்செய்பாகங் விருவின்பாகம், பூட்டனேன் பூச்சரங்கொடித்தாறபோலே-புத்தியுடனின்றூன்பொருளைக்காண்பாய் பாட்டினேன்பலகலைகளிந்நூலுக்குட் - பராசத்திதிருவருளாற் பகர்ந்திட்டேனே. (௨௨)

ஐ ங் கா ய ம்.

பகர்ந்திட்டேனுதவிந்திரண்டுங்கூடி-பரிவானவண்டவிந்து பழச்சாறுகும், அவிர்ந்திட்டவிரண்டுவிந்து முடிதானையா வதிற்பிறந்த மூடிவிந்துபழச்சாறுகும், தகர்ந்திட்ட வைங்காயமைந்துங்கூடிச்-சமைந்ததேவம்மூல மைந்துமாச்சு, வகிர்ந்திட்டவொன்றதிலே யைந்துமாச்சு மகத்தானதெளிவாச்சு தொன்றுப்போச்சே. (௨௩)

ஒன்றுனவொன்றன்றே விரண்டதாச்சு-தோகோகோ வுருவாச்சுகுருவுமாச்சு, மூன்றுனேமூன்றன்றே மூடிதானுச்சுமொழிவரிய காயாசசுபழமுமாச்சு, நன்றுனநன்றன்றேகாலதாச்சு நலமானதிகைப்பூடுமிதுவேயாச்சு-நன்றுனவாயிரமா மைந்துமாச்சு ததிற்பிறந்தபெண்பூடு பூவுமாச்சே. (௨௪)

தி கை ப் பூ டு.

பூவானபூவதுவே செடிதானன்று-பூதலத்திலெங்குமுண்டு பூத்தானன்று, மூவானமூன்றதுவுமொன்றுசேர்ந்தான்-முப்பூதம்பிறக்குமடா வெள்ளைப்பூத்தான், ஆவான்விதற்குப்பேரிதுதானையா - வாரறிவார்திகைப்பூண்டை யவனிமீதில், மாவானமாக்கரைத்தமுதந்தன்னை-வகைபெறவேநலமாகச்சொல்லக்கேளே. (௨௫)

இ ர ச க் க ட் டு.

கேளையாவன்பாகப் புலத்தியாநீ-கெவுனமென்ற ரசக்குளிகை கெவுனநன்று, ஆளையாபின்சொன்ன வைஞ்சாங்காண்ட-மதின்முடி

ந்தமாணிக்கக் கன்மாளாமன், மாளையாமாக்கரைத்த திராவகந்தான் மகத்தானவெடியுப்பை யதனிற்போட்டு, பாளையாகெவுனமென்ற கெவுனவித்தை-பரிபாடைபகர்தரநீ யின்னுங்கேளே. (௨௬)

இன்னங்கே ளினமறிந்து சொல்வேனையா-வெடுத்தமுறைதப்பாது குருவின்வாக்யம், அன்னங்கேள்வெடியுப்புப் பாறையுப்பா-மைந்ததினுனமுப்பூவுமுடிந்துபோச்சு, இன்னங்கேண் முன்சொன்னகுருவைநீதானினிதாகசசொலலிவிட்டேனந்திலேகாணவன்னங்கேளவெடியுப்பை யதனிற்போட்டே-வளமாகததீயறிப்பாய் சாமந்தானே. (௨௭)

சாமந்தா னெரித்தாக்காற்கட்டிப்போகுஞ்- சாற்றரியமாக்கெவுனகுளிகைதானும், வாமந்தான்வைத்துவைத்துப் பூசிப்பாய்நீ வங்கப்பேபாறகட்டி மிகச்சிவந்துகாணும், நாமந்தான்சொல்லிவிட்டேனெளிக்குவில்லை - நலமானவெடியுப்பே சிலவுப்பாகும், மர்மமாச்சொல்லாமல் மறைத்தார்சித்தர் - பரமானகணேசன்றுண்மகிமைகேளே. (௨௮)

கேண்மூலாதாரவிநா யகன்றனுண்மைக் - கோமாம்பூரணத்தைக்கூறவனபா, நீண்மறுவினின்மலமா நிறைந்தசோதி-நிகரிலலாவைங்கோணங் கணேசனவீடு-வாண்மிககவோவட்டமைங்கோணந்தான்-வலலண்பமாதிருககு மோங்காரவீடு,கோண்மிகையறமொருவிருமொருதிரிகோணத்திற் - குறேறுஉறேறு இறேறுவென வட்சரத்தைமாறே. (௨௯)

மாறவே யெழுத்ததனைச் சொல்லக்கேளு-மகத்தான்வைங்கோணமஞ்சுங்கேளு, ஏறுவாய்சுந்தரமே ஓங்ரீங்கென்றே-யேறி ஸ்ரீங்கிறீங் அறிங்கொன்றான்றுவாய்நீ ஆறுவாயைங்கோணவடிதன மூலமாறியப்போகிறு தவணிமேதே, கீறுவாய்கணபதியின் சக்கரத்தைக்-கேசரத்தின் மூலமதை யடைந்திடாயே. (௩௰)

அடைத்திடுவாயட்சரங்கள் பிசகாமற்று னடைவாகத் தூபதீபாதிதந்தே, எடுத்துமல்லலட்சமுரு செபித்தாயாகிலென்னசொல்வேன்கணபதிதான் பிரகாசிப்பான், மடைத்தனமாத்திரியாதே சொல்லக்கேளு-மகத்தானவல்லபையும் பிரகாசிப்பான்,கொடுத்திடுவாள்வல்லபைநீகேட்டதெல்லாவரங்களையுமா தலினுறபூசிப்பாயே.

பூசிமூலாதார சுழினையெட்டிப்-புகழாகக் கும்பித்தான் மவுனஞ்சித்தி, வாசியையுங்கென்று நீதம்பித்தக்கால்- வாமூலாங்கோடியுகம்வாதஞ்சித்தி, பூசைசெயினங்கோணஞ்சித்தியாகும் புகலரியமுதல்சேவைதெரிந்துக்கொண்டே-கூசாமறகும்பித்துததம்பித்தக்காற் கோடானகோடியும் மிருக்கலாமே. (௩௨)

ஆருமேயோகமதுபார்க்குநாளி - லாதாரசக்கரத்தினரையைக்
கீறி-ஒருமேயோங்காரத்திரிகோணத்கி-லொருமித்துப்பிற கொன்
றும் வாராதுன்றி, காருமேகற்பூரதீபசோதி கடாட்சிப்பாள் சக்க
ரத்தைப்பூசிப்பாய்நீ-வாருமேவாசியைநீ யிழுத்துவாங்கி-மகத்தா
னமனக்கண்ணுலெர்ட்டிப்பாரே. (கங)

பாரேநீகேசரத்தின் சோதிகாணு-பருதியுடன் றெறிசித்தே
யப்பாற்பாரு-ஓரேநீசகணபதியின்மூலஞ் சொன்னேனொருமையுட
ன்புலத்தியனே யறிந்துபாரு-வரேநீபரப்பிரம சொரூபமூலம்-வரி
சைபெறநாதக்கடம் மகிமையாலே, பாரேநீபதினெண்பேர்சித்தர்
மெய்க்கப்-பாடுமிக்காண்டத்தினது மகிமைதானே. (கச)

சுவாதிட்டானம்.

மகிமைபெற பரிபாடை யைந்தாங்காண்ட-வண்பொருளைப்பே
ரரிவா லறிந்துதேறே, மகிமைமிகுகுண்டலியின் மூலங்கேளு-மாசி
ல்லாதிட்டான குரியைப்பாரு, நகலிலுயர்நாற்கோணமிகுகோணந்
தா-நலமான முக்கோணமொன்றேவட்டம்தகைமைபெறுநாகரத்தி
ன்மேலேபோடு-சாற்று ஙங் மங் ஸ்ரீங் அங்மறிங்கென்றுங்கே. ()

ஆரவேநாற்கோண மடைவாப்போகிட்டக் கோணத்தட்சரங்
கட்கம்மிலேய-பூரணமா வீரிரண்டட்சரத்தைப்போடு - புகல்பெரிய
விந்துவிலேயங்கென்றூன்று, நீரென்றநிற்குணத்தைநிராமயத்தை-
நேயமாயோகத்திற்பூசிப்பாய்நீ, வாரென்றவாசியைநீயிழுத்துவாங்
கி-வடகலையிற்பார்த்துமெல்லச் சாதிப்பாயே. (கசு)

சாதியாம்வாசியைநீவரவழைத்துச்-சதகோடியுகமளவும்யோக
ம்பாரு, ஏதிலரோவுனேவெல்லார்சித்தர் வெல்லா-ரென்மகனே சுந்
தரமேயின்னங்கேளு, ஆதியிலேதீப தூபாதிதந்தே - யடைவாக
விலட்சமுருசெபித்தாயேலப், போதுநின்கண்ணெதிரேசாற்றவொ
ண்ணுப்-புகழ்பெரியசோதியதுகாணுந்தானே. (கஎ)

ம ணி பூ ர க ம்.

தானேதானுற்கோணமன்றேசித்தி - தகைபெருநாலெழுத்து
களுமடைவாச்சித்தி சேனேதான்கேட்ட தெல்லாமீவார்பாரு-மகத்
தான பூரகத்தின் வண்மைகேளு-வானேதான்ரகத்தின்மூலமையா
வண்மையாதாவரைநடுவேகீரக்கேளே. (கஅ)

